2017 பெப்ரவரி 08
புதன்
விலை: 20/-

ஹிஜ்ரி 1438 ■ ஜ.அவ்வல் பிறை 10 ■ பக்கங்கள் 12 ■ மணி 03 ■ ஒளி 023

NAVAMANI DAILY
நவமணி දිනපතා
# நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்
QD / 154 / NEWS / 2017







பலஸ்தீன் விவகாரம் இரட்டை வேடம் போடும் நல்லாட்சி 04»

சிரிய சிறையில் 13,000 எதிர்ப்பாளர்களுக்கு தூக்கு 10»

12» அஞ்சலோ மெத்தியூஸின் நிர்ணய விலை 2 கோடி

## சந்திரிகாவிடம் 1 பில்லியன் நஷ்டஈடு கோரும் நாமல்



தனது டுபாய் வங்கிக் கணக்கில் ஒரு பில்லியன் டொலர் இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்திருப்பது குறித்து அவருக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

11 »»»»

## கூட்டாக அழுத்தம் கொடுத்தால் பிரச்சினைகளுக்கு தீர்வு



### முஸ்லிம் தூதுக் குழுவிடம் சந்திரிகா

முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கும் கல்வி, சட்டமும் ஒழுங்கு, அரசாங்க தொழில்வாய்ப்பு மற்றும் இடம் பெயர் முஸ்லிம்களது மீள்குடியேற்றம் உட்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாகச் செயற்பட்டு அரசுக்கு அழுத்தம் கொடுப்பதன் மூலமே தீர்வு பெறலாம் என முன்னாள் ஜனாதிபதியும் தேசிய ஐக்கிய மற்றும் நல்லிணக்கத்துக்கான

11 »»»»

## கஃபாவில் தற்கொலை செய்யமுயன்றவர் கைது



புனித கஃபதுல்லாஹ்வுக்குள் தன்னை தீமூட்டி தற்கொலை செய்துகொள்ள முயற்சித்த ஒருவரை, பாதுகாப்பு படையினர் பாதுகாத்துள்ளனர். திங்களன்று இரவு 11 மணி அளவில் தன் உடல்

11 »»»»

## அமைச்சர் நீக்கிய மைத்திரிக்கு ஜனாதிபதி புது பதவி

இலங்கை கனிய மணல் கூட்டுத்தாபனத்தின் தகுதிவாய்ந்த அதிகாரியாக சட்டத்தரணி மைத்திரி குணரத்ன நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

11 »»»»

## சைடம் கல்வி நிறுவனம் ஒருபோதும் நிறுத்தப்படாது

### ஸ்தாபக தலைவர் டாக்டர். நெவில்



■ ஆதில் அலி சப்ரி

தெற்காசிய தொழில்நுட்ப மற்றும் மருத்துவ நிறுவனத்தை ஜனாதிபதி, பிரதமர், சுகாதார அமைச்சர் ஆகியோர் ஆதரிப்பதாகவும், இதனால் சைடம் கல்வி நிறுவனத்தை ஒருபோதும் நிறுத்தப்போவதில்லை என்றும்

11 »»»»

## சைடம் துப்பாக்கிச் சூடு





### 2 பொலிஸ் குழுக்கள் விசாரணை

11 »»»»

## தமிழ் மொழி மூல பட்டதாரி ஆசிரியர்களை தென்மாகாணத்தில் நியமியுங்கள்

### சந்திரிகா வேண்டுகோள்

தென் மாகாணத்தில் தமிழ் மொழி மூலம் பட்டதாரி ஆசிரியர்களை சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தென் மாகாண சபையின் கல்வி அமைச்சர் சந்திம ராசபுத்திரவுக்கு நேற்று பணிப்புரை வழங்கினார்.

11 »»»»

## உள்ளூராட்சி தேர்தல் குறித்து இன்று முக்கிய அறிவிப்பு



மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் பைஸர் முஸ்தபா மற்றும் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய ஆகியோருக்கிடையே எல்லை

11 »»»»

## கேப்பாபிலவு மக்களின் பிரச்சினைகளை ஆளும் கட்சி கூட்டத்தில் றிஷாத் முன்வைப்பு

### எழுத்து மூலம் தருமாறு ஜனாதிபதி வேண்டுகோள்



முல்லைத்தீவு கேப்பாபிலவு மக்களின் காணிப்பிரச்சினையையும் புதுக்குடியிருப்பு மக்களின் காணிப் பிரச்சினையும் அவசரமாக தீர்த்து வைக்குமாறு ஜனாதிபதியிடம் அமைச்சர் றிஷாத் பதியுதீன் கோரிக்கை விடுத்தார்.

11 »

## திவுலபிட்டிய மணல் அகழ்வு பாராளுமன்றில் சர்ச்சை

■ அ.அருண் பிரசாந்த்

11 »»»»




## தகவல் அறியும் சட்டம் பொதுமக்களை அறிவுறுத்த ஆர்.ரி.ஐ. பஸ் சேவை

■ ஆதில் அலி சப்ரி

தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பாக பொது மக்களை விழிப்பூட்ட பல செயற்றிட்டங்களையும், பல்வேறு நாடுகளிலும் நடைமுறைப்படுத்தப்படும் ஆர்.ரி.ஐ பஸ் திட்டத்தையும் ஆரம்பித்துள்ளதாக டிரான்ஸ்பெரன்ஸி இன்டநெஷனல் ஸ்ரீ லங்கா தகவல் அறியும் சட்டமூல முகாமையாளர் சங்கித குணரத்ன தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் தகவல் அறியும் பொதுமக்கள் உரிமைச் சட்டத்தை மக்கள் மத்தியில்

11 »»»»

## மேற்கு கரை குடியிருப்பு விவகாரம் சர்ச்சைக்குரிய சட்டம் இஸ்ரேலில் நிறைவேற்றம்

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை பகுதியிலுள்ள குடியிருப்புகளில்



11 »

## குடிவரவு, குடியகல்வு சட்டத்தில் கடுமையான நடைமுறைகள் தேவை

### ஞானசார தேரர் வலியுறுத்து

■ ஆதில் அலி சப்ரி

இலங்கையின் குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டதிட்டங்களை மீள்பரிசீலனைக்குட்படுத்தி சட்டங்களை கடுமையாக்குவதற்கான தேவை யேற்பட்டுள்ளதாக பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர்

11 »»»»

## சூரிய ஒளி மின்உற்பத்திக்காக சமுத்திர மின்கம்பித் திட்டம்

■ அ.அருண் பிரசாந்த்

11 »»»»

## தொல்லியல் பெறுமான ஸ்தலங்களை பாதுகாக்கும் பணிகள் ஆரம்பம்

வடக்கில் தொல்லியல் பெறுமானம் கொண்ட ஸ்தலங்களையும் கலாசார மரபுரிமைகளையும் பாதுகாக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தெரிவித்தார்.

முப்பதாண்டுகால போர்ச்சூழலை அடுத்து வடபகுதியில் சீரான அபிவிருத்தியொன்றை ஏற்படுத்துவதற்கு இன்றைய அரசாங்கம் பல்வேறு திட்டங்களை முன்னெடுத்துள்ளது. அந்த அடிப்படையில் 2017 ஆம் ஆண்டில் தேசிய நல்லிணக்கத்தையும் வடபகுதியிலுள்ள கலாசார மரபுரிமைகளையும் தொல்லியல் பெறுமானம்கொண்ட வழிபாட்டுத் தலங்களையும் பாதுகாப்பதற்கு விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

வடக்கிலுள்ள தேசிய பெறுமானம்கொண்ட புராதன ஸ்தலங்கைளப் பாதுகாத்து அவ்விடங்களை சுற்றுலாப் பயணிகள் கண்டுகளிப்பதற்கு ஆவன செய்வதற்கு வடபகுதிக்குச் சிறப்பாயமைந்த பண்டிகைகளையும் கலாசார அம்சங்களையும் சமூகமயப்படுத்துவதும் இக்கருத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே இடம்பெற்று வருகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

# சுத்தமான குடிநீர் பெற்றுக்கொடுக்க இந்த ஆண்டு 300 பில்லியன் ஒதுக்கீடு

(பேருவளை நிருபர்)

நாட்டு மக்களுக்கு சுத்தமான குடிநீரை பெற்றுக்கொடுக்க இந்த வருடம் 300 பில்லியன் ரூபா நிதி செலவிடப்படவுள்ளதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இந்த நிதி மூலம் நாட்டின் பல பகுதிகளிலும் 25 புதிய நீர் வழங்கல் திட்டங்கள் ஆரம்பிக்கப்படும் என்றும் ஜனவரி மாதம் 6 நீர் வழங்கல் செயற்றிட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதாகவும் நீர் விநியோக வரலாற்றில் இவ்வாறான பாரிய செயற்றிட்டங்கள் ஆரம்பிக்கப்படுவது இதுவே முதல் தடவை என்றும் அவர் மேலும் கூறினார்.

167 மில்லியன் ரூபா செலவில் ஏற்படுத்தப்பட்ட ஹோமாகம ஹபரகட ரணால நீர் வழங்கல் விஸ்தரிப்பு திட்ட ஆரம்ப நிகழ்வில் பேசும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார். இத்திட்டத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரதம அதிதியாக கலந்துகொண்டு தொடங்கி வைத்தார்.

அமைச்சர் ஹக்கீம் இங்கு மேலும் கூறியதாவது,

1000 லீற்றர் நீரை சுத்திகரிப்பதற்கு நீர் வழங்கல் சபைக்கு 48 ரூபா செலவாகிறது



என்றாலும் அதனை மக்களுக்கு 12 ரூபாவிற்கே விநியோகம் செய்கின்றோம். ஒரு லீற்றர் நீர் போத்தலை 50 ரூபாவுக்கு விலை கொடுத்து மக்கள் வாங்குகின்றனர். 48 ரூபா செலவிட்டு சுத்திகரிக்கும் சுத்தமான 1000 லீற்றர் நீரை 18 ரூபாவுக்கு வழங்க முற்படுகையில் ஊடகங்கள் வாயிலாக அதற்கு பாரிய எதிர்ப்புப்பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இது ஆரோக்கியமானதல்ல, சிறிய விலை அதிகரிப்பை பெரிதுபடுத்தி பிரசாரம் செய்கின்றனர். 20 ரூபா கொடுத்து பணிஸ் ஒன்றையும் 55 ரூபா கொடுத்து சிகரட் ஒன்றையும் வாங்குகின்றனர். நீர் வழங்கல் வடிகாலமைப்புசபை 100 லீற்றருக்காக 6 ரூபா விலை அதிகரிப்பையே மேற்கொள்ள திட்டமிட்டது. இதையே பெரிதாக பிரசாரம் செய்து எதிர்ப்பினை தெரிவிக்கின்றனர். 45 சதவீதமான மக்களே குழாய் நீர் வசதியைப்பெற்றுள்ளனர். 55 சத வீதமானவர்களுக்கு குழாய் நீர் வசதி கிடையாது. சிறிய விலை அதிகரிப்பின் மூலமாக மேலும் மக்களுக்கு சுத்தமான நீர் வசதியை பெற்றுக்கொடுப்பதே எமது நோக்கமாகும்.

கொழும்பு மாவட்டத்தில் மிகப் பெரிய தேர்தல் தொகுதியான ஹோமகம பகுதியில் அரச ஊழியர்கள் காணி வாங்கி வீடமைத்து குடியேறுகின்றனர். இந்த வீடுகளுக்கு சுத்தமான நீர் அவசியமாகும். மக்கள் தொகை கூடுலாக உள்ள இத்தொகுதி பாரிய அளவில் முன்னேற்றம் கண்டு வருகிறது. இந்த அபிவிருத்தியுடன் அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படல் வேண்டும் என்றார்.

அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸி மாகாண சபை அமைச்சர் காமனிதிலகசிறி உட்பட மற்றும் பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.



இம்முறை பல்கலைக்கழகம் தெரிவான மாணவர்களுக்கான பல்கலைக்கழக இணையத்தள விண்ணப்ப படிவம் பூர்த்தி செய்தல் மற்றும் தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு அண்மையில் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில், சம்மாந்துறை முபோ நெனசலவின் பணிப்பாளர் சக்கி முஹம்மட் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் வளவளாராக கலந்துகொண்ட சுகாதார அமைச்சின் தகவல் தொடர்பாடல் பிரிவு உத்தியோகத்தர் சில்மி ஆரிபின் மாணவர்களுக்கு விளக்கமளிப்பதையும், கலந்து கொண்ட மாணவர்களையும் படத்தில் காணலாம். (கியாஸ் ஏ. புஹாரி)

# தென்கிழக்கு பல்கலை ஊழியர்கள் நேற்று அடையாள பணிப்பகிஷ்கரிப்பு

(அஸ்லம் எஸ்.மௌலானா, எம்.வை.அமீர்)

தென்கிழக்குப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை ஒரு நாள் அடையாளப் பணிப் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஊழியர்களின் மாதாந்தக் கொடுப்பனவு, ஒய்வூதியம், சம்பள முரண்பாடு போன்ற பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வு தரப்பட வேண்டும் எனக்கோரி, தென்கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் அழைப்பின்பேரில் இப்பகிஷ்கரிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதுடன் கல்வி சாரா ஊழியர்கள் அனைவரும் ஒலுவில் வளாகத்தில் கூடி அமைதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அங்கு சங்கத்தின் தலைவர் எம்.எம்.முபாரக் கருத்து தெரிவிக்கையில்;

'அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்கச் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நாட்டிலுள்ள சகல பல்கலைக்கழகங்களிலும் கல்விசாரா ஊழியர்கள் அனைவரும் கடந்த வருடம் ஜூலை மாதம் மேற்படி கோரிக்கைகளை முன்வைத்து தொடர் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வந்தனர். கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வழங்கிய வாக்குறுதியை தொடர்ந்து அப்போதைய பணிப்பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டிருந்தது.

அதேவேளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு மேற்படி கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு கோரி 2017ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத்திட்ட நிதியில் 460 மில்லியன் ரூபாய் ஒதுக்கிடு செய்யப்பட்டது. இந்த நிதி இவ்வருடம் ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தும், இதுவரை அந்தப்பணம் விடுவிக்கப்படாமல் இழுத்தடிப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

இதன் காரணமாகவே மீண்டும் பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் தீர்வு கிடைக்காத பட்சத்தில் நாட்டிலுள்ள அனைத்து பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களும் தொடர்ச்சியான பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.



## கல்முனை மஹ்மூத் கல்லூரி மாணவி ஷைரீன் தேசிய ரீதியில் முதலிடம்!



கொழும்பு இஸ்பத்தனா கல்லூரியினால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட மீலாத் விழா ஆங்கில மொழி பேச்சு போட்டியில் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி மாணவி பாத்திமா ஷைரீன் இனாம் மௌலானா- முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளார்.

தெஹிவளை டீ.எஸ்.ஜெயசிங்க மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற மீலாத் பரிசளிப்பு விழாவில் இம்மாணவிக்கு இதற்கான சான்றிதழ் வழங்கப்பட்டு, தங்கப் பதக்கம் சூட்டி கௌரவிக்கப்பட்டார்.

கடந்த 2015 ஆம் ஆண்டு தேசிய மீலாத் விழாவை முன்னிட்டு கல்வி அமைச்சு மற்றும் முஸ்லிம் சமய, கலாசார திணைக்களம் என்பன இணைந்து நடத்திய ஆங்கில மொழி மூல பேச்சுப் போட்டியில் கிழக்கு மாகாண மட்டத்தில் முதலிடத்தையும் தேசிய மட்டத்தில் இரண்டாமிடத்தையும் இவர் பெற்றிருந்தார்.

இவர், கல்முனை கடற்கரைப்பள்ளி வீதியைச் சேர்ந்த இனாம் ஷக்காப் மௌலானா- அப்துல் கனி மஜ்மலா தம்பதியரின் புதல்வி என்பது குறிப்பிடத்தக்கது.

# சிறந்த ஆட்சியாளரை தேர்ந்தெடுத்த பெருமை பொலன்னறுவை ரோயல் கல்லூரிக்கே சேரும்

## முதலமைச்சர் பேசல ஜயரத்ன

( கலாவெவ நிருபர்)

இந்நாட்டில் உயர்ந்த குணநலனும் , சிறந்த ஆட்சியாளருமான அரச தலைவர் ஒருவரை உருவாக்கிய பெருமையைக் கொண்ட பொலன்னறுவை ரோயல் கல்லூரி இந்நாட்டின் சிறந்த ஒரு பாடசாலையாக மாற்றமடைந்துள்ளது என வடமத்திய மாகாண முதலமைச்சர் பேசல ஜயரத்ன பண்டார தெரிவித்தார்.

பொலன்னறுவை ரோயல் கல்லூரியில் மாணவ தலைவர், தலைவிகளுக்கு பதவி இலட்சனை பதக்கம் அணிவிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முயற்சியின் பிரதிபலனாக இந்த அழகியல் தொழில்நுட்ப பீடம் எமக்கு கிடைக்கப்பெற்றது. அத்தோடு இந்த பாட சாலையில் கல்வி கற்ற எமது ஜனாதிபதி இந்த நாட்டை இதுவரை ஆட்சி செய்த அரச தலைவர்களில் முக்கிய இடத்தைப் பெறுகின்றார். ஒன்றுடன் ஒன்று



மோதிக் கொள்ளும் இரண்டு எதிர்கட்சிகளை ஒன்றிணைத்து அரசாங்கம் ஒன்றை அமைத்துள்ளார்.

அத்தோடு எமது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிறந்த தலைமைத்துவத்தை வழங்கி பொறுமையான முறையில் ஆட்சி நடாத்தி வருவதுடன் நாட்டை அபிவிருத்தி பாதையில் கொண்டு செல்வது எமது இந்த பொலன்னறுவை ரோயல் கல்லூரிக்கு மட்டுமல்ல இந்த பொலன்னறுவை மக்களுக்கும் பெருமை தருகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

## புதிய சம்பள ஒப்பந்தத்திற்கு உடரதல்ல மக்கள் ஆர்ப்பாட்டம்

(ஹட்டன் க.கிஷாந்தன்)

புதிய சம்பள ஒப்பந்தத்திற்கு மீண்டும் எதிர்ப்பை தெரிவிப்பதாக கோரி நானுஓயா உடரதல்ல தோட்ட தொழிலாளர்கள் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

உடரதல்ல தோட்ட தொழிலாளர்கள் அத் தோட்டத்தின் தொழிற்சாலைக்கு அருகாமையில் இவ் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது புதிய சம்பள ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தும், தோட்ட நிர்வாக செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் பதாகைகளை ஏந்தியவண்ணம், எதிர்ப்புக் கோஷங்களை எழுப்பிய வண்ணம் அத்தோட்ட தொழிலாளர்கள் சுமார் ஒரு மணி நேரம் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் தொழிலாளர்கள் 730 அடிப்படை சம்பளம் தோட்ட தொழிலாளிக்கு கிடைப்பதில்லை, 620 ரூபாய் சம்பளம் போதுமானது, மலையகத்தில் வறட்சி காலத்தில் கூட அரசிடம் இருந்து எந்தவித நிவாரணமும் கிடைப்பதில்லை, இந்த நிலையை மலையக அரசியல்வாதிகள் கவனத்தில் கொள்வதில்லை, சம்பள பேச்சுவார்த்தையின் பின் 18 கிலோ என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது போன்ற பதாதைகளை ஏந்தி நின்றமை குறிப்பிடத்தக்கது.



வெல்லம்பிட்டி சாராஸ் கார்டன் அஹதியத்துல் தாருஸ்ஸலாம் பாடசாலையின் 16ஆவது வருட விருது வழங்கும் நிகழ்வு கொழும்பு மருதானை டவர் மண்டபத்தில் நடைபெற்றபோது பிரதம அதிதியாக கலந்து கொண்ட அமைச்சர் பைசர் முஸ்தபாவிடமிருந்து அஹதியா பாடசாலையினால் வெளியிடப்பட்ட அல் ஹிலால் 2017 நினைவு மலர் முதற்பிரதியை சுயாதீன தொலைக்காட்சி சேவையின் முன்னாள் பணிப்பாளர் புரவலர் ஹாசிம் உமர் பெற்றுக் கொண்டார். அஹதிய்யா பாடசாலையின் அதிபர் மௌலவி ஏ. சனீர், சட்டத்தரணி அஸ்ரப் ரூமி ஆகியோர்கள் அருகில் காணப்படுவதையும் அஹதியாவின் உப அதிபர் ஜி.எப்.ஹஜிரீன் ஆசிரியர் குழாம் சார்பாக நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிப்பதையும் ஆசிரியர்களையும் படங்களில் காணலாம். **(படம் - காதிர்கான்)**



யாழ். ஒஸ்மானியா கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற எஸ்.எஸ்.டி.எப் அமைப்பின் வழிகாட்டல் நிகழ்வின் போது யாழ் எழுத்தாளர் எம்.எப். எம். இக்பால் கல்லூரியின் முன்னாள் உப அதிபர் வ.மகேந்திரராஜாவுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவிப்பதை படத்தில் காணலாம்.

### உத்தேச தேர்தல் சீர்திருத்தத்தில்

# தென்பகுதி சிறுபான்மையை பாதுகாக்கும் ஷரத்துக்களை உள்வாங்கவும்



(பி. முஹாஜிரீன்)

உத்தேச தேர்தல் முறைமை சீர்திருத்தத்தில் வடக்கு கிழக்குக்கு வெளியே வாழும் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவங்ளை பாதுகாப்பதற்கான ஷரத்துக்கள் உள்ளடக்கப்பட வேண்டுமென கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்தார்.

தொகுதிவாரி மற்றும் விகிதாசார தேர்தல் முறைமை இணைந்ததான தேர்தல் முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டாலும் விகிதாசார தேர்தல் முறைமையின் கீழ் கிடைக்கப்பெற்ற ஆசனங்களின் எண்ணிக்கையில் மாற்றங்கள் ஏற்படக் கூடிய அச்ச நிலைமை சிறுபான்மையினர் மத்தியில் உள்ளதை உணரக்கூடியதாக உள்ளதாக முதலமைச்சர் மேலும் கூறினார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

கலப்பு தேர்தல் முறைமையின் ஊடாக தேர்தல் நடத்தப்பட்டாலும் அங்கு தொகுதிவாரியான தேர்தல் முறைமைக்கு அமைய அதிக ஆசனங்கள் வழங்கப்படும் பட்சத்தில் பெரும்பான்மையினரின் பகுதிகளில் வசிக்கும்

சிறுபான்மையினரின் வாக்குகள் சிதறடிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளது. எனவே ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் ஒவ்வொரு பிரஜையினதும் வாக்குரிமை முக்கியமானது என்பதுடன் அனைவரினதும் அரசியல் உரிமைக்கும் உரிய பெறுமதி அளிக்கப்பட வேண்டும்.

சிறுபான்மையினர் பெரும்பான்மையாக வசிக்கும் பகுதிகளில் உள்ள மக்களை திருப்திபடுத்துவதன் ஊடாக ஒட்டுமொத்த சிறுபான்மை சமூகத்துக்கும் நியாயமான தேர்தல் முறைமையொன்றை உருவாக்கியதாக அர்த்தம் கற்பிக்க முடியாது என்பதால் அரசாங்கம் இந்த விடயங்ளை மிக அவதானமாக கையாள வேண்டும்.

தேர்தல் முறைமைத் திருத்தம் என்பது ஒரு சமூகத்தின் எதிர்கால அரசியல் இருப்பை தீர்மானிக்கும் விடயம் என்பதால் இதனை எந்வொரு தரப்புக்கும் சிறு பாதிப்புக் கூட ஏற்படாத வகையில் உருவாக்குவதன் ஊடாக நல்லாட்சி அரசாங்கம் சிறுபான்மையினரின் நல்லெண்ணத்தை வென்றெடுக்க ஏதுவாக அமையும் எனவும் அவர் கூறினார்.

வடக்கு கிழக்குக்கு வெளியே வாழும் சிறுபான்மையினரின் வாக்குகள் வீணடிக்கப்படாமல் அந்த மக்களின் வாக்குக்கு பெறுமதி அளிக்கப்பட்டு அவர்களின் அரசியல் தேவைகளையும் பூர்த்திசெய்ய பிரதிநிதியொருவரை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட வேண்டும். அது மாத்திரமன்றி பெரும்பான்மையினரின் பகுதிகளில் வசிக்கும் சிறுபான்மையினரின் விகிதத்திற்கு ஏற்ப வெட்டுப்புள்ளிகள் குறைக்கப்பட்டு சிறுபான்மையினருக்கு அநீதி இழைக்கப்படாத வகையிலான தேர்தல் முறை உருவாக்கப்படவேண்டும் என்றார்.

## 2017 இல் சுற்றுலா பயணிகள் அதிகம்

2017 ஆம் ஆண்டின் முதல் மாதத்தில் சுற்றுலா பயணிகளின் வருகை 12.9 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்தது.

2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஒரு இலட்சத்து 94 ஆயிரத்து 280 சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருகைதநதனர்.

இந்த நிலையில் 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இரண்டு இலட்சத்து 19 ஆயிரத்து 360 சுற்றுலா பயணிகள் இலங்கை வந்துள்ளதாக சுற்றுலா அதிகார சபை தெரிவித்தது.



# விமலுக்கு மீண்டும் விளக்கமறியல்; ஆதரவாளருக்கு 18 மாத சிறை



(பா.மலரம்பிகை)

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்சவின் வழக்கு நேற்றையதினம் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது இவரை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதவான் நீதிபதி உத்தரவிட்டார்.

அரச வாகனங்களை முறைகேடாக பயன்படுத்தியமை தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக சென்றபோது நிதிக் குற்றப்புலனாய்வு பிரிவினரால் விமல் வீரவன்ச ஜனவரி மாதம் 10 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டார்.

பொறியியல் சேவைகள் வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சராக இருந்த காலப் பகுதியில் ஜனாதிபதி செயலகத்திற்கு சொந்தமான பல்வேறு வாகனங்களை தவறாக பயன்படுத்தியதாக விமல் வீரவன்ச மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டதோடு, இதன்மூலம் 41 மில்லியன் ரூபா இழப்பு அரசாங்கத்திற்கு ஏற்பட்டதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன்படி பிணைக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட நிலையில் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**விமலின் ஆதரவாளர் ஒன்றரை வருட சிறையில்**

பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவின் வழக்கு விசாரணையின் போது நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் செயற்பட்ட நபருக்கு ஒன்றரை ஆண்டு சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. கோட்டை நீதவான் லங்கா ஜயரட்ன இந்த உத்தரவை இட்டார்.

பொது ஊழியரை தடுத்தல் மற்றும் நீதிமன்றை அவமதித்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சந்தேகநபருக்கு எதிராக நேற்றையதினம் பொலிஸார் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தனர்.

சந்தேகநபரான சுதேஷ் பிரேமலால் தன் மீதான குற்றச்சாட்டுக்களை ஒப்புக் கொண்டார் எனவே, சந்தேகநபருக்கு ஒன்றரை வருட சிறை தண்டனை விதித்து நீதவான் தீர்ப்பளித்துள்ளார். பொது ஊழியரை தடுத்தமைக்கு 6 மாத சிறையும் 1000 ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டதுடன், நீதிமன்றை அவமதித்த குற்றச்சாட்டுக்காக ஒரு வருட சிறை தண்டனை விதித்து நீதவான் தீர்ப்பளித்தார்.

விமல் வீரவன்ச தொடர்பான வழக்கு கடந்த மாதம் 24 ஆம் திகதி கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைகளுக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது அங்கு வருகைத்தந்திருந்த விமல் வீரவங்சவின் ஆதரவாளர் ஒருவர், வீடமைப்பு நிர்மாணத்துறை பிரதியமைச்சர் லசந்த அழகியவண்ணவையும் பொறியியற் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் ஆசு மாரசிங்கவையும் கைதுசெய்யுமாறு உரத்துக் கூறினார்.

இதனையடுத்து நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் குறித்த நபர் கைதுசெய்யப்பட்டதோடு, நேற்றைய தினம் ஒன்றரை வருட சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில் புற்றுநோய் தொடர்பில் சுவீடன் மருத்துவ குழு உதவி

இலங்கையில் புற்றுநோய் கூடுதலாக வியாபித்திருப்பதற்கான காரணங்களைக் கண்டறிவதில் இலங்கைக்கு சுவீடனின் மருத்துவ நிபுணர்கள் குழுவொன்று உதவவுள்ளது.

இந்தக் குழுவினர் இலங்கை வந்து சோதனைகளை நடத்த உள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்தது.

மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையுடன் இணைந்து சோதனைகள் நடத்தப்படும். இதில் இரத்தப்புற்று பற்றி கூடுதல் கவனம் செலுத்தப்படுமென சுகாதார அமைச்சு மேலும் சுட்டிக்காட்டியது.







பேருவளை சீனன் கோட்டை அல் ஹுமைஸரா தேசிய பாடசாலையில் 2 கோடி 50 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள மூன்று மாடிகளைக் கொண்ட புதிய கட்டிடத்துக்கான அடிக்கல் நடும் வைபவம் அதிபர் எம்.ஆர்.எம் றிஸ்கி தலைமையில் நேற்று நடைபெற்றது. மேல் மாகாண சபை உறுப்பினர் இப்திகார் ஜெமீல் மரிக்காரின் பெரு முயற்சியால் கல்வி அமைச்சும் இதற்கான நிதியை ஒதுக்கியுள்ளது. கல்வி இராஜாங்க அமைச்சர் இராதா கிருஷ்ணன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு அடிக்கல் நாட்டிவைத்தார். மேல் மாகாண சபை உறுப்பினர் இப்திகார் ஜெமீல், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எம்.அஸ்லம், சீனன் கோட்டை பள்ளிச்சங்க தலைவர் றாமிஸ் ஏ.கபூர், பிரதித் தலைவர் எம். எஸ். எம். துகைன், இணைச் செயலாளர்களான எம்.எம்.ஷிஹாப், அரூஸ் அனஸ், பிரதேச சபை முன்னாள் தலைவர் ஏ.ஆர்.எம்.பதியுத்தீன், நகர சபை முன்னாள் உப தலைவர் ஹஸன் பாஸி, வலயக் கல்விப் பணிப்பாளர் ஸ்ரீலால் விக்ரம ஆராச்சி, பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.இல்யாஸ், பாடசாலை அபிவிருத்திச் சங்க உப தலைவர் எம்.இஸட்.எம்.ஸவாஹிர், செயலாளர் மிஸ்வர் காஸிம் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

(படங்கள்- பேருவளை நிருபர் பீ எம் முக்தார்)

## வானொலி அரச விருது ஜனாதிபதி தலைமையில்

இலங்கையின் முதலாவது வானொலி அரச விருது வழங்கும் விழா எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கொழும்பு தாமரைத் தடாக கலை அரங்கில் நடைபெறவுள்ளது.

இம்முறை 25 துறைகளில் மும்மொழிகளிலும் விருதுகள் வழங்கப்படவுள்ளதோடு, மூத்த ஒலிபரப்பாளர்கள் செல்வி எஸ்.நாதன், விஜே கொரியா, பிரபா ரணதுங்க ஆகியோர் சிறப்பு விருது வழங்கி கௌரவிக்கப்படுவர் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஓ.எல். செயன்முறை பரீட்சைக்கு 2465 மத்திய நிலையங்கள்

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் செயன்முறை பரீட்சைகள் எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் மார்ச் 8 ஆம் திகதி வரை நடைபெறும் என பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யு. எம்.என்.ஜே.புஸ்பகுமார தெரிவித்தார்.

இச்செயன்முறை பரீட்சைக்கு 2465 மத்திய நிலையங்களில் 8000 பேரளவில் மேற்பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

மேலும் நடனம், சங்கீதம், நாடகக் கலை ஆகிய பாடங்களுக்கான செயன்முறைப் பரீட்சை இடம்பெறுவதோடு, இதற்கு ஓர் இலட்சத்து 70 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

இதுதொடர்பில், ஏதேனும் விபரங்கள் தேவைப்படின் பாடசாலை பரீட்சை ஒருங்கிணைப்பு மற்றும் முடிவுகள் சபையின் தொலைபேசி இலக்கமான 0112784208, 0112784537, 0113188350, 0113140314 ஆகிய இலக்கங்

## இலங்கை ஆண்களில் அதிகமானோர் முகவாய் புற்றுநோயால் பாதிப்பு

**வைத்திய நிபுணர் பராக்கிரம விஜேகோன்**

(மாத்தளை எம்.எஸ்.எம்.மஸாஹிம்)

இலங்கை ஆண்களில் அதிகமானோர் முகவாய்ப்புற்று நோயினால் பாதிக்கப்பட்டுவருவதாக முகவாய் புற்றுநோய் சம்பந்தமான விசேட சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் பராக்கிரம விஜேகோன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

தெற்காசிய நாடுகளில் அதிகளவில் முகவாய் புற்றுநோயாளர்கள் காணப்படுவதோடு, நாட்டின் 25 வீதமான ஆண்கள் முகவாய் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். மதுபானம், புகைத்தல் மற்றும் வெற்றிலை, பாக்கு,புகையிலை சாப்பிடுவது, இந்நோய் ஏற்பட ஏதுவான காரணிகளாக அமைகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

# கடல் அலையிலிருந்து விரைவில் மின் உற்பத்தி



இலங்கையின் மின்உற்பத்தி துறையில் புதிய பாதையை நோக்கிய பயணமாக கடல் அலையில் உபயோகிக்கப்படக் கூடிய நீர்மின் உற்பத்தியை அறிமுகப்படுத்த முழு ஆதரவையும் வழங்குவதற்கு பின்லாந்து தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் அனைத்து நடவடிக்கைகளையும் நடைமுறைப்படுத்த இலங்கைக்கான பின்லாந்து தூதுவர் ரௌலி சௌக்கானன் தெரிவித்தார்.

நேற்று பின்லாந்து தூதுவருக்கும் மின்சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவிற்கும் மின்சக்தி அமைச்சில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

நாடு கடலால் சூழப்பட்டுள்ளது. அதனால் எவ்வாறான இடையூறும் இல்லாமல் கடல் அலைகளிலிருந்து மின் உற்பத்தியை மேற்கொள்ளலாம். இதனால் புதிய தொழில்நுட்ப முறையினை பயன்படுத்தி குறைந்தபட்ச விலையில் உற்பத்தி செய்யப்படும். அதேநேரம், வரட்சிக் காலநிலையிலும் எவ்வித இடையூறும் இல்லாது மின்சாரப்பிரச்சினைகளுக்கு இதன்மூலம் தீர்வு கிடைக்கும் என்றும் மின்சக்தி அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

## தேசிய உடற்பயிற்சி வாரம்

### பாடசாலை மட்டத்தில் இன்று ஆரம்பம்

மக்களை தொற்றா நோய்களிலிருந்து பாதுகாக்கும் நடவடிக்கையை மேம்படுத்த தேசிய உடற்பயிற்சி வாரம் பாடசாலை மட்டத்திலும் வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

அந்தவகையில், பாடசாலை மட்டத்தில் உடற்பயிற்சி வாரத்தை முன்னெடுப்பதற்கு அனைத்து பாடசாலைகளிலும் உடற்பயிற்சி நாளாந்தம் நடைபெறுவதற்கு அறிவித்தல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

எனவே, இன்றையதினம் காலை 7.30 மணியளவில் நாட்டின் அனைத்து பாடசாலைகளிலும் உடல் ஆரோக்கிய வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளதோடு, பாடசாலை மட்டத்தில் தேசிய உடல் ஆரோக்கிய பிரசார வாரம் இன்றையதினம் 7.30 மணியளவில் பம்பலப்பிட்டிய பொலிஸ் மைதானத்தில் மிலாகிரிய சென் போல்ஸ்; வித்தியாலம், கொழும்பு சிறிமாவோ பண்டாரநாயக்க வித்தியாலயம், கொழும்பு இஸிபதன வித்தியாலயம், கொழும்பு லும்பினி வித்தியாலயம், ராமநாதன் இந்து கல்லூரி மற்றும் முஸ்லிம் மகளிர் கல்லூரியிலுள்ள மாணவ மாணவிகள் 2000 பேர் அளவில் பங்குபற்றவுள்ளனர்.




ஹனிபா ஹோட்டல்
Main Street, Kalmunai
Tel: 067 2221925 / 077 4864371
குளிர்பானங்கள், சிற்றுண்டிகள், கேக் வகைகள், தினசரி, வாராந்த, மாதாந்த, தமிழ், ஆங்கில, சிங்கள பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள்
தினசரி கல்முனை – கொழும்பு பஸ் ஆசனப் பதிவுகள்,
தொலைபேசி மீள் நிரப்பு அட்டைகள்

NAVAMANI DAILY
நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
08TH FEBRUARY 2017 - WEDNESDAY

# அரச ஊழியர்களுக்கு சிரிப்பதற்கு கற்றுக்கொடுக்க வேண்டுமா?

இலங்கையில் அரச உத்தியோகத்தர்கள் 15 இலட்சம் பேர் உள்ளனர். இவர்களில் பலர் அரச நிறுவனங்களுக்கு சேவைகளைப் பெற்றுக்கொள்ள வருபவர்களை எதிரிகள் போன்றே சிலர் பார்க்கின்றனர். இவர்களுக்கு முதலில் சிரிப்பதற்கு கற்றுக்கொடுக்க வேண்டும் என்று கணக்காய்வாளர் நாயகம் காமினி விஜேசிங்க சமீபத்தில் தெரிவித்துள்ளார்.

வரி செலுத்தும் மக்களுக்கு பொறுப்புக்கூறுவதற்கு நிதி வெளியீடுகளை வழங்குவதன் முக்கியத்துவம் குறித்து, அரச கணக்காய்வாளர்களுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வில், நேற்று முன்தினம் (06) உரையாற்றும்போதே, அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

உண்மையில், இந்தக் கருத்து மிகவும் முக்கியமான ஒன்றாகும். ஏனெனில், பெரும்பாலான அரச நிறுவனங்களுக்குச் செல்லும் வாடிக்கையாளர்கள், அங்கு பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றனர். அரச நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள், சேவைநாடிகளுக்கு கடுமையான தொனியில் ஏசுவதும், சீறிப்பாய்வதும் அரச நிறுவனங்களின் பொது இயல்பு போன்று ஆகிவிட்டுள்ளது.

இவ்வாறான நிலையில், அரச நிறுவனங்களில் பணியாற்றுவோருக்கு, முதலில் சிரிப்பதற்குக் கற்றுக்கொடுக்க வேண்டும் என்பது மிகவும் சரியான, பொருத்தமான கருத்துத்தான். அரச உத்தியோகத்தர்களுக்குப் பொறுப்பான திணைக்களங்களும், அமைச்சும் இது குறித்து சிந்திக்க வேண்டும்.

இலங்கை அரச நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள் அடிப்படையான ஒரு விடயத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். அதுதான் அவர்களது மனநிலை மாற்றத்துக்கு அடிப்படையாக அமையும்.

அதாவது, அரச தொழில்களில் ஈடுபடுவோர் பெறும் சம்பளம், சும்மா ஊற்றெடுக்கும் பணமல்ல. மாறாக, இந்த நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் வழங்கும் வரிப் பணத்திலிருந்தே அரச உத்தியோகத்தர்களுக்கான சம்பளம் வழங்கப்படுகின்றது என்பதை அரச உத்தியோகர்கள் மனங்கொள்ள வேண்டும்.

எனவே, அரச நிறுவனங்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்ள வரும் பொதுமக்கள், சும்மா இலவசமாக சேவைகளைப் பெற்றுக்கொள்ள வருவதில்லை என்பதை அரச உத்தியோகத்தர்கள் நினைவில் கொள்ள வேண்டும். ஒவ்வொரு பொதுமகனும் வரிப் பணம் செலுத்தி, ஒவ்வொரு அரச உத்தியோகத்தரது சம்பளத்துக்கும் பங்களிப்பு வழங்கிவிட்டே, சேவைகளைப் பெற்றுக்கொள்ள வருகின்றான்.

எனவே, அரச உத்தியோகத்தர்கள் தம்மிடம் சேவைகளைப் பெற்றுக்கொள்ள வரும் நபர்களுடன் மிகவும் இங்கிதமான முறையில் நடந்துகொள்ள வேண்டும். முகம் சுளித்தவாறு, சீறிப்பாய்வதனால், எவருக்கும் எந்தப் பிரயோசனமும் கிடைப்பதில்லை. மாறாக, அவ்வாறு செயற்படும் அரச உத்தியோகத்தர்கள் மனஅழுத்தத்துக்கு உட்படுவதும், சேவைநாடி வரும் பொதுமகன் கோபமடைவதும் மாத்திரமே நிகழ்கின்றது.

அரச உத்தியோகத்தர்களின் இந்நிலையை மாற்றுவதற்கு அரச தரப்பிலிருந்தும் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியுள்ளன. அதாவது, அரச உத்தியோகத்தர்களின் மனோநிலையை மிகவும் இங்கிதமாகவும், சௌகரியமாகவும் வைத்துக்கொள்வதற்கான உத்திகளை அரசு கையாள வேண்டும்.

இப்போது உலகெங்கிலும் மிகவும் வேகமாக உருவாகி வரும் சிறுதொழில் முனைவு நிறுவனங்கள், தம்மிடம் பணிபுரியும் நபர்களை எப்போதும் நல்ல மனநிலையிலும், சந்தோசமாகவும், இங்கிதமாகவும் வைத்துக்கொள்வதற்கு, அவர்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தி வைத்திருக்கின்றன.

அலுவலக அறையை மிகவும் கவர்ச்சிகரமாக வைத்தல், அலுவலக உணவு அறையை மிகவும் சுத்தமாக வைத்தல், அலுவலக சுவர்களுக்கு மிகவும் இதமான நிறங்களிலான பூச்சுக்களைப் பூசுதல், களைப்படையும்போது ஓய்வெடுப்பதற்கு வசதியான பெரியளவு பஞ்சு கதிரைகள் என்று பல்வேறு வசதிகளை, சிறு தொழில்முனைவு நிறுவனங்கள், தமது பணியாளர்களுக்கு ஏற்படுத்தி வைத்துள்ளன.

இவ்வாறான சூழலில் வேலை செய்வோர் கோபமடைவதும், சீறிப்பாய்வதும், கடுமையான தொனியில் பேசுவதும் மிகவும் குறைவாகும். அரசும் இந்த உத்தியைக் கைக்கொண்டு, அரச உத்தியோகத்தர்களை நெறிப்படுத்தவும், வழிப்படுத்தவும் வேண்டும்.

எம்.ஏ. முஹம்மட் உவைஸ்

இஸ்ரேலின் கோரப் பிடிக்குள் சிக்கி சீரழிந்து கொண்டிருக்கும் பலஸ்தீனை மீட்டெடுப்பதற்காக பலஸ்தீன மக்கள் 65 வருடங்களுக்கும் மேலாக போராடி வருகின்றனர். இந்த போராட்டத்தில் உயிரிழப்புகள், சொத்து இழப்புகள், இடம்பெயர்வுகள் என ஏராளமான இழப்புகளை அவர்கள் சந்தித்து வருகின்றனர். இந்தப் போராட்டத்தின் இறுதி வெற்றியை அடைவதற்காக, பலஸ்தீன் மண்ணை முற்றாக மீட்டெடுப்பதற்காக, மீள்குடியேற்றத்தை உறுதிப்படுத்துவதற்காக, உலக முஸ்லிம்களின் நிலங்கள் அனைத்தும் விடுவிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளை முன் வைத்தே இஸ்ரேலுடன் பேச்சுகளை நடத்தியது. அந்த நிபந்தனைகளை இஸ்ரேல் ஏற்க மறுத்ததாலும் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும்போதே, பலஸ்தீனின் நிலங்கள் இஸ்ரேலால் அபகரிக்கப்பட்டுக் கொண்டு இருந்ததால் பதாஹ் பேச்சுவார்த்தையிலிருந்து வெளியேறி ஹமாஸுடன் இணைந்து தேசிய அரசை உருவாக்கியது.

அதன் பிறகே ஹமாஸ் - இஸ்ரேலுக்கு இடையிலான 51 நாள் யுத்தம் இடம்பெற்று முடிந்தது. அந்த யுத்தம் இடம்பெற்றுக் கொண்டிருந்த காலப்பகுமித்து இஸ்ரேல் நிர்மாணித்து வரும் சட்டவிரோதக் குடியேற்றங்களை உடன் நிறுத்த வேண்டும் என்பதே அந்தப் பிரேரணையாகும்.

இஸ்ரேல் என்ற நாடு பலஸ்தீன மண்ணில் சட்டவிரோதமாக உருவாவதற்கு காரணமாக இருந்த, பலஸ்தீன் விவகாரம் தொடர்பில் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இஸ்ரேலை ஐ.நா. சபையில் காப்பாற்றி வந்த அமெரிக்காகூட இந்தப் பிரேரணையிலிருந்து இஸ்ரேலை காப்பாற்றவில்லை. அதன் வீட்டோ அதிகாரத்தை அப்படியே வைத்துக் கொண்டது.

ஆனால், இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயம், இது தொடர்பிலான இலங்கை அரசின் நிலைப்பாடு... லத்தில் அமைக்கப்படும் இஸ்ரேலின் சட்டவிரோத குடியிருப்புக்கு எதிரான ஐ.நாவின் பிரேரணை மீதான வாக்கெடுப்பில் ஏன் இலங்கை கலந்துகொள்ளவில்லை?

ஐ.நாவில் இஸ்ரேலைக் காப்பாற்றுவதுபோல் செயற்பட்டுவிட்டு பாலஸ்தீனில் வைத்து பலஸ்தீனுக்கு ஆதரவுபோல்-இஸ்ரேலை எதிர்ப்பதுபோல் இந்த அரசு காட்டிக்கொள்கிறது. இலங்கை அரசு முஸ்லிம்களை ஏமாற்றும் போலி நாடகத்தைக் கைவிட வேண்டும். பலஸ்தீன் தொடர்பான இலங்கை அரசின் உறுதியான நிலைப்பாட்டைத் தெரிவிக்க வேண்டும்.

# பலஸ்தீன் விவகாரம்; இரட்டை வேடம் போடும் நல்லாட்சி



முதலாவது கிப்லாவான அல்-அக்ஸா பள்ளிவாசலை மீளக் கைப்பற்றுவதற்காக, அரசியல் ரீதியாகவும் ஆயுத ரீதியாகவும் பலஸ்தீன மக்கள் போராடி வருகின்றனர்.

பலஸ்தீனின் இரு பிரதான அரசியல் கட்சிகளான பதாஹ்வும் ஹமாஸும் இந்தப் போராட்டத்தை நெறிப்படுத்தி வருகின்றன. பலஸ்தீனின் தேசிய அரசை உருவாக்கி செயற்படும் இந்த இரு கட்சிகளுள் ஹமாஸ் ஆயுத மற்றும் அரசியல் போராட்டத்தை முன்னெடுக்க, பதாஹ் அரசியல் ரீதியான போராட்டத்தை முன்னெடுத்து வருகிறது.

பதாஹ் கட்சி சர்வதேச மத்தியஸ்தத்துடன் இஸ்ரேலுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி அவற்றின் ஊடக இஸ்ரேலால் கைப்பற்றப்பட்ட பலஸ்தீன நிலங்களை மீட்டெடுக்க முயற்சிகளை எடுத்து வருகின்றது. பல சுற்றுப் பேச்சுகளை இஸ்ரேலுடன் நடாத்தியும் உள்ளது.

2014 இல் பதாஹ்வும் ஹமாஸும் இணைந்து தேசிய அரசை நிறுவுவதற்கு முன் பதாஹ் அமெரிக்காவின் மத்தியஸ்தத்துடன் இஸ்ரேலுடன் பல சுற்றுப் பேச்சுகளை நடத்தியது. கிழக்கு ஜெரூஸலத்தை தலைமையகமாகக் கொண்ட சுயாதீன பலஸ்தீனம் உருவாக்கப்பட வேண்டும், 1967 இற்கு முன்பிருந்த பலஸ்தீனம் உருவாக்கப்பட வேண்டும், 1967 இற்கு பிறகு இஸ்ரேலால் கைப்பற்றப்பட்ட பலஸ்தீன தியில் கூட பதாஹ் கட்சி பலஸ்தீனை மீட்கும் காய் நகர்த்தல்களை செய்து கொண்டிருந்தது.

அதன் ஒரு பகுதியாக பலஸ்தீன் நிலத்தை விடுவிப்பதற்கு அரபு லீக்குடன் இணைந்து இஸ்ரேலுக்கு காலக் கெடுவொன்றை விதிக்கும் நடவடிக்கையில் பதாஹ் இறங்கியது. அதன்படி, 1967 ஆம் ஆண்டில் இருந்து இப்போது வரை இஸ்ரேல் கைப்பற்றியுள்ள பலஸ்தீன நிலங்கள் அனைத்தையும் மூன்று வருடங்களுக்குள் மீள ஒப்படைக்க வேண்டும் என்றொரு பிரேரணையை பதாஹ் கட்சி முன்வைத்தது.

அதன் அடிப்படையில் இஸ்ரேல் தமது நிலங்களை தம்மிடம் ஒப்படைக்காவிட்டால் இஸ்ரேலுக்கு எதிராக பரந்துபட்ட அரசியல் யுத்தம் முன்னெடுக்கப்படும் என்றும், சர்வதேச நாடுகள் இஸ்ரேலை முற்றாகப் பகிஷ்கரிப்பதற்கான செயற்பாடுகள் முடுக்கிவிடப்படும் என்றும் பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து மீண்டும் ஒரு பிரேரணை கடந்த ஐ,நாவின் பாதுகாப்பு சபைக்குக் கொண்டு வரப்பட்டு அது நிறைவேற்றப்பட்டது. பலஸ்தீன் நிலத்தை ஆக்கிரபாடு என்னவென்பதுதான். பிரேரணை மீதான வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமல் இலங்கை மெதுவாக நழுவிக்கொண்டது. இந்த நிலைப்பாடு இலங்கை முஸ்லிம்களை கவலையடையச் செய்தது. இந்த அரசின் இரட்டை நிலைப்பாடு-போலி வேஷம் அம்பலமானது.

மஹிந்த ஆட்சி இலங்கை முஸ்லிம்களுக்கு எதிராக இருந்தபோதிலும், மஹிந்த ஒருபோதும் பலஸ்தீனத்துக்கு எதிராக இருந்ததில்லை. ஆரம்பம் முதல் அவர் பலஸ்தீன் ஆதரவாளராகவே இருந்து வருகின்றார். 2012 இல் பலஸ்தீனுக்கு ஐ.நாவில் பார்வையாளர் அந்தஸ்து கிடைத்தது. அதற்காக ஐ.நாவில் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட பிரேரணைக்கு ஆதரவாக மஹிந்த அரசு வாக்களித்தது. பலஸ்தீனுக்கு பார்வையாளர் அந்தஸ்து கிடைப்பதை ஆதரித்தது.

ஆனால், இந்த அரசு பலஸ்தீன் விவகாரத்தில் இரட்டை நிலைப்பாட்டுடனேயே செயற்படுகின்றது. இஸ்ரேலை பகைத்துக்கொள்வதற்கு ரணில் விரும்பவில்லை. ஆனால், மஹிந்தவோ துணிச்சலுடன் இஸ்ரேலை எதிர்த்து பலஸ்தீனை ஆதரித்து வந்தார். மஹிந்த இலங்கை முஸ்லிம்களுக்கு செய்த அநியாயத்தை எதிர்க்கின்ற நாம், அவர் பலஸ்தீனுக்கு செய்த நல்லவற்றை ஆதரித்தே ஆகவேண்டும்.

ஆனால், இந்த அரசு இலங்கை முஸ்லிம்களும் தேவை, இஸ்ரேலும் தேவை என்ற நிலைப்பாட்டில் கழுவுகின்ற நீரில் நழுவுகின்ற மீனாக செயற்படுவதை அவதானிக்க முடிகின்றது. பலஸ்தீனின் ரமல்லா நகரில் அமைந்துள்ள, பலஸ்தீனுக்கான இலங்கை தூதரகத்தில் இடம்பெற்ற இலங்கையின் 69 ஆவது சுதந்திர தின நிகழ்வில் கலந்துகொண்ட இலங்கை தூதுவர், பலஸ்தீன விடுதலையை ஆதரிப்பதாகவும் அதற்கான சர்வதேச நிகழ்வுகள் அனைத்துக்கும் இலங்கை ஆதரவு வழங்கும் என்றும் கூறியுள்ளார்.

இது இலங்கை அரசின் இரட்டை நிலைப்பாட்டையே வெளிப்படுத்துகின்றது. பலஸ்தீனின் விடுதலையை ஆதரிப்பது உண்மையென்றால், ஜெரூச இது தொடர்பில் மஹிந்தவைப்போல் மிகவும் துணிச்சலுடன் தனது நிலைப்பாட்டை பிரதமர் ரணில் விக்ரமசிங்க வெளிப்படுத்த வேண்டும் என்று இலங்கை முஸ்லிம்கள் விரும்புகின்றனர்.

இஸ்ரேல் கைப்பற்றிய நிலங்களில் யூத குடியிருப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. இஸ்ரேலிய தொழிற்சாலைகள் நிறுவப்பட்டுள்ளன. யூதர்கள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இஸ்ரேலின் பொருளாதார வளர்ச்சிக்கான பெரும் பங்களிப்புகள் இந்த நிலங்களில் இருந்துதான் பெறப்படுகின்றன. மறுபுறம் இந்த நிலங்களின் சொந்தக்காரர்கள் இந்த நிலங்களிலேயே இஸ்ரேலின் அடிமைகளாக பணிபுரியும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இவ்வாறானதொரு பொருளாதாரக் கட்டமைப்பை, யூத குடியிருப்புகளை சிதைத்து விட்டு அந்த நிலங்களை பலஸ்தீனிடம் இஸ்ரேல் மீள ஒப்படைக்கும் என்பது கனவிலும் நடக்காத ஒன்று. அவற்றைக் கைப்பற்ற பலஸ்தீன மக்கள் இன்னும் போராட வேண்டும்.

பலஸ்தீன நிலத்தில் யூத நாடொன்றை உருவாக்கும் திட்டம் பல வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட சதித் திட்டங்களின் விளைவாக 1947 ஆம் ஆண்டு நிறைவேறியது. பலஸ்தீன மக்களுக்கே தெரியாமல், அவர்களிடம் கேட்காமல் ஐ.நா. பலஸ்தீனின் 55 வீத நிலத்தை யூதர்களுக்கு பறித்துக் கொடுத்தது. அது போதாது என்று அன்றிலிருந்து இன்று வரை யூதர்கள் பலஸ்தீன் நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டே வருகின்றனர்.

யூதர்களால் பறிக்கப்பட்ட பலஸ்தீன நிலத்தில் 1948 மே 14 ஆம் திகதி சியோனிச தலைவர் டேவிட் பென் குரியனால் இஸ்ரேல் நாடு பிரகடனப்படுத்தப்பட்டது. மறு நாளே யூதர்கள் சுமார் 500 பாலஸ்தீன கிராமங்களுக்குள் புகுந்து 7 லட்சம் முஸ்லிம்களை வெளியேற்றி அந்த நிலங்களைக் கைப்பற்றினர். அதே காலப் பகுதியில் பல நாடுகளில் இருந்து 7 லட்சம் யூதர்கள் வரவழைக்கப்பட்டு அந்த நிலங்களில் குடியமர்த்தப்பட்டனர். அன்று முதல் பலஸ்தீன மக்களின் போராட்டம் தொடர்கின்றது.

NAVAMANI WEEKLY
நவமணி

## வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சினைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். உங்கள் மனக் குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன்மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல : 96, கிருல வீதி, கொழும்பு – 05
தொலைபேசி : 011-5353635 பெக்ஸ் - 011-5335500
ஈமெயில் : pccsl@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk

# நிகழ்வுகள்

## தப்லீஃக் இஜ்திமா மாநாடு

(மினுவாங்கொடை நிருபர்)

மினுவாங்கொடை வட்டாரத்திற்கான தப்லீஃக் இஜ்திமா மாநாடு, (10) வெள்ளிக்கிழமை மாலை அஸர் தொழுகையைத் தொடர்ந்து இரவு இஷா தொழுகை வரை, மினுவாங்கொடை - கல்லொழுவை, ஜும்ஆப் பள்ளிவாசல் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. ஏக்கல, கல்லொழுவை, மினுவாங்கொடை, கோப்பிவத்தை, கோவின்ன ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த தப்லீஃக் ஜமாஅத் சகோதரர்கள் கலந்து கொள்ளும் இம்மாநாட்டில், பிரபல உலமாக்கள் மற்றும் அறிஞர்கள் பலர் மார்க்க சொற்பொழிவுகளை நிகழ்த்தவுள்ளனர்.

## எதிர்ப்புப் பேரணி

(மினுவாங்கொடை நிருபர்)

கொழும்பில் சேரும் குப்பைக் கூளங்களை, ஏக்கல பிரதேசத்திலுள்ள காணியொன்றில் கொட்டுவது தொடர்பில், அரசாங்கம் எடுத்துள்ள முடிவினை ஆட்சேபித்து, மாபெரும் கண்டனப் பேரணியொன்று ஏக்கலவில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

'கொழும்பு குப்பைகள் ஏக்கலைக்கு வேண்டாம்' என்ற தொனிப் பொருளில், (09) வியாழக்கிழமை காலை 8 மணிக்கு, ஏக்கல சந்தியில் ஆரம்பமாகும் இவ்வெதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை, ஏக்கலவில் அமைந்துள்ள மக்கள் நலன்புரி அமைப்பொன்று, ஏக்கல பிரதேச வாழ் மக்களுடன் இணைந்து ஏற்பாடு செய்துள்ளது.

கடந்த பல வருட காலமாக, கொலன்னாவ குப்பை மேடு தொடர்பில், அரசாங்கத்திற்கும் அப்பிரதேச வாழ் மக்களுக்கிடையிலும் பல தரப்பட்ட சர்ச்சைகள் ஏற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டுபோட்டி

(வெலிகம நிருபர்)

வெலிகம கபுவத்தை அந்நூர் மகா வித்தியாலயத்தின் இவ்வருடத்துக்கான (2017) இல்ல விளையாட்டுப் போட்டி இன்றும் நாளையும் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் 'சிட்னி' மற்றும் 'ஓவல்' ஆகிய இரு இல்லங்களைச் சேர்ந்த மாணவர்கள் போட்டியிடுகின்றனர். இறுதி நாள் பரிசளிப்பு வைபவம் வித்தியாலய அதிபர் எம்.எச்.எம். நவாஸ் தலைமையில் நாளை நடைபெறவுள்ளது. இதில் தென் மாகாண சபை உறுப்பினர் சதுர கலப்பத்தி பிரதம அதிதியாக கலந்து கொள்வதோடு, பிரதேச அரசியல் வாதியான அக்ரம் நாஸரும் கலந்து கொள்கிறார். மேலும் கல்விப் பணிப்பாளர்கள் பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

# இன, மத பேதமின்றி செயற்பட்டால் 70ஆவது சுதந்திர தினம் கோலாகலமாகும்

## பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார்



இன மத பேத கொள்கைகளை புறந்தள்ளிவிட்டு எல்லோரும் இலங்கையர்கள் என்ற பரந்த சிந்தனையோடுசெயற்பட்டால் அடுத்தவருடம் எமது 70ஆவது சுதந்திர தின கொண்டாட்டத்தை இதைவிட சிறப்பான முறையில் கோலாகலமாகக் கொண்டாடலாம் என கொழும்பு பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

கொலன்னாவை கித்தம்பஹுவ பிரதேசத்தில் உள்ள களனி கங்கை விளையாட்டுக் கழகத்துக்கு 150,000 பெறுமதியான விளையாட்டு உபகரணங்களை கையளித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

1948க்கு முன் அந்நிய சக்திகளிடம் எமது நாடு அடிமைபட்டுக் கிடந்தது. நாம் பிளவுபட்டிருந்தமையே அதற்கு காரணம். சிங்கள மகா சபை என்று ஒன்றிருந்தது. அதேபோல் தமிழ் சபை சோனகர் சங்கம் என வெவ்வேறு அமைப்புக்கள் இருந்தன. நாம் இன ரீதியிலும் மத ரீதியிலும் பிளவுபட்டிருந்ததால் எம்மை அடிமைப்படுத்த அவர்களுக்கு வசதியாக இருந்தது.எமது பிளவை அவர்கள் தமக்கு சாதகமாக்கி எமது நாட்டை தமது அடிமை நாடுகளில் ஒன்றாக வைத்திருந்தனர்.

1946 முதல் 1948 வரையான காலப் பகுதியில் இந்தப் புரிதல் மேலும் வலுவடைந்தது. இதன் காரணமாக சகலரும் இந்த தாய் நாட்டில் பிறந்து இதே பூமியில் மரணம் அடைபவர்கள் என்பதை உணர்ந்து பேதங்களைமறந்து ஒற்றுமைபட்டனர்.

69ஆவது சுதந்திரதினத்தை கொண்டாடும் போது ஒரு விடயத்தை நாம் கவலையுடன் நினைவுகூர வேண்டியுள்ளது. கடந்தகாலங்களில் மக்களை சமய ரீதியாகவும் இன ரீதியாகவும் நாம் பிரித்து வைத்துள்ளோம் என்பதே அந்த கவலைக்குரிய விடயமாகும். 70ஆவது சுதந்திரத்தை கொண்டாட இந்தநாடு எஞ்சியிருக்குமா? என்று மஹிந்த ராஜபக்ஷ கூறுகின்றார். இன்று நான் ஒரு முஸ்லிமாக இருந்து கொண்டு முதற் தடவையாக கொலன்னாவையில் சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய சகல தரப்புக்கும் தலைமை தாங்க என்னால் முடிகின்றது.

பௌத்த மதகுருமாருடன் மிகவும் ஒத்துழைப்போடு பணியாற்றுகின்றேன். மஹிந்த ராஜபக்ஷ பதவியில் இருந்தால் நிச்சயம் இது சாத்தியமாகியிருக்காது. பிளவுபட்டு எமது இலட்சியங்களை நாம் இழந்துவிட முடியாது. இலங்கையர்களாக நாம் ஒன்றிணைந்து உலகை வென்ற ஒருதேசத்தின் மக்களாக மாற வேண்டும். மஹிந்த ஆட்சி காலத்தில் தமிழ், முஸ்லிம், சிங்கள முரண்பாடுகளை அவர்கள் தோற்றுவித்தனர்.

அவர்கள் அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ள இவ்வாறு செய்தனர். ஆனால் எல்லோரும் அதைஏற்றுக் கொள்ளவில்லை. இந்த நாட்டை உலகை வென்ற நாடாக ஆக்க வேண்டும் என்பதுதான் மக்களின் தேவையாக இருந்தது.

அன்று வெள்ளையனிடம் இருந்து சுதந்திரம் பெற எமது தலைவர்கள் அனைவரும் ஒன்றிணைந்ததைப்போல இலங்கையர்கள் என்ற வகையில் நாம் எல்லோரும் ஒன்றிணைந்தால் 70ஆவது சுதந்திரத்தை இதைவிட சிறப்பாக பெருமைக்குரிய ஒரு தேச மக்களாக நாம் எல்லோரும் கொண்டாடலாம் என்பதே எனது கருத்தாகும் - என்றார்.

## மண் அகழ்வில் ஈடுபட்ட 9 பேர் கைது

(திருகோணமலை அப்துல்சலாம் யாசீம்)

கிண்ணியா கண்டல் காட்டுப்பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மண் அகழ்வில் ஈடுபட்ட கிண்ணியாவைச் சேர்ந்த 9 பேரை உழவு இயந்திரங்களுடன் நேற்று கைது செய்துள்ளதாக கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட உழவு இயந்திரங்கள் பொலிஸ் நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ளதுடன் கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

## ஜனாதிபதி விசாரணைப் பிரிவின் பணிப்பாளராக ரூபன்

ஜனாதிபதி விசாரணைப் பிரிவின் பணிப்பாளராக ரூபன் விக்ரமாரச்சி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை மின்சார சபையின் விசாரணைப் பிரிவின் ஆரம்ப நிறுவனத் தலைவராக பணியாற்றிய விக்ரமாரச்சி, தனது 36 வருட சேவைக்காலத்தில் 35 வருடங்கள் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிலும் விசாரணைப் பிரிவிலும் தொடர்ச்சியாக எவ்வித குற்றச்சாட்டுக்களுமின்றி பணியாற்றிய அதிகாரியாவார். தான் ஓய்வுபெறும் வரை இலங்கை மின்சார சபையின் சேமலாப சங்கத்தின் செயலாளராக செயற்பட்ட இவர் அப்பொறுப்பில் தொடர்ச்சியாக 27 வருடங்கள் சேவைசெய்துள்ளார்.

அவரது சேவைக் காலத்தில் மின்சார மோசடிகள் தொடர்பில் ரூபா 58 கோடிக்கும் மேற்பட்ட நஷ்டத் தொகையை வருமானமாக ஈட்டிக் கொள்ள முடிந்துள்ளது. விசாரணையின் மூலம் நான்கு கோடி ரூபாவை அறவிடுவதற்கான நடவடிக்கைகளை விக்ரமாரச்சி மேற்கொண்டிருந்தார். இது சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பெற்றுக்கொண்டமை தொடர்பாக இதுவரையில் அறவிடப்பட்ட அதிகூடிய நட்டத்தொகையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் பண்டைய காலம் முதல் தற்காலம் வரையிலான மின்சாரத்தின் வரலாறு குறித்து எழுதியுள்ள அவர் பத்திரிகைகளில் தொடர்ச்சியாக எழுதிவரும் ஒரு பத்தி எழுத்தாளராவார். பிங்கிரிய ஸ்ரீ சரணங்கர மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவரான இவர், அப்பாடசாலையிலிருந்து பல்கலைக்கழக நுழைவைப் பெற்றுக்கொண்ட முதற் தொகுதி மாணவர் அணியைச் சேர்ந்தவராவார்.

ஏழு வருடங்களுக்கும் மேலாக இலங்கை மின்சார சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினராக பணியாற்றியுள்ள விக்ரமாரச்சி, களனிப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாவார். மேலும் அப்பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர் அமைப்பின் தேசிய அமைப்பாளருமாவார். விக்ரமாரச்சி பாதுகாப்பு அமைச்சின் அனுசரணையின் கீழ் உள்ள லங்கா லொஜிஸ்டிக் அன் டெக்னொலஜி நிறுவனத்தின் பணிப்பாளரும் ஆவார். இவர் மாளிகாவத்தை இஸ்லாமிய நிலைய நல்லிணக்க பிரிவின் அங்கத்தவருமாவார்.

## மாணவனை தாக்கிய ஆசிரியருக்கு மறியல்

(ஏறாவூர் ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

காத்தான்குடி மீராபாலிகா மகா வித்தியாலயத்தில் 3ஆம் தரத்தில் கல்வி கற்கும் ரி. ஸம்றி அஹமட் எனும் மாணவனை தாக்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஆசிரியரை நாளை வரை விளக்க மறியலில் வைக்குமாறு மட்டகளப்பு நீதவானும் மேலதிக மாவட்ட நீதிபதியுமான மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டார்.

கடந்த பெப்ரவரி முதலாம் திகதி வகுப்பாசிரியரான சேகுதாவூத் ரஸீட் என்பவர் பாடசாலை வகுப்பறையில் வைத்து தாக்கியதில் இந்த மாணவன் காயங்களுக்குள்ளான நிலையில் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வருகின்றார்.



மாணவனைத் தாக்கிய குற்றச்சாட்டின் பேரில் குறித்த ஆசிரியரை காத்தான்குடி பொலிஸார் தேடிய நிலையில் திங்கட்கிழமை காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார். இவரை பொலிஸார் நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.



அல் - ஹிக்மா சமூகசேவை நிறுவனத் தலைவர் அஷ்ஷெய்க் நூறுல்லாஹ் ஊடாக நாடளாவிய ரீதியில் மாணவர்களுக்கு பாடசாலைப் பொதிகள் வழங்கப்பட்டன. அவ்வகையில் சென்ற வாரம் அனுராதபுர மாவட்டப் பாடசாலை ஒன்றில் மாணவர்களுக்கு பாடசாலைப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டபோது எடுத்த படம்.

# முன்பள்ளி மாணவர்களுக்கு புத்தகப்பைகள் வழங்கல்

(எஸ்.எம்.அறூஸ் அட்டாளைச்சேனை)



தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் அனுசரணையுடன் மாவட்ட மீனவ பேரவை அட்டாளைச்சேனை பிரதேசத்திற்குட்பட்ட பின்தங்கிய அஸ்ரப் நகர் கிராமத்திலுள்ள முன்பள்ளி மாணவர்களுக்கு புத்தகப்பைகளை வழங்கியுள்ளது.

இது தொடர்பான நிகழ்வு நேற்றுமுன்தினம் மாவட்ட மீனவ பேரவையின் தலைவரும் சமூக சேவையாளருமான கே.இஸ்ஸதீன் தலைமையில் அஸ்ரப் நகரில் இடம்பெற்றது.

இங்கு தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் வட கிழக்கு இணைப்பாளர் ஏ,ஜேசுதாசன் பெண்கள் திட்ட இணைப்பாளர் லவீனா ஹசந்தி சட்டத்தரணி சம்பத்புஷ்பகுமார, தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் எஸ்.எம்.அறூஸ், கள உத்தியோகத்தர் கே.கோகுலன் மற்றும் அஸ்ரப் நகர் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டு மாணவர்களுக்கு புத்தகப் பைகளை வழங்கி வைத்தனர்.

# யாழில் தேங்காய்க்கு திடீர் தட்டுப்பாடு

(யாழ். பாறுக் ஷிஹான்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள பல சந்தைப்பகுதிகளில் தேங்காய்க்குத் திடீர் தட்டுப்பாடு நிலவுவதனால் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் குற்றம் சாட்டுகின்றனர்.

தேங்காய் தட்டுப்பாட்டைத் தொடர்ந்து ஒரு சில வியாபாரிகள் கிளிநொச்சி பளை தென்மராட்சி பகுதிகளில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு தேங்காய் எடுத்து வந்து அதிக விலையில் விற்பனை செய்கின்றனர்.

சிலர் இத் தட்டுப்பாட்டின் காரணமாக முட்டுக்காய் தேங்காய்களையும் விற்பனை செய்யும் நடவடிக்கையில் பலர் ஈடுபடுவதன் காரணமாக தாம் பாதிக்கப்படுவதாக நுகர்வோர் குற்றம் சாட்டுகின்றனர். தற்போது தேங்காய்களின் அளவுக்கேற்ப 40 ரூபாய் முதல் 60 ரூபாய் வரை வியாபாரிகள் தேங்காய்களை விற்பனை செய்கின்றனர்.

இது தொடர்பாக வியாபாரிகள் கருத்து தெரிவிக்கையில், 'கடந்த சில தினங்களாக சந்தைக்கு தேங்காய் வருவது சடுதியாகக் குறைவடைந்துள்ளது.

யாழில் அதிகமாகத் தேங்காய் விளையும் கொடிகாமம் பளை போன்ற பகுதிகளிலிருந்து வெளி மாவட்டத்தை சேர்ந்தவர்கள் தேங்காய்களை கொள்வனவு செய்து செல்வதே விலை வீழ்ச்சிக்குக் காரணம் இதனால் தான் தேங்காய் விற்பனையும் சடுதியாகக் குறைந்துள்ளது என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

## இறக்காமத்தில் களவுகள் அதிகரிப்பு

(இறக்காமம் நிருபர்)

இறக்காமம் பிரதேசத்திலுள்ள வீடுகளில் களவுகள் இடம்பெற்று வருவதாக குடியிருப்பாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசத்திலுள்ள இறக்காமம் வரிப்பாத்தான்சேனை குடிவில், வாங்காமம், மஜீத்புரம், அமீர்அலிபுரம், ஆகிய கிராமங்களிலுள்ள வீடுகளில் ஆண்கள் இல்லாத வேளையில் திருடர்கள் புகுந்து பணம் நகை போன்றவற்றை களவாடி வருகின்றனர். இது குறித்து தமணைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் வரிப்பத்தான்சேனை மஜீத் புரத்திலுள்ள ஆண்களில்லாத வீடுகளில் புகுந்த பணம், நகை என சுமார் 5 இலட்சம் ரூபாவை திருடிச்சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 'ஆரோக்கியத்தின் ஊடாக உலகை வெல்வோம்' செயற்பாட்டு வாரம் ஆரம்பம்

(ஏறாவூர் ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

ஆரோக்கியத்தின் ஊடாக உலகை வெல்வோம் எனும் தொனிப் பொருளில் விளையாட்டுத்துறை அமைச்சு செயற்படுத்தும் விளையாட்டு மற்றும் உடல் நல மேம்பாட்டு தேசிய வாரம் மட்டக்களப்பு ஏறாவூர் நகர பிரதேச செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டதாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் ஏ.எம். ஹனீபா தெரிவித்தார்.

ஆறு கட்டங்களாக இடம்பெறும் இந்த விளையாட்டு மற்றும் உடல் நல மேம்பாட்டு தேசிய வார நிகழ்வுகளில் முதல் தினமான திங்களன்று பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் சகல தரங்களிலுமுள்ள அதிகாரிகளுக்கும் அலுவலர்களுக்கும் தேகாரோக்கியப் பயிற்சியளிக்கப்பட்டதாக விளையாட்டு உத்தியோகத்தரும் பயிற்சியாளருமான எம்.எம்.எம். ஜெலீல் தெரிவித்தார்.

தொடர்ந்து ஆறு தினங்களுக்கு இடம்பெறும் இந்த விளையாட்டு மற்றும் உடல் நல மேம்பாட்டு தேசிய வார நிகழ்வுகளில் அலுவலர்கள், கர்பிணித் தாய்மார், சிறுவர்கள், முதியோர் மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கு விழிப்புணர்வூட்டப்படவுள்ளது.



இலங்கையின் 69 ஆவது சுதந்திரதினத்தையொட்டிய நிகழ்வுகள் மாளிகைக்காடு சபீனா முஸ்லிம் வித்தியாலயத்தில் அதிபர் எம்.ஐ.எம் அஸ்மி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தேசியக்கொடி ஏற்றப்படுவதையும், மாணவர்கள் மரியாதை செலுத்துவதையும் படங்களில் காணலாம்.




# மு.பொ. வின் 'சாங்கிலியன் தரை' ஒரு வெட்டுமுகம்

- கலைவாதி

''மு.பொ.'' எனும் ஆளுமையும் ஆற்ற லும் மிக்க இந்த எழுத்தாளர் அண்மையில் வெளியிட்ட நாவல்தான் ''சங்கிலியன் தரை''. தமிழ் ஆங்கிலம் இரண்டு மொழி களிலும் இலக்கியம் படைக்கும் ஆற்றல் மிக்க மு.பொன்னம்பலம், ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்து கொண் டிருந்த ''திசை'' எனும் பத்திரிகையின் ஆசி ரியராகவும் மிளிர்ந்தவர். திடமான கொள் கைவாதி. எதிர்ப்பிலக்கியவாதியும் கூட. நாவல், சிறுகதை, கவிதை, விமர்சனம், சிறுவர் இலக்கியம், ஆய்வு என்று இலக்கி யத்தின் எல்லாப் பிரிவுகளிலும் கை வைத்து வெற்றி கண்டவர்.

கிட்டத்தட்ட இருபது நூற்கள் வரை அச்சுவாகனம் ஏற்றியிருக்கிறார். அவற்றுள் "A Country Entrapped" என்ற ஆங்கில நூலும் உள்ளடக்கம். ''நோயில் இருத்தல்'' என்ற புகழ் பெற்ற நாவலுடன் காலிலீலை, சூத்திரர் வருகை, விலங்கை விட்டெழும் மனிதர்கள் போன்ற காத்திரமான கவிதை நூல்களையும் திறனாய்வு தொடர்பான பல நூல்களையும் தந்த வர். ''உண்மையில் எழுதல்'' என்ற நாடகத்தையும் நூல் வடிவமாக்கியுள்ளார். ஈழத்து இலக்கிய உலகைப் பொறுத்த வரை உண்மையில் இவ்வளவு நூல்களை வெளியிடுவது என் பது ஒரு மகத்தான சாதனைதான்.




மு.பொ. வைப் பொறுத்தவரை, இவர் புகழ், பட்டம், பதவி, பொன்னாடை, பொற் கிழி போன்றவற்றின் மீது பற்றோ, பாசமோ கொள்ளாத ஓர் அபூர்வ மனிதர் என்பது என் கணிப்பீடு.

இந்தப் பீடிகையை முன்னிறுத்தி இவர் எழுதிய ''சங்கிலியன் தரை'' என்ற நாவ லைப் பற்றி சுருக்கமான கருத்துக்கள் சிலவற்றை முன்வைக்க விரும்புகிறேன். சங்கிலியன் தரை நாவலின் கரு, விடுத லைப்போர் தொடர்பானதாகும். அதாவது இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெற்ற போர்க் கால சம்பவங்களை அடியொற்றியதாகும்.

எனவே, இந் நாவலை ஒரு போர்க்கால இலக்கியவகையில் சேர்க்கலாம்.

206 பக்கங்களைக் கொண்ட இந்நாவ லில் இரண்டொரு பாத்திரங்களே வரு கின்றன. இந்தச் சில கதாபாத்திரங்களை வைத்து ஒரு முழு நாவலையும், மு.பொ. விறுவிறுப்புக்குன்றாமல் நகர்த்திச் செல்லும் பாங்கு அலாதியானது. அத்தியாயங்களின் ஒழுங்கமைப்பு, சம்பவங்கள், உரையாடல் ஆகியவற்றை கன கச்சிதமாகக் கையாண் டுள்ளமையால் நாவல் தொய்வில்லாமல் நகர்ந்து செல்கிறது. நாகராசன், தமிழினி, மோகன், சின்னான், முரளி உட்பட வெகு சிலரைப் பாத்திரங்களாக்கி வடிவமைத்தி ருக்கும் பாங்கு சிறப்பானதே!

நாகராசன் விடுதலை இயக்கமொன்றின் மிக முக்கிய பொறுப்பாளர் பதவியில் இருப்பவன். அவன் மனைவி தமிழினி நாகராஜனுடன் ஓடிவந்த, உயர் குடும் பத்தைச் சேர்ந்த ஒரு பட்டதாரிப் பெண். மோகன் என்பவன் நாகராஜனின் மிக நெருங்கிய நண்பன் என்பதோடு, புரட்சி இயக்கத் தோழனும் கூட... சின்னான், முரளி என்பவர் களும் நாகராஜ னின் இயக்கத் தோழர்களே! இவர்களை சுற்றிப்படர்கிறது நாவல்.

அதேவேளை இலங்கையின் அரசியல் வர லாறு, அரசியல் தவறுகள், தமிழ் அரசியல் கட்சிகளின் நிலைப்பாடுகள், அவர்கள் விடு கின்ற தவறுகள், சிங்களத் தேசிய வாதத்தின் வெறித்தனமான நடவடிக்கைகள், புரட்சி இயக்கங்களும், அதன் பலமும் பலவீன மும், அவர்கள் விடுகின்ற தவறுகள், புரட்சி இயக்கத்தலைவர்களின் தான் தோன்றித்த னமான நடவடிக்கைகள், சிலரின் வக்கிர புத்திகள் போன்ற பல்வேறு முரண்பட்ட விடயங்களும் நாவலில் இழையோடிப் போயிருப்பதால் இந்நாவலை அரசியல் மயப்படுத்தப்பட்ட போர்க்கால இலக்கியம் எனலாம்.

இவ்வேளை, மக்கள் சீனத்தின் தந்தை, மா - ஓ - சேதுங் கூறிய ஒரு கருத்து (பொன் மொழி) ஞபாகத்துக்கு வருகிறது. **''அரசியல் என்பது ஆயுதம் ஏந்தாத யுத்தம்; யுத்தம் என்பது ஆயுதம் ஏந்திய அரசியல்''**

இந்த நாவலுக்கு, பேராசிரியர்கள், கலாநி திகள், மூத்த எழுத்தாளர்களைக் கொண்டு எழுதப்பட்ட அணிந்துரையோ, நயவுரை யோ, விதந்துரையோ ஏதும் இல்லை. மு.பொ. எழுதிய இரண்டு பக்க முன்னுரை மட்டுமே காணப்படுகிறது. அம்முன்னுரை யில் கருத்தியல் ரீதியான சில விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதில் சில விட யங்கள் மிக ஆழமானவை; யதார்த்தமான வை.

''நமது விடுதலைப்போராட்டம் தோல்வி யடைந்து துடைத்தெறியப்பட்டதாயிற்று.

அப்படியாயின் அது தேசிய ரீதியான சுய அர்ப்பணிப்பு, இல்லாததாக இருந்ததா? அல்லது எதிர்காலம்தான் அதற்குப் பதில் தருமா?

விடுதலைக்காகப் போராடும் மக்கள் முதலில் விடுதலை பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்று மகாயோகி அரவிந்தர் கூறியிருக்கிறார். அதன் அர்த்தம் என்ன?

சமயம், சாதி ஒடுக்குமுறை, அர்த்தமற்ற ஆசாரங்கள் என்ற தளைகளிருந்து நமது மக் கள் விடுதலை பெற்றிருந்தனரா? இல்லை! அது மட்டுமல்லாமல் விடுதலைக்காகப் போராடும் போராளிகளை, அவர்கள் விடும் பிழைகளை தட்டிக் கேட்கும் சுதந்திரம் உடையவர்களாக மக்கள் இருந்தார்களா? இல்லை''

''எங்கட பொடியன்கள் விடான்கள்'' என்று கதையளந்தவர்கள். பொடியனைத் தட்டிக் கேட்கும் திராணி உடையவர்களாக இருந்தார்களா?

**1915 இல் சிங்களவர்களால் முஸ்லிம்கள் தாக்கப்பட்ட போது, அவர்களைக் காப்பாற்றாது, பெரும்பான்மை இனத்திற்கு வக்காலத்து வாங்கி பெருமை தேடிக் கொண்டு பெரும் அபத்தம் புரிந்த பொன்னம்பலம் இராமநாதன் செய்த தற்கொப்பவே புலிகள் வட புலத்திலிருந்து முஸ்லிம்களை வெளியேற்றியது நிற்கிறது.**

இது துடைத்தெறியப்பட வேண்டிய களங்கம். மொத்தத்தில் பொன்னம்பலம் இராமநாதனிடமிருந்து ஆரம்பமாகும் பிழையான அரசியல்பார்வை, நாவலரின் மோசமான சாதி, சமயப்பார்வையோடு சங்கமித்து, இன்றுள்ள தமிழரசுக்கட்சியின் மிக மோசமான சந்தர்ப்பவாதமாகி, காந்தீ யத்தையே துஷ்பிரயோகம் செய்து, மாக்ஸி யப் பேராசிரியர்களால் இன்னொரு நலமெ டுப்புக்கு இரையாகி, எல்லாம் இழந்த நிலையில் நமது விடுதலைப் போராட்டம் நிற்கிறது- இவ்வாறு குமுறுகிறார் மு.பொ.

நாவலின் ஓரிடத்தில் இவ்வாறு வருகிறது.

ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ், அவர் களின் பிரித்தாளும் தந்திரத்தின் வழிவந்த அனுசரணையால் கிடைத்த கல்வியை நன்கு பயன்படுத்திக் கொண்ட யாழ்ப்பாணத்துத் தமிழன், தென்னிலங்கையின் அனைத்துத் திணைக்களங்களிலும் ஏதோ ஓர் இலிகிதர் வேலையில் குந்திக் கொண்டிருக்கும் பேறு பெற்றான்.

படிப்பைத்தவிர வருவாய்க்கு வேறு வழி யில்லை.

படிப்பென்றால் பெரிய படிப்பென்று சொல்லிக் கொள்வதற்கு அதில் ஒன்று மில்லை. ''கிளரிக்கல்'' உத்தியோகத்தைச் சரி வரக் கடைப்பிடித்து ''பென்ஷன்'' வாங் கிக் கொள்வதற்குத் தகுதி பெறும் படிப்பு.

இந்தத் தகுதியை வைத்துக் கொண்டுதான் சிங்களவரை ''மோட்டுச் சிங்களவன்'' என்று எள்ளி நகையாடினான். இவ்வாறு யாழ்ப்பாணத்துத் தமிழரின் கொள்கை, குணாதிசயங்கள் பற்றித் துணிச் சலாகக் கூறும் ஓர்மை மு.பொ. வுக்கு இருக் கிறது.

1990ஆம் ஆண்டு, தமிழீழ விடுதலைப் புலிகளால் அராஜகமான முறையில் வட புல முஸ்லிம்கள் அனைவரும் கூண்டோடு கைலாசமாய் விரட்டி அடிக்கப்பட்ட சம்பவத்தையும் இந்நாவல் உணர்ச்சி மயமா கக் கூறுகிறது.

இந்நாவல் பற்றி விதந்துரைக்க இன்னும் பல விடயங்கள் இருக்கின்றன. ஆயினும் விரிவஞ்சி தவிர்த்துள்ளேன். மொத்தத்தில் இலக்கிய ஆர்வலர்கள் அனைவரும் படிக்க வேண்டிய நாவல் இஃதாகும்.

முகவரி: புனையகம், 39, 36ஆம் ஒழுங்கை - கொழும்பு - 06

## ஆய்வாளர்களின் கவனத்திற்கு...!

கடந்த இரு வாரங்களாக, ஆக்க இலக்கியங்களைப்பற்றி ஆய்வுகள் மேற்கொள்ளும் பேராசிரியர்கள், கலாநி திகள் மற்றும் கல்விமான்கள், சிறுகதை கள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள் ளும்போது சேர்த்துக் கொள்ளப்பட வேண்டிய பழைய, புதிய சிறுகதாசிரி யர்களைப் பட்டியலிட்டிருந்தோம்.

இவ்வாரம் கவிஞர்களைப் பட்டியலி டுகின்றோம். இப்பட்டியலில் பதுருதீன் புலவர், நெய்னா முஹம்மதுப் புலவர், மன்னார் விதானைப்புலவர், நொண் டிப்புலவர் போன்ற பெரும்புலவர்க ளைத் தவிர்த்து 21ஆம் நூற்றாண்டின் நவீன கவிஞர்களின்(வரகவிகளல்ல) பெயரை மட்டுமே தர விழைகிறேன். சில பெயர்கள் தவறிவிடின் சுட்டிக்காட் டலாம்.

இப்பட்டியலில் குறைந்தது 15 கவி தைகளாவது பிரபல பத்திரிகைகளில் எழுதியிருப்போர் பெயர் மட்டுமே இடம் பெறுகிறது என்பதைக் கவனத்தில் கொள்க.

**முஹம்மது காசிம் ஆலிம் புலவர்**
**புலவர் மணி ஆ.மு. ஷரிபுதீன்**
**மகாவித்துவான் எம். ஏ. றஹ்மான்**
**புரட்சிக்கமால் (சாலி)**
**யுவன் (எம்.ஏ.கபூர்)**
**ஏ. இக்பால்**
**எம். ஏ. நுஃமான்**
**எம். எச். எம். அஷ்ரப்**
**பாவலர் பஸீல் காரியப்பர்**
**மருதூர்க் கொத்தன்**
**மருதூர்க்கனி**
**எம். ஸீ. எம். சுபைர்**
**கல்ஹின்னை ஹலீம்தீன்**
**ஜின்னா ஷரீபுதீன்**
**தாஸிம் அஹமது**
**கவிமணி புஹாரி**
**மருதூர் ஏ. மஜீத்**
**எஸ். ஐ. நாகூர் கனி**
**ஏ. எம். எம். அலி**
**அல் - அஸூமத்**
**ஜவாத் மரைக்கார்**
**அன்பு ஜவஹர்ஷா**

(இன்னும் வரும்)








சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மஹா வித்தியாலயத்திற்கு அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விஜயம் செய்து பாடசாலையின் வளப் பற்றாக்குறைகள் மற்றும் மாணவர்களின் குறைகளை கேட்டறிந்த போது எடுக்கப்பட்ட படங்கள். இந் நிகழ்வில் அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, தயா கமகே மற்றும் பாடசாலையின் அதிபர் ஏ.சி.எம். இஸ்மாயில் உட்பட உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

## சட்டத்தரணியாக இஷாரா இஸ்மாயில்

(கலாவெவ நிருபர் )



அனுராதபுரம், இக்கிரி கொல்லாவையின் முதல் பெண் சட்டத்தரணியாக இஷாரா இஸ்மாயில் உயர் நீதிமன்றத்தில் அண்மையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் தனது ஆரம்பக்கல்வியை அனுராதபுரம் இக்கிரிகொல்லாவ முஸ் லிம் மகா வித்தியாலயத்தில் கற்றார். கண்டி பெண்கள் உயர் பாடசாலையில் கல்விப் பொதுத்தராதர உயர்தரப்பரீட் சையில் சிறந்த பெறுபேற்றை பெற்று கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்ட பீட அனுமதியைப் பெற்று சட்டமாணி பட்டம் பெற்று சட்டத்தரணியானார். இவர் காலஞ்சென்ற மர்ஹூம் எஸ் எச்.எம். இஸ்மாயில் (அதிபர்) மற்றும் கே.எம்.மர்ஜூன் (ஆசிரியை) ஆகியோரது புதல்வியாவார்.

## வர்த்தக சங்கத்தின் தலைவராக பரீட்

(காத்தான்குடி ஏ.எல்.டீன்பைரூஸ்)



காத்தான்குடி வர்த் தக சங்கத்தின் புதிய தலைவராக முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பிர பல சமூகசேவையாளர் கே.எல்.எம்.பரீட் நியமனம் செய்யப்பட்டுள்ளார். கடந் தவாரம் இடம் பெற்ற காத்தான்குடி வர்த்தக சங்கத்தின் கூட்டத்தின் போது மேற்படிதெரிவு இடம் பெற்றதாக நிர்வாக சபை உறுப்பினர் தெரிவித்தார்.

இவர் புனர்வாழ்வு,புனரமைப்பு, மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாவின் ஆரம் பகால அரசியல் உயர்பீட உறுப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சர்வதேசத்தின் ஒத்துழைப்புக்களை பெற்று பிரதேச அபிவிருத்தியை முன்னெடுப்போம்

(இக்பால் அலி)

எமது இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையின் நிலைப்பாடுகள் பற்றி சர்வதேசம் திருப்தியுடனும் சிநேகத்து டனும் உள்ளது. பல்வேறு நாடுகளுடனும் இனங்களுடனும் இணக்கப்பாட்டுடனும் நெருங்கிய நட்புடனும் நமது நாட்டுக்கு நன்மையைப் பெற்றுக் கொள்ள நாம் பின்வாங்கக் கூடாது. அதன் மூலம் முறையான நன்மைகளைப் பெற்று எமது பிரதேசத்தின் சுற்றாடல் துறையோடு தொடர்புடைய பல்வேறு சேவைகளை மேம்படுத்திக் கொள்ள முடியும் என்று மத்திய மாகாண ஆளுநர் நிலூகா ஏக்க நாயக தெரிவித்தார். மத்திய மாகாண ச பையின் 6 ஆவது மாகாண சபையின் 5ஆவது கூட்டத் தொடரை கடந்த திங்கள் ஆரம்பித்து வைத்து உரையாற்றிய மத்திய மாகாண ஆளுநர் நிலூகா ஏக்கநாயக அங்கு இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரி விக்கையில்,

அரசியல் நிலைப்பாட்டில் பேராசை கொண்ட நோக்குடன் குறுகிய நோக் கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் பேராவலுடன் சுயநலவாதிகளாக அரசி யலில் ஈடுபடாது, மனித நேயத்துடன் நேர்மைத் தன்மையை மதித்து மக்கள் சேவையில் ஈடுபட வேண்டும் என்பது விசேடமாக ஏற்றுக் கொண்ட தர்மமாகும். அதன்படி அதிகாரப் பரவலாக்கலுடன் இணக்கப்பாட்டுடன் நிர்வாகப் பிரச்சி னையைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என நான் பிரார்த்திக்கின்றேன். இதற்காக முதலமைச்சர் உட்பட ஆளும் தரப்பினர் மற்றும் எதிர் தரப்பினர் அனைவருடைய ஒத்துழைப்பு அவசியமாகும்.

மாகாண சபைக் கூட்டங்களை முறை யாக செயல்திறன் மிக்கதாக நடத்துவதன் மூலம் மாகாணத்தின் அபிவிருத்தி செயற் பாடுகளை மிகத் திறமையாக செயற்ப டுத்த முடியும். அதற்கு காட்டப்படும் முயற்சி குறைவடையுமாயின் அல்லது வீணாக்கப்படுமாயின் எதிர்காலத்தில் பல சவால்களுக்கு நாம் முகம் கொடுக்க வேண்டி நேரிடும். எனவே இதனால் தமக்குக் கிடைத்த அதிகாரங்களும் சிறப் புரிமைகளும் மாறக் கூடும். அதேவேளை முறையாக மக்களுக்கு ஒத்துழைப்புக் கிடைக்கா விட்டால் மக்களின் நலன் கருதி தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு நான் பின்வாங்கப் போவதில்லை.

மக்கள் சேவையில் செயல்திறமை களை மேம்படுத்துவதற்கு தற்போதுள்ள வாகன வசதிகள் போதுமானது அல் ல. தேவைக்கு ஏற்ப அந்த வசதிகளை மாகாண சபை உறுப்பினர்களுக்கு பெற் றுக் கொடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப் படவுள்ளது. என்று அவர் மேலும் தெரிவித்தார்.







செரண்டிப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கான அமைப்பின் வழிகாட்டலில் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் யாழ். முஸ்லிம் சமூகத்தின் கல்வி எழுச்சி நோக்கிய பயண நிகழ்வு இடம் பெற்றது. இதில் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களும் யாழ். ஒஸ்மானியாக் கல் லூரியில் நீண்ட காலமாக அதிபராக இருந்து கடந்த வாரம் ஓய்வு பெற்ற வ. மகேந்திரராஜாவும் இந்த அமைப்பினரால் கௌரவிக்கப்பட்டனர்.

## ஒற்றுமையாக செயற்பட்டால் சமூகத்துக்கு வெற்றி நிச்சயம்

**மாகாண சபை உறுப்பினர் ஷாபி ரஹீம்**

(நீர்கொழும்பு நிருபர்)

நாட்டின் சுதந்திர தினத்தைக் கொண்டாடுவ தில் எமது ஒற்றுமையை வெளிப்படுத்தியுள்ள நாம் சகல விடயங்களிலும் ஒற்றுமையாக செயற்பட்டால் வெற்றியடையமுடியுமென மேல் மாகண சபை உறுப்பினர் சாபி றஹீம் நீர்கொழும்பு பெரியமுல்லையில் இடம் பெற்ற 69 ஆவது சுதந்திர தின விழாவில் உரை யாற்றும் போது தெரிவித்தார்.

நீர்கொழும்பு பெரிய பள்ளிவாசல் பேஷ் இமாம் மௌலவி ஐ.எல்.ஹனீபா தேசிய கொடியை ஏற்றிவைத்து மேல்மாகாண சபை உறுப்பினர் சாபி றஹீம் இங்கு தொடர்ந்து உரை யாற்றுகையில்,

கடந்த காலங்களில் முஸ்லிம்களுக்கு ஏற் பட்ட பிரச்சினைகள் தற்போது குறைவடைந் துள்ளன. முன்னாள் மாநகர சபை உறுப்பினர்கள் எம்.ஏ.இசட் பரீஸ் எம்.ஏ.எம். ஈஸான் ஆகியோ ருடன் இணைந்து எமது பிரதேசத்திற்கு வேலை செய்கிறோம். ஒற்றுமையாக செயற்படுவதன் மூலம் அதிக வெற்றிகளை அடைந்து கொள்ள முடியும். இங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சுதந் திர தின விழா ஏனைய சமூகத்துக்கு எடுத்துக் காட்டாகும். இவ்விழாவினை கொண்டாடுவ தற்கு எமது ஒற்றுமையை வெளிப்படுத்தியுள்ளது போன்று சகல விடயங்களிலும் ஒற்றுமையை வெளிப்படுத்தனால் எமது சமூகத்துக்கு வெற்றி நிச்சயம் என்று தெரிவித்தார்.



# மெல்ல கற்கும் மாணவர்களை எப்படி வழிப்படுத்தலாம்?

**அட்டாளைச்சேனை மன்சூர்**

பொதுவாக ஆசிரியர்கள் கூறுகின்ற ஒரு விடயம் இந்த மாணவன் சரியாகக் கற்பதில்லை. சரியாக எழுதுகிறான் இல்லை. ஒருவித சோகத்தில் இருக்கின்றான். எதுவும் பேசாமல் இருக்கின்றான், சதா அழுது கொண்டே இருக்கின்றான், பரீட்சையில் குறைவான புள்ளிகளைப் பெறுகின்றான். பல பிரச்சினைகளை பெற்றோரிடமும், கல்வி மேலதிகாரிகளிடமும், சக ஆசிரியர்களிடமும் கூறுவார்கள். இதற்கான பின்னணி பற்றிய ஆய்வுகளிலோ அல்லது இக்குறைபாட்டிற்கான காரணங்களையோ ஒருசிலர் ஆய்ந்து அறிந்து கொண்டு பின்னர் அதற்கான தீர்வுகளை முற்படுத்த ஆயத்தமாவார்கள். அல்லது எவ்வாறு கற்பிப்பது என்பதை அறிந்து அதற்கேற்றவாறு கற்பித்தல் செயற்பாடுகளில் ஆசிரியர்கள் ஈடுபடுவார்கள். பல ஆசிரியர்கள் இதுவொரு பெரிய தொல்லையாப்போச்சு என்று அவனை எப்போதும் திட்டித்தீர்த்துவிட்டு போதாக்குறையாக அவனது பெற்றோரிடமும் முறையிடுவார்கள். 'காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு' என்பதைப்போல பெற்றோரும், ஆசிரியரும் சிலவேளைகளில் முரண்பாடுகளில் ஈடுபடுவதும் உண்டு.

உண்மையில் சில மாணவர்கள் உயர் தரத்திலும் தனது தாய்மொழியை திருத்தமாக எழுதமுடியாமல் திண்டாடுவதையும், தேசிய மட்டப் பரீட்சைகளிலும் அந்தப் பாடத்தில் முறையான அடைவினை அடையாமல் இருப்பதையும் நாம் காண்கிறோம். ஆய்வுகளின் பிரகாரம் சாதாரணதரப் பரீட்சையில் தாய்மொழிப் பாடத்தில் சுமார் 1 சதவீதத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பூச்சியத்தைப் பெறுகிறார்கள் என சுட்டிக்காட்டப்படுகின்றன. இவ்வாறான மாணவர்கள் மாத்திரமன்றி சாதாரணமாக பாடசாலைகளின் வகுப்பறைகளில் சிரேஷ்ட பிரிவுகளில் கல்வி பயிலும் மாணவர்களில் பலர் எழுதுவதிலும், வாசிப்பதிலும் இக்குறைபாடுடையோராகவே காணப்படுகின்றனர். இதற்கான காரணம் என்ன? இதனைத் தீர்ப்பதற்குரிய வழிவகைகள் என்னவென்பதை அறிந்திருப்பதன் மூலம் சிலவற்றை தீர்த்துக் கொள்ளலாம் அல்லவா!

பாடசாலைகளில் தரம் ஒன்று முதல் சாதாரணதர வகுப்பு வரை, வாசித்தல், எழுதுதல் மற்றும் அடிப்படையான கணிதச் செயற்பாடுகளை மேற்கொள்வதில் பின்தங்கி இருக்கும் மாணவர்களை, ஆசிரியர்கள் கற்றல் குறைபாடுள்ளவர்களாக பிரிக்கின்றனர். சாதாரணமாக இவ்வகை மாணவர்களுக்கு விசேடமான முறையில் கற்றல் கற்பித்தலை ஏனைய மாணவர்கள் அறிந்து கொள்ளாவண்ணம் மேற்கொள்ள வேண்டியதும் அவசியமாகும். ஏனெனில், மாணவர்களை குறைபாடுகளை உடையோராக பிரிக்கின்றபோது உளரீதியான பாதிப்பிற்குள் தள்ளப்படலாம் என்பதை உணர வேண்டும்.

பொதுவாக பார்க்கின்றபோது வாசித்தல் குறைபாடு காணப்படுமாக இருந்தால் டிஸ்லெக்ஷியா எனவும், எழுதுவதில் குறைபாடுள்ளோரை டிஸ்கால்குளியா எனவும், கணிதபாட செயற்பாடுகளில் குறைவானவர்கள் டிஸ்கிராபியா மற்றும் டிஸ்பிராக்சியா, டிஸ்பேசியா என்கிற ஐ வகையான கற்றல் குறைபாடுகள் காணப்படுவதாக உளவியலாளர்கள் கூறுகின்றனர். இவற்றில், வாசித்தல், எழுதுதல், மற்றும் அடிப்படையான கணித செயற்பாடுகளில் காணப்படுகின்ற குறைபாடுகளே பெரும்பான்மையாக பாடசாலைகளில் காணப்படுவதாக ஆய்வுகள் ஊடாக கண்டறியப்பட்டுள்ளன.

இதனை மேம்படுத்தும் நோக்கத்துடன் காலத்திற்குக் காலம் ஆசிரியர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்படுவதுடன், விசேடமான ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு சிறந்த பயிற்சிகளும் வழங்கப்பட்டு மாணவர்களின் கற்றல் மேம்படுத்தப்படுவதுடன், அனைவருக்கும் கல்வி என்கிற திட்டத்திற்கு அமைவாக சகல மாணவர்களும் சிறந்த தேர்ச்சியுடையவர்களாக மாற்றியமைப்பதற்கான திட்டங்களும், இன்றைய பாடசாலைக் கல்வி முறையில் உள்வாங்கப்பட்டுள்ளதையும் காணலாம்.

எனவேதான், கற்றல் குறைபாடுகளை இனங்கண்டு அவர்களுக்கான பரிகாரங்களை மேற்கொள்ளவேண்டும். அதே வேளை இவர்களைப் பொறுத்தளவில் ஏனைய மாணவர்களோடு ஒப்பிடுகையில், ஓரளவு மட்டுமே கல்வியில் பின்தங்கி இருப்பவர்களாக ஆரம்பத்தில் காணப்படுவார்கள். இதனை சரி செய்யாமல் விடுவோமாக இருந்தால் அடுத்தடுத்த வகுப்புகளில், அவர்களின் கற்றல் திறன் மட்டுமின்றி சிந்திக்கும் திறனும் பாதிக்கப்படுவதாக உளவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கற்றல் குறைபாட்டினைக் கொண்டுள்ள குழந்தையை, பாடசாலையில் சேர்ந்த பின்னரே இக்குறைபாடு பற்றிய விபரம் பெரும்பாலும் தெரியவருகின்றது. ஒவ்வொரு குழந்தைக்கும் ஒவ்வொரு விதத்தில் கற்றல் குறைபாடுகளின் அறிகுறிகள் இருக்கக் கூடும் என்பதால் இதை அடையாளம் காண்பது கடினமான ஒன்றாகும்.

**இவ்வாறான குழந்தைகளுக்கு தீர்வு வழங்குவதற்கும், அவர்களை வழிப்படுத்துவதற்கும், அவர்களுக்கு தாறுமாறாக ஏசுவதனாலோ, தண்டனை வழங்குவதனாலோ எதனையும் செய்ய முடியாது. மாறாக, மாணவரின் நிலைமைகளை அறிந்து கற்பிக்கின்றபோது அதில் முழுமையான பலன் கிடைக்கும்.**

ஆதலால், தரம் ஒன்றில் மாணவர்கள் சேர்ந்தவுடன் சுயமாக பாடசாலைக்குள் வருவதையும், சுயமாக சில செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான பயிற்சிகளும் வழங்கி, மாணவர்களை இனங்காண வேண்டியது ஆசிரியரின் பணியாகும். இனங்காணும் பணியை, மாணவர்கள் சரியான முறையில் மேற்கொள்ளாவிடில் இத்தகைய பிரச்சினைகளை கண்டறிவது கஷ்டமானதாக இருக்கும். ஆதலால் ஆரம்பத்திலேயே இதனை மேற்கொள்ள வேண்டும்.

சில வேளைகளில், இத்தகைய மாணவர்கள் பல வருடங்கள் கழித்து பெரியவர்களான பிறகுதான் கற்றல் குறைபாடு இருப்பதுகூட கண்டறியப்படுகின்றது. எனவே, இவர்கள் பாடசாலையிலும், குடும்பத்திலும், வேலைவாய்ப்புக்களை பெறுவதிலும் பலத்த சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

இதனைத் தவிர்க்கும் முகமாக ஆசிரியர்களும், பெற்றோர்களும் சரியான முறையில் பிள்ளையின் அனைத்துச் செயற்பாடுகளிலும் கவனம் செலுத்த வேண்டியுள்ளனர். எல்லோரும் பொதுவாகக் கருதுவதுபோல், கற்றல் குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகள் அறிவுத்திறனில் குறைந்தவர்கள் அல்ல என்பதையும் நினைவிற் கொள்ள வேண்டும். ஏனெனில், இவர்களுக்குப் படிப்பில் ஆர்வமில்லை என்று கூறிவிடவும் முடியாது. இவர்கள் குடும்பச் சூழல், உணர்வு ரீதியான பிரச்சினைகள் போன்றவற்றாலும் கற்றல் பிரச்சினைகளுக்கு ஆளாகவில்லை. கற்றல் குறைபாடு என்பது ஒருவகை நரம்பியல் கோளாறு என்றும் கூறப்படுகின்றது.

இது மூளையின் பல்வேறுத் திறன்களான, தகவல்களை சேமித்தல், பாதுகாத்தல், ஆய்வு மற்றும் செயலாக்குதல் போன்றவற்றைப் பாதிக்கச் செய்கிறது. எப்படி ஒரு தவறான இணைப்பினால் மின்குமிழ் எரியாமல் இருக்கிறதோ, அது போல, மூளையில் ஏற்படும் மாறுபட்ட நரம்பு இணைப்பினால் வாய்மொழி மற்றும் வாய்மொழி அல்லாத தகவல்களைப் பெறுவதிலும் செயல்படுத்துவதிலும் பாதிப்பு ஏற்படுகிறது. ஒரு விடயத்தை புரிந்து கொள்வதற்கு, முதலில் அதை ஐம்புலன்கள் மூலமாக உணர வேண்டும். பிறகு அதை ஒருமுகப்படுத்தி, வரிசைப்படுத்தி, எளிமைப்படுத்தி அதன் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். இவ்விதமான முறையில் மூளைச் செயல்பாடுகள் கற்றலுக்கு மிகவும் முக்கியமானதாக கருதப்படுகின்றது. இதில் ஏதேனும் ஒன்று சரியாக செயல்படவில்லை என்றாலும் அது கற்றல் குறைபாட்டை ஏற்படுத்திவிடும்.

கற்றல் குறைபாடானது வெவ்வேறு விதமாக குழந்தைகளைப் பாதிக்கச் செய்கிறது. சில குழந்தைகள் நன்றாக புத்தகம் படிப்பார்கள். ஆனால், கணக்குப் பற்றிய புரிந்துணர்வுகள் இருக்காது. வேறு சில குழந்தைகளுக்கு வாசிப்புத் திறன் இல்லாமல் இருக்கும். இன்னும் சிலருக்கு எழுதுவதில் பிரச்சினைகள் காணப்படலாம். எனவேதான், பிரச்சினைகள் வெவ்வேறாக இருப்பினும் இவை எல்லாமே 'கற்றல் குறைபாடுகள்' என்பதை அறிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. குழந்தைகளிடத்தில் மேலோங்கச் செய்கின்ற ஒவ்வொரு திறன்களையும் பாதிக்கும் விதத்தைக் கொண்டே, மேலே கூறப்பட்ட கற்றல் குறைபாடுகளை அறிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. எதில் எத்திறன்கள் அதிகம் பாதிக்கப்படுகிறதோ அத்திறன் தொடர்பான கற்றல் குறைபாட்டுக்குரிய தீர்வினை முன்வைத்து பரிகாரம் மேற்கொள்கின்றபோது ஓரளவு தீர்க்கக் கூடியதாக இருக்கும்.

எனவேதான், பிள்ளைகளிடம் காணப்படுகின்ற பின்வரும் அறிகுறிகளைக் கொண்டு கற்றல் குறைபாடு உள்ளதா என்பதை அறிய முடியும். தங்கள் குழந்தைகளுக்கு கற்றலில் பிரச்சினை உள்ளதை வெளிப்படுத்தும் அடையாளங்கள் இருப்பின், பெற்றோர் அதை அலட்சியப்படுத்தாமல், உடனே கவனித்து அதற்கான ஆரம்ப கட்ட சிகிச்சை முறைகளை மேற்கொள்வதன் ஊடாக கற்றலிலும், அவனது எதிர்காலத்திலும் சிறந்த நிலையை ஏற்படுத்தலாம்.

பொதுவாக வயது அடிப்படையில் முன்பள்ளி மற்றும் ஆரம்பப் பிரிவு வகுப்புக்களில் பயிலும் குழந்தைகளிடம் பின்வரும் செயற்பாடுகள் காணப்படலாம் என கண்டறிந்துள்ளனர். அதாவது, பிற குழந்தைகளோடு ஒப்பிடுகையில் தாமதமாகப் பேச ஆரம்பித்தல், உச்சரிப்பு பிரச்சினைகள், மெதுவான சொல் திறன் வளர்ச்சி - பொதுவாக சரியான வார்த்தையை கண்டுபிடிக்க முடியாமல் இருப்பது, சில வார்த்தைகளை கூறுவதில் கடினம், எண்கள், எழுத்துகள், நிறங்கள், வார நாட்களைப் புரிந்துகொள்வதில் கஷ்டம், அமைதியற்ற நிலை, எளிதில் கவனம் சிதறுதல், சக குழந்தைகளுடன் பழகுவதில் பிரச்சினை, பிறர் சொல்வதை (direction) பின்பற்ற இயலாமை, பென்சிலை பிடித்து தெளிவாக எழுதுவதில் சிரமம், காலில் சப்பாத்து அணிவது, பொத்தான் மாட்டுவது, எழுத்துக்கும் ஒலிக்கும் இடையே உள்ள தொடர்பை புரிந்துகொள்வதில் மந்த நிலை, ஒலியை இணைத்து வார்த்தையை உருவாக்க முடியாத நிலைமை என்று இவை விரிகின்றன.

மேலும், அடிப்படைச் சொற்களை குழப்பிக் கொள்ளுதல், தொடர்ச்சியாக எழுத்து மற்றும் வாசிப்பில் பிழை விடுதல், வார்த்தையை மாற்றி எழுதுவது, எண்களின் வரிசையை மாற்றிக் கூறுவது, கணித குறிகளை குழப்பிக் கொள்ளுதல், விடயத்தை மெதுவாக நினைவுகூர்ந்து கொள்ளல், புதிய திறன்களை கற்பதில் மந்த நிலை, விடயப் பொருள் பொருள் தெரியாமல் அதிகமாக மனப்பாடம் செய்தல், நேரத்தை புரிந்துகொள்வதில் சிரமம். போன்ற பலதரப்பட்ட பிரச்சினைகள் கற்றல் குறைபாட்டினைத் தோற்றுவிக்கும்.

எனவேதான், இவ்வாறான குழந்தைகளுக்கு தீர்வு வழங்குவதற்கும், அவர்களை வழிப்படுத்துவதற்கும், அவர்களுக்கு தாறுமாறாக ஏசுவதனாலே, தண்டனை வழங்குவதனாலோ எதனையும் செய்ய முடியாது. மாறாக, மாணவரின் நிலைமைகளை அறிந்து கற்பிக்கின்றபோது அதில் முழுமையான பலன் கிடைக்கும். இல்லையெனில் 'விழலுக்கு இறைத்த நீராக'வே எமது கற்றல் கற்பித்தல்கள் மாறும். இந்நிலை தோன்றாதிருக்க ஆசிரியரும், பெற்றோரும் தம் குழந்தையின் கற்றலில் அதிக கவனம் செலுத்தி, சிறந்த மாணவ சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.

# நான் புரிந்துகொண்ட முஸ்லிம்கள்

**அ.மார்க்ஸ்**

**தமிழ்நாட்டு மனித உரிமை செயற்பாட்டாளர் பேராசிரியர் அ.மார்க்ஸ் முஸ்லிம்கள் என்ற தனது நூலுக்கு எழுதியுள்ள முன்னுரை**

இந்நூலில் உள்ள கட்டுரைகள் அனைத்தும் கடந்த ஆறேழு ஆண்டுகளில், வெவ்வேறு சந்தர்ப்பங்களில் நண்பர்களின் நூல்களுக்கு முன்னுரைகளாகவும், பத்திரிகைகளில் கட்டுரைகளாகவும், ஆய்வரங்குகளில் வாசிக்கப்படுவதற்கான உரைகளாகவும் எழுதப்பட்டவை. ஒன்றாகத் தொகுத்து நோக்கும்போது தான் இக்கட்டுரைகள் எந்த அளவிற்கு முக்கியமானவை என்பதை நானே உணர்கிறேன்.

இந்தியாவில் மட்டுமல்ல, உலக அளவிலும் முஸ்லிம்களுக்கு எதிராக ஒரு வெறுப்பு அரசியல் கட்டமைக்கப்பட்டுள்ள காலத்தில் வாழ நேர்ந்தவர்கள் நாம். மிகவும் ஆழப் படித்தவர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், முற்போக்கு அரசியல் களத்தில் செயற்படுவோர் ஆகிய பலரிடத்திலும் கூட முஸ்லிம் நெஞ்சங்கள் குறித்துப் போதிய புரியாமை இல்லாததைக் கண்டு நான் பல நேரங்களில் திகைத்துப் போயிருக்கிறேன்.

எனது இளமைக் காலம் தஞ்சை மாவட்டம் ஒரத்தநாடு தாலுகாவில் உள்ள பாப்பாநாடு எனும் கிராமத்தில் கழிந்தது. கணிசமான அளவில் அங்கே முஸ்லிம்கள் இருந்தனர். அப்பாவுக்குப் பல முஸ்லிம் நண்பர்கள் உண்டு. உறவுமுறை சொல்லித் தான் எல்லோரும் பழகுவர். மதுக்கூரிலிருந்து அங்கு வந்து பலசரக்குக் கடை வைத்திருந்த யாகூப் ராவுத்தர், அப்பாவுக்கு நெருங்கிய நண்பர். தொடக்கப் பள்ளியில் என் நெருக்கமான நண்பன் 'மையங்கார்' என அழைக்கப்பட்ட முகைதீன் அப்துல் காதர். ஒரத்தநாடு உயர் நிலைப் பள்ளியில் படிக்கும் போது நெடுவாக்கோட்டையைச் சேர்ந்த முகம்மது கலீல்.



பண்டிகை நாட்களில் அத்தனை பலகாரங்கள் வீட்டுக்கு வந்து குவியும். யாகூப் மாமா வந்து என்னையும் தங்கைகளையும் வீட்டுக்கே அழைத்துச் சென்று விடுவார். என் தெருவில் இருந்த ஆறு வீடுகளில் மூன்று வீடுகள் முஸ்லிம் வீடுகள். மூன்றாவது வீட்டில் இருந்த சபூரா பேகத்தின் கணவர் சிங்கப்பூரில் ஏதோ கடையில் வேலை செய்து கொண்டிருந்தார். பேகத்தின் இரு சகோதரர்கள், தந்தை எல்லோரும் மளிகைக் கடையில் வேலை செய்து கொண்டிருந்தனர். பேகத்தின் தங்கைகள் இருவர் திருமணம் ஆகாமல் இருந்தனர். வறுமை கோலோச்சிய இல்லம்.

சபூரா அத்தை அத்தனை அழகு. மாதம் ஒரு முறை கணவருக்குக் கடிதம் எழுத என்னை அழைப்பார். நான் சின்னப் பையன். அவ்வளவு எளிதாகப் போக மாட்டேன். விளையாட ஓடி விடுவேன். அம்மா திட்டுவார். ''அந்த சபூரா பொண்ணு எத்தனை தடவை கூப்பிட்டுடுச்சு. போய் எழுதிக் குடுத்திட்டு வந்தா குறைஞ்சா போயிடுவே...'' அந்த வெளிநாட்டு இன்லன்ட் லெட்டரில் கொள்ளாத அளவிற்கு அத்தனை சேதிகள் இருக்கும். ஒரு மாதத்தில் வீட்டில் நடந்த அத்தனை நிகழ்வுகளும் அதில் பதியப்படும். இன்னும் நினைவிருக்கிறது. ''என் இரு கண்ணிலும் பிரியமுள்ள மச்சான் அவர்களுக்கு...'' என்றுதான் அந்தக் கடிதம் ஒவ்வொரு முறையும் தொடங்கும். இடையில் எழுந்து சென்று கொஞ்சம் தேநீர் கொண்டு வந்து தருவார். அவர் ஆரம்பிக்கு முன் நானே அந்த வரியை எழுதி விடுவேன்.

சபூரா அத்தையின் மச்சான் ஒவ்வொரு முறை ஊருக்கு வரும்போதும் எனக்கு ஒரு ரப்பர் செருப்பு அல்லது ஒரு ஹீரோ பேனா ஏதாவது கொண்டு வந்து தருவார். அப்பாவுக்கு மாமா முறையுள்ள ஓசன்சா ராவுத்தர் எப்போதும் என்னைப் பேராண்டி என அழைத்துக் கேலி செய்வார். பெரிய மீசை, இடுப்பில் பச்சை பெல்ட்டுடன் காட்சி அளிக்கும் கறிக்கடை இப்றாஹிம் ராவுத்தர், நான் கறி வாங்கப் போனால் காக்க வைக்காமல் நல்ல கறியாகத் தருவதோடு, எனக்காக இரண்டு மூளை எலும்புகளை எடுத்து வைக்கவும் தவற மாட்டார். டீக்கடை வைத்திருந்த அப்துல் காசிம், தையற் கடை வைத்திருந்த நொண்டி பாய்... ஆகா எத்தனை அழகான மனிதர்கள். எத்தனை அற்புதமான நாட்கள்.

நான் அந்த ஊரை விட்டுச் செல்லும்போது என் வீட்டை ஓசன்சா ராவுத்தர் மகன் ஜபருல்லாவிடம்தான் விற்று வந்தேன். அப்போது அங்கே மசூதி இல்லை. ஒரு கூரை வேய்ந்த இல்லத்தில்தான் தொழுகை நடக்கும். இப்போது அங்கே ஒரு அழகிய மசூதி கட்டப்பட்டுள்ளது. கபருஸ்தானும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

முஸ்லிம்களுடனான என் நட்பு இன்றும் தொடர்கிறது. இன்னும் தீவிரமாகவும், நெருக்கமாகவும் அது தொடர்கிறது. பாபர் மசூதிக்கு எதிரான எதிர்ப்பியக்கம் நடந்து கொண்டிருந்த காலம் அது. முஸ்லிம்களுக்கும் மற்றவர்களுக்கும் உள்ள நட்பைப் போற்றுவதாகத் திரைப்படங்கள் வந்துகொண்டிருந்த காலம் போய், முஸ்லிம்களைப் பயங்கரவாதிகளாகவும் வன்முறையாளர்களாகவும் சித்திரிக்கும் திரைப்படங்களை பாலச்சந்தர், மணிரத்தினம், கமல்ஹாசன் போன்றோர் வெளியிடத் தொடங்கிய ஒரு சூழலில்தான் 'ஜாதி மல்லி' எனும் ஒரு திரைப்படம் குறித்த விமர்சனக் கூட்டத்தை ஏற்பாடு செய்தார் குடந்தை நண்பர் மறைந்த கணேசமூர்த்தி. அன்று நடந்த விவாதத்தின் அடிப்படையில் உருவான 'இஸ்லாமியருக்கு எதிரான கட்டுக்கதைகள்' நூல் பின்னர் பல பதிப்புகளைக் கண்டது மட்டுமல்ல, எனக்கு ஏராளமான முஸ்லிம் நண்பர்களையும் உருவாக்கித் தந்தது.

மற்றவர்களைப் புரிந்துகொள்வது என்பதைக் காட்டிலும் மற்றவர்களைப் புரிந்து கொள்ள இயலாமையை நாம் உணர்ந்து கொள்வதுதான் முக்கியம் என நான் ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளேன். ஒருவரைப் புரிந்துகொள்வது என்பது நமக்குப் பரிச்சயமான ஏதோ ஒரு சட்டகத்துக்குள் அவரைக் கொண்டு வருவது தான்.

அதன் மூலம் நாம் அவரைக் கையகப்படுத்திக் கொள்கிறோம். சுகம் காண்கிறோம். ஆனால் மற்றமை என்பது அத்தனை எளிதாகக் கையகப்படுத்தக் கூடியதல்ல என்பதை உணரும்போது தான் நாம் மற்றமையை வியக்கும் பேறு பெறுகிறோம்; கற்றுக் கொள்கிறோம்; மேன்மையுறுகிறோம்.

இந்த நூல் முஸ்லிம்களைப் புரிந்து கொள்வதற்காகவோ அல்லது நமது புரிந்துகொள்ளா இயலாமையைப் புரிந்துகொள்வதற்காகவோ திட்டமிட்டு எழுதப்பட்டது அல்ல. தொடக்க வரிகளில் குறிப்பிட்டதுபோல பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு நோக்கங்களுடன் எழுதப்பட்டவை இவை. ஒட்டு மொத்தமாகத் தொகுத்துப் பார்க்கும் போதுதான் முஸ்லிம்களுக்குள் விகசிக்கும் பன்மைத் தன்மை நம்மை வியக்க வைக்கிறது.

(நாளை தொடரும்)

# கூட்டு எதிரணியில் மஹிந்த போட்டியிடமாட்டார்

## அமைச்சர் எஸ். பி. திசாநாயக்க

(குருநாகல் இக்பால் அலி)



கூட்டு எதிரணியினர் தாம் தனித்துப் போட்டியிடப் போவதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜக்ஷ கூறினாலும் அவ்வாறான கருத்துக்களை தெரிவித்தாலும் அவர்கள் போட்டியிடப் போவதில்லை. மஹிந்த ராஜபக்ஷவைப் பற்றி நன்றாகத் தெரிந்தவர் என்ற காரணத்தினால் நான் இவ்வாறு கூறுகின்றேன், கூட்டு எதிரணியினர் போட்டியிடப் போவதில்லை என்று அமைச்சர் எஸ். பி. திசாநாயக்க தெரிவித்தார்.

புஹறதஹேவாஹெட்டவில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட அமைச்சர் எஸ். திசா நாயக்க ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் போதே அவர் இவ்வாறு இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ 2020 ஆம் ஆண்டு நடை பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால் சந்தேகத்திற்கு இடமின்றி அவர் தோல்வியடைவார். ஆனால், எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றி பெறவாய்ப்பு உண்டு. ஜனாதிபதி மற்றும் பிரதமர் இணைந்து அமைச்சரவை மாற்றங்களை தேவையான சந்தர்ப்பத்தில் ஏற்படுத்த முடியும் என்று அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தெரிவித்தார்.

# கட்டுப்பாட்டு விலைகளை மீறும் மலையக வர்த்தகர்கள்

## திண்டாடும் தோட்டப்புற மக்கள்

(மாத்தளை எம்.எஸ்.எம். மஸாஹிம்)

அத்தியாவசிய பொருட்களின் விலைகளைக் குறைத்து அரசு பொருட்களுக்கு கட்டுப்பாட்டு விலைகளை நிர்ணயித்தபோதும் மலையகத் தோட்டப்புறங்களில் அரசின் கட்டுப்பாட்டு விலைகளுக்கு பொருட்களை கொள்வனவு செய்யமுடியாது என்றும் தோட்டப்பகுதிகளிலும் தோட்டப்புறங்களை அண்மித்த நகர்ப்புற வர்த்தக நிலையங்களில் அரச கட்டுப்பாட்டு விலைகளை மீறி கூடுதல் விலைகளுக்கு அத்தியாவசியப்பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக தோட்டபுற மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தேட்டப்புறங்களை அண்மித்த நகர வர்த்தக நிலையங்களிலும் இடம்பெறும் தான்தோன்றித் தனமான நடிவடிக்கைகள் சம்பந்தமாக அரச அதிகாரிகள் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்காததனால் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் தாங்கள் நினைத்த விலைகளுக்கு பொருட்களை விற்பனை செய்து வருவதாகவும் தோட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

நுகர்வோரின் நலன்கருதி கடந்த ஆண்டு ஜுலை14 ஆம் திகதி விசேட வர்த்தமானியின் மூலம் 16 அத்தியாவசியப் பொருட்களுக்கு கட்டுப்பாட்டு விலைகள் நிர்ணயிக்கப்பட்ட போது மலையகத்தோட்ட புறங்களில் அவை இன்னும் நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பது பற்றியும் தோட்ட மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது சம்பந்தமாக மத்திய மாகாண நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரி ஒருவர் கருத்துத்தெரிவிக்கையில் அரச கட்டுப்பாட்டு விலையை விட ஒரு சிறிய தொகையை அதிகமாக விற்பனை செய்யும் வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அதையும் மீறி கூடுதல் விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக தராதரம் பாராது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கவிஞர் வஹாப்தீனுக்கு பிரதமரினால் பெயாவே விருது வழங்கி கௌரவம்







(திகாமடுல்ல நிருபர்)

தேசிய பெயாவே இலக்கிய விருது வழங்கும் அமைப்பு காலி கோட்டை ஹெரிடேஜ் விலாவில் அண்மையில் நடைபெற்றது. விருது வழங்கும் விழாவில் கவிஞர், அறிவிப்பாளர் ஜே.வஹாப்தீன் எழுதிய கலவங்கட்டிகள் நாவல் தெரிவு செய்யப்பட்டு பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கவினால் பெயாவே விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

அம்பாறை மாவட்ட ஒலுவில் பிரதேசத்தைச் சேர்ந்த பட்டதாரி ஆசிரியராகவும், இலங்கை வானொலி பிறை எப்.எம். இல் அறிவிப்பாளராகவும் கடமை யாற்றிவருவதுடன், தென்கிழக்குப் பல்கலைக்கழ கத்தில் தமிழ் முதுகலைமாணி கற்கையை தொடர்ந் தும் கற்று வருகிறார். இலங்கையில் பெயாவே விருது வழங்கி கௌரவிக்கப்படும் முதல் முஸ்லிம் கவிஞர் ஜே. வஹாப்தீன் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒலுவில் கிராமத்தின் மீனவர் வாழ்வியலை கிராமிய வழக்காறுகளோடும், நாட்டார் பாடல்களோடும் அப் பிரதேசத்தின் மொழியில் எழுதப்பட்டதே கலவங் கட்டிகள் நாவல் ஆகும். கவிதை, கதை, அறிவிப்பு, நாவல், நாடகம் என பல துறைகளில் பல தேசிய விருதுகளை இவர் பெற்றிருந்தாலும் பெயாவே விருது என்பது இவருக்கு கிடைத்த ஒரு அங்கீகாரமாகும்.

அங்கு பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ் தலைமையில் மும் மொழி நாவல் பற்றிய ஆய்வு மாநாடு ஒன்றும் இடம்பெற்றது. இவ் ஆய்வு மாநாட்டில் கலவங்கட்டிகள் பல மொழிகளில் மொழி மாற்றம் செய்யப்படவேண்டும் என பல ஆய்வாளர்கள் தங்களது கருத்துக்களை முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



பாணந்துறை ஜமாஅதே இஸ்லாமி, ஹேனமுல்லை சந்தை வர்த்தகர்கள், முச்சக்கர வண்டி சாரதிகள் சங்கம், அரசியல் கட்சிகள் உள்ளிட்ட அமைப்புக்களால் ஒழுங்கு செய்யப்பட்ட 69ஆவது சுதந்திரதின நிகழ்வு ஹேனமுல்ல சந்தைக்கு அருகே சர்வ மத தலைவர்கள், கெசல்வத்த பொலிஸ் அதிகாரிகளின் பங்களிப்புடன் நடைபெற்றபோது எடுத்த படம்.

(படம் - சபீதார்)


இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு
நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சு
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை

National Water Supply & Drainage Board

## கேள்விமனுக் கோரல்

| | | |
|---|---|---|
| திகதி | : | 08.02.2017 |
| கடன் இல. மற்றும் தலைப்பு | : | ADB கடன் இல. 3030-ஸ்ரீ; AFD கடன் இல. CLK 1008 - 01P AFD கடன் வசதிகள் |
| | | பாரிய கொழும்பு நீர்வழங்கல் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ அபிவிருத்தி முதலீட்டு நிகழ்ச்சி - செயற்றிட்டம் 2 |
| | | AFD ஒப்பந்த இணை நிதி - அம்பத்தலை நீர் வழங்கல் திட்ட அபிவிருத்தி மற்றும் சக்திவள சேமிப்பு செயற்றிட்டம் |
| ஒப்பந்த இலக்கம் | : | GCWWMIIP/AFD/EQUIP / OPER /ICB /06 |
| தலைப்பு | : | மேற்கு தயாரிப்பு பகுதியின் செயல்பாட்டு மற்றும் பராமரிப்பு பணிகளுக்கான இயந்திர, கருவிகளுக்கான கேள்விமனு ஆவணம். |

கேள்விமனு வழங்குவதற்கான இறுதித் திகதி : 29.03.2017, மு.ப. 10:00 மணி (உள்நாட்டு நேரப்படி)

1. பாரிய கொழும்பு நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ அபிவிருத்தி முதலீட்டு திட்டத்தின் இரண்டாம் கட்டத்துக்கான ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) நிதியையும், ஏஜன்சி பிரான்ஸை டி டிவலப்மன்டின் (AFD) இணை நிதியையும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம் பெற்றுள்ளது. இந்த நிதியின் ஒரு பகுதி மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தத்துக்கான கட்டணங்களுக்காக பயன்படுத்தப்படும்

2. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைத் தலைவர் சார்பாக திட்ட பெறுகை குழு தலைவர் - பாரிய (PPC - Major), கீழே குறிப்பிடப்படும் ஒப்பந்தங்களுக்காக, தகுதிவாய்ந்த மனுதாரரிடமிருந்து, சர்வதேச போட்டி மனு ஊடாக, ஒற்றை நிலை இரு காகித உறை மனு செயல்முறைகளை கோருகின்றார்.

| தொகை இலக்கம் (Lot No.) | விளக்கம் |
|---|---|
| A | **கனரக இயந்திரங்கள்**<br>10 டொன் தூக்கியுடைய ட்ரக் (01), எஞ்சினால் இயக்கப்படும் ஃபோக்லிஃப்ட் (5 டொன்) (01), ஏரியல் வேக் ப்ளெட்ஃபோம் (200 கிலோ கிராம்) (01) |
| B | **செயற்பாட்டு / கட்டுமான கருவிகள்**<br>-6 அங்குல மோட்டாரால் இயக்கப்படும் நீர்மூழ்கி பம்பி (01), ஜெனரேட்டரால் இயக்கப்படும் வெளிச்ச கோபுரங்கள் (02), 35K VA எடுத்துச்செல்லும் ஜெனரேட்டர் (டீசல்) (01), எஞ்சினால் இயக்கப்படும் பாதை / கொங்கிறீட் ப்ரேகர்கள் (03), 20 டொன் ஹைட்ரலிக் புல்லர் (01) |
| C | **வாகனங்கள்**<br>-க்ரூவ் கெப் வாகனம் (சிறிய சக்கர அடிப்படையிலான) (01), க்ரூப் கெப் வாகனம் (நீள சக்கர அடிப்படையிலான) (01) |
| D | **கட்டுமான வாகனங்கள்**<br>-டிபர் ட்ரக் (01) |

மனுதாரர் ஒரு தொகை, இரு தொகை, மூன்று தொகை அல்லது நான்கு தொகைகளுக்கு (Lot) மனு சமர்ப்பிக்கலாம்.

3. மனுதாரர் ஒப்பந்தம் கிடைக்கப்பெறுவதற்கான தகுதியைப் பெற, மனு ஆவணத்தில் விளக்கப்பட்டுள்ள தகுதிகளைப் பூரணப்படுத்தியிருக்க வேண்டும்.

4. ஆர்வமுள்ள மனுதாரர் பின்வரும் முகவரியில் மேலதிக விபரங்களைப் பெறலாம்:
உதவி பொது முகாமையாளர் (கேள்விமனு மற்றும் ஒப்பந்தங்கள்),
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை,
காலி வீதி, இரத்மலானை.

தொலைபேசியூடாக: 0094 11-2635885 அல்லது 0094 11-2638999 விரிவு. 1750 அல்லது தொலைநகல் இல: 0094 11-2635885

மின்னஞ்சல்: agmtenders@waterboard.lk

இதே அலுவலகத்தில், மனு ஆவணங்களை கட்டணமின்றி பரிசீலிக்கலாம்.

5. கேள்விமனுவுக்கு முந்திய கூட்டமொன்று, தொழில்வழங்குநரால், **01/03/2017 ஆம் திகதி, முற்பகல் 10 மணிக்கு,** பின்வரும் முகவரியில் நடாத்தப்படும். இந்த கேள்விமனுவுக்கு முந்திய கூட்டத்தில் அனைத்து மனுதாரரும் கட்டாயமாக கலந்துகொள்ளும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள்.

செயற்றிட்ட முகாமைத்துவ பிரிவு அலுவலகம்,
GCWWMIIP,
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை,
இல: 65,
புனித லோரன்ஸ் வீதி,
கொழும்பு 06.

6. கேள்விமனு பெறப்படும் இறுதித் திகதியின் பின்னர், கேள்விமனுக்கள் **119 நாட்களுக்கும்,** கேள்விமனு பாதுகாப்பு தொகை **147 நாட்களுக்கும்** செல்லுபடியாகும்.

7. ஆர்வமுள்ள மனுதாரர், ஆங்கில மொழியிலான முழுமையான கேள்விமனு ஆவணங்களைப் பெற, வியாபார இலட்சினை பொறித்த கடிதத் தாளில், உதவி பொது முகாமையாளர் (கேள்விமனு மற்றும் ஒப்பந்தங்கள்) தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை, காலி வீதி, இரத்மலானை, இலங்கை என்ற முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பத்தை ஒப்படைப்பதன் மூலமும், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புக்கு மீளச்செலுத்தப்படாத **25,000+VAT** ரூபாவை காசாகவோ, வங்கி வரைவாகவோ செலுத்துவதன் மூலமும், **08/02/2017** ஆம் திகதி, முற்பகல் **09 மணி** முதல் முற்பகல் **10 மணி** வரையிலும், **28/03/2017**ஆம் திகதி முற்பகல் **09 மணி** முதல் பிற்பகல் **03 மணி** வரையிலும், வேலை செய்யும் சாதாரண நாட்களில் முற்பகல் **09 மணி** முதல் பிற்பல் **03 மணி** வரையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட கேள்விமனுக்கள், கேள்விமனு ஆவணத்தில் (தகவல் படிவம்) குறிப்பிடப்பட்டுள்ளவாறு கேள்விமனு பாதுகாப்புத் தொகையுடன், பின்வரும் முகவரிக்கு **29/03/2017** ஆம் திகதி, முற்பகல் **10 மணிக்கு (உள்நாட்டு நேரம்)** அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் வழங்கப்பட வேண்டும்.
உதவி பொது முகாமையாளர் (கேள்விமனு மற்றும் ஒப்பந்தங்கள்)
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை,
காலி வீதி, இரத்மலானை,
இலங்கை

9. தாமதித்துக் கிடைக்கும் கேள்விமனுக்கள் நிராகரிக்கப்படும். மனுதாரர் தெரிவு செய்து அனுப்பும் பிரதிநிதிகளுக்கு முன்னால், அதே இடத்தில் **29/03/2017** இல், முற்பகல் **10 மணிக்கு** கேள்விமனுக்கள் திறக்கப்படும்.

10. கேள்விமனுக்களை தயாரித்தல், கேள்விமனுக்கு முந்திய கூட்டத்திற்கு சமூகமளித்தல், கேள்விமனுக்களை ஒப்படைத்தலுடன் தொடர்புபட்ட எந்தவொரு செலவினங்களுக்கும், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை பொறுப்பேற்காது.

**தலைவர்,**
**திட்ட பெறுகைக் குழு - பிரதான**
**தேசிய நீர்வழுங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை**

## நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு

National Water Supply & Drinage Board

# தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

## விலைமனு அறிவித்தல்

பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வழங்கல்கள் / வேலைகளுக்காக தகைமை மற்றும் தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து அரக்கு முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் சார்பில் பெறுகைக் குழுவின் தவிசாளர் இத்தால் அழைக்கின்றார்.

| ஒப்பந்தப் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவைப்படும் கேள்விப் பிணைமுறி | தகைமை தேவைப்பாடுகள் | மதிப்பீட்டு செலவு(ரூபா) வெட் வரி நீங்கலாக | ஆவணங்கள் வழங்குமிடம் மற்றும் தொடர்புகொள்ள வேண்டிய நபர் | மூடப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| **சிவில் கேள்விகள்** | | | | | | |
| கண்டியிலிருந்து மாத்தளை வீதியில் எஞ்சிய பிரிவுக்கு குழாய் பதித்தல் மற்றும் இணைப்பை மாற்றுதல்<br>**ஒப்பந்த இல: P&D/C/PL/REHA/AKURANA/2016/09** | 10,000/- + பெ.சே. வரி | ரூபா. 210,000/- | நீர் வழங்கல் மற்றும் வடிகால மைப்பு துறையில் C6 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA நிறுவனத்தில் பதிவு மற்றும் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 1987இன் 3ஆம் இலக்க சட்டத் தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 19.7 மில்லியன் | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தே.நீ.வ.வ.ச., காலி வீதி, இரத்மலானை தொ.பேசி/ தொ.நகல்: 0112635885 | 01/03/2017 10.00 மணி |
| அலிகொட்டே வெறியேற்றும் உள்ளீர்ப்பை மாற்றுதல் மற்றும் வெள்ளவாய, கிரிந்திஓயா உள்ளீர்ப்பை நிர்மாணித்தல்<br>**ஒப்பந்த இல: IMP/TP&TRANS/RSC(UVA)/WELLAWAYA/2016/151** | 10,000/- + பெ.சே. வரி | ரூபா. 649,000/- | நீர் வழங்கல் மற்றும் வடிகால மைப்பு துறையில் C5 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA நிறுவனத்தில் பதிவு மற்றும் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 1987இன் 3ஆம் இலக்க சட்டத் தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 43.3 மில்லியன் | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தே.நீ.வ.வ.ச., காலி வீதி, இரத்மலானை தொ.பேசி/ தொ.நகல்: 0112635885 | 03/03/2017 10.00 மணி |
| தெஹிவளை பிராந்தியத்தில் புதிய இணைப்புகளை வழங்குவதற்காக குழி தோண்டுதல், குழாய்களை பதித்தல் மற்றும் குழியை மூடுதல்<br>**ஒப்பந்த இல: W-S/P&C/C/NS(01)/DEHI/O&M/2017/17** | 6,000/- + பெ.சே. வரி | ரூபா. 150,000/- | நீர் வழங்கல் மற்றும் வடிகால மைப்பு துறையில் C7 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA நிறுவனத்தில் பதிவு மற்றும் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 1987இன் 3ஆம் இலக்க சட்டத் தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 10.0 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (மேற்கு தெற்கு) தே.நீ.வ.வ.ச., இல.07, அங்குலான புகையிரத நிலைய வீதி, அங்குலானை, மொரட்டுவை தொ.பேசி: 0112224888, தொ.நகல்: 0112637945 **கேள்விக்கு முன்னரான கூட்டம் 16.02.2017 - தெஹிவளை முகாமையாளர் அலுவலகம்** | 23/02/2017 10.00 மணி |
| அநுராதபுரம் நீர் வழங்கல் திட்டத்தின் நிலத்தடி நீர் அலுவலக வளாகத்தில் சீரமைப்பு வேலைகள்<br>**ஒப்பந்த இல: RH/NC/DGM/GWP/2016/411** | 6,000/- + பெ.சே. வரி | ரூபா. 118,500/- | கட்டிட நிர்மாணத் துறையில் C7 அல்லது அதற்கு மேற்பட்ட தரத் தில் CIDA நிறுவனத்தில் பதிவு மற் றும் பொது ஒப்பந்தங்கள் சட்டத் தின் 1987இன் 3ஆம் இலக்க சட்ட த்தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 7.90 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (வடமத்தி) கொடகே மாவத்தை, அநுராதபுரம் தொ.பேசி: 0252235993, தொ.நகல்: 0252225609 | 22/02/2017 14.00 மணி |
| ஹெனனிகல நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் அலுவலகத்தில் உள்ளீர்ப்பை மறுசீரமைத்தல் மற்றும் பம்பி இல்லத்தை நிர்மாணித்தல்<br>**ஒப்பந்த இல: RSC(E)/AGM(ES)/C/CKD/HEN/2016/43** | 5,000/- + பெ.சே. வரி | ரூபா. 74,000/- | கட்டிட நிர்மாணத் துறையில் C7 அல்லது அதற்கு மேற்பட்ட தரத் தில் CIDA நிறுவனத்தில் பதிவு மற் றும் பொது ஒப்பந்தங்கள் சட்டத் தின் 1987இன் 3ஆம் இலக்க சட்ட த்தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | உதவி பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், தே.நீ.வ.வ.ச., சிறி தர்மரத்ன மாவத்தை, அம்பாறை தொ.பேசி: 0632223926, தொ.நகல்: 0632224975 | 23/02/2017 10.00 மணி |
| **இயந்திரம் மற்றும் மின்னியல் கேள்விகள்** | | | | | | |
| பொல்கொல்ல உள்ளீர்ப்புக்கு 3 ஆள்துளை வகை நீர்முகி பம்பி தொகுதிகள் மற்றும் உதிரிப்பாகங்களை வழங்கி, நிறுவுதல்<br>**ஒப்பந்த இல: RSC-C/O&M/ENERGY/KANDY/2017/30** | 5,000/- + பெ.சே. வரி | ரூபா. 55,500/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 1987இன் 3ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் பதிவுச்சான்றிதழ் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (மத்தி) கெட்டம்பே, பேராதனை தொ.பேசி: 0812386068, தொ.நகல்: 0812388027 | 22/02/2017 14.00 மணி |
| அம்பதலே, முல்லேரியாவிலுள்ள ராஜசிங்க நீர்த்தேக்கத்தின் பிரதான நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் இரண்டு 40Kg/Hr குளோரினேற்றிகள் மற்றும் உதிரிப்பாகங்களை வழங்கி, நிறுவி, ஆரம்பித்துவைத்தல்<br>**ஒப்பந்த இல: RPC/WP/M&E/C/2016/43** | 5,000/- + பெ.சே. வரி | ரூபா. 58,000/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 1987இன் 3ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் பதிவுச்சான்றிதழ் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (மேற்கு - உற்பத்தி) தே.நீ.வ.வ.ச., உடமுல்ல வீதி, முல்லேரியாவ, புதியநகர் தொ.பேசி: 0112418532, தொ.நகல்: 0112549199 | 01/03/2017 14.00 மணி |
| அம்பாறை பிராந்திய அலுவலகத்தில் Grid Tie Solar Photovoltaic தொகுதியை வழங்கி, நிறுவி, பரிசோதித்து, ஆரம்பித்துவைத்தல்<br>**ஒப்பந்த இல: RSC(E)/AGM (ES)/SOLAR/ ENG/REG-OFF/AMP/2016/52** | 6,000/- + பெ.சே. வரி | ரூபா. 105,000/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 1987இன் 3ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் பதிவுச்சான்றிதழ் | | உதவி பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், தே.நீ.வ.வ.ச., சிறி தர்மரத்ன மாவத்தை, அம்பாறை தொ.பேசி: 0632223926, தொ.நகல்: 0632224975 | 23/02/2017 10.00 மணி |
| பாரிய குருநாகல் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் திட்டத்தில் சம்பர்களை நிர்மாணித்தல் மற்றும் 8 மொத்த ஓட்ட மீற்றர்களை நிறுவுதல்<br>**ஒப்பந்த இல: RSC(NW)/GKWSSP/TEN/2017-111** | 1,000/- + பெ.சே. வரி | ரூபா. 42,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பாரிய குருநாகல் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் திட்டம், தே.நீ.வ.வ.ச., பல்லேகட்டுவான, தம்புள்ளை வீதி, குருநாகல் தொ.பேசி: 0372056402, தொ.நகல்: 0372056529 | 01/03/2017 14.00 மணி |
| **வழங்கல் கேள்விகள்** | | | | | | |
| வெள்ளவாய நீர் வழங்கல் திட்டத்தில் பொலித்தீலேன் (PE) குழாய்கள், பொருத்திகள், உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்களை வழங்கி, விநியோகித்தல்<br>**ஒப்பந்த இல: IMP/TP&TRANS/RSC(UVA)/WELLAWAYA/2016/154** | 10,000/- + பெ.சே. வரி | ரூபா. 570,000/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 1987இன் 3ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் பதிவுச்சான்றிதழ் | | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தே.நீ.வ.வ.ச., காலி வீதி, இரத்மலானை தொ.பேசி/ தொ.நகல்: 0112635885 | 09/03/2017 10.00 மணி |
| கிழக்கு மத்தி பிராந்திய ஒத்துழைப்பு நிலையத்துக்கு 1,000 லீற்றர் கொள்ளளவுடைய 130 பொலி எதலீன் நீர்த்தாங்கிகளை வழங்கி, விநியோகித்தல்<br>**ஒப்பந்த இல: WC/SS /WATER TANK/2017/17** | 4,000/- + பெ.சே. வரி | ரூபா. 39,000/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (மேல்-மத்தி), 175ஏ, களுத்தோட்ட கட்டிடம், நாவல வீதி, நுகேகொடை தொ.பேசி/ தொ.நகல்: 0112856420-3 | 17/02/2017 14.00 மணி |
| அம்பாறை பிராந்தியத்துக்கு இயந்திரம் மற்றும் மின்னியல் வேலைக்கு PE குழாய்கள் மற்றும் பொருத்திகளை வழங்கி, விநியோகித்தல்<br>**ஒப்பந்த இல: RSC ( E)/AGM (ES)/PE/O&M/AMP/2016/48** | 6,000/- + பெ.சே. வரி | ரூபா. 90,000/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 1987இன் 3ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் பதிவுச்சான்றிதழ் | | உதவி பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், தே.நீ.வ.வ.ச., சிறி தர்மரத்ன மாவத்தை, அம்பாறை தொ.பேசி: 0632223926, தொ.நகல்: 0632224975 | 23/02/2017 10.00 மணி |
| பாரிய குருநாகல் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் திட்டத்தில் நீர் பவுசர்களை வழங்கி, விநியோகித்தல்<br>**ஒப்பந்த இல: RSC(NW)/GKWSSP/TEN/2016-101** | 1,000/- + பெ.சே. வரி | ரூபா. 50,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பாரிய குருநாகல் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் திட்டம், தே.நீ.வ.வ.ச., பல்லேகட்டுவான, தம்புள்ளை வீதி, குருநாகல் தொ.பேசி: 0372056402, தொ.நகல்: 0372056529 | 08/03/2017 14.00 மணி |
| **வாகனங்களை வாடகைக்கமர்த்தல்** | | | | | | |
| ஹரிஸ்பத்துவ நீர் வழங்கல் திட்டத்துக்கு 3 முச்சக்கரவண்டிகளை வாடகைக்கமர்த்தல்<br>**ஒப்பந்த இல: RSC-C/KN/SER/O&M/HARISPATTUWA/2017/17** | 2,000/- + பெ.சே. வரி | ரூபா. 5,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (மத்தி) கெட்டம்பே, பேராதனை தொ.பேசி: 0812386068, தொ.நகல்: 0812388027 | 22/02/2017 14.00 மணி |
| உடதென்ன நீர் வழங்கல் திட்டத்துக்கு 3 முச்சக்கரவண்டிகளை வாடகைக்கமர்த்தல்<br>**ஒப்பந்த இல: RSC-C/KN/SER/O&M/UDATENNA/2016/389** | 2,000/- + பெ.சே. வரி | ரூபா. 5,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (மத்தி) கெட்டம்பே, பேராதனை தொ.பேசி: 0812386068, தொ.நகல்: 0812388027 | 22/02/2017 14.00 மணி |
| மாத்தளை நீர் வழங்கல் திட்டத்துக்கு 3 முச்சக்கரவண்டிகளை வாடகைக்கமர்த்தல்<br>**ஒப்பந்த இல: RSC-C/KN/SER/O&M//MATALE/2016/388** | 2,000/- + பெ.சே. வரி | ரூபா. 5,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (மத்தி) கெட்டம்பே, பேராதனை தொ.பேசி: 0812386068, தொ.நகல்: 0812388027 | 22/02/2017 14.00 மணி |
| நிலத்தடி நீர் பிரிவுக்கு Crew Cab ஒன்றை வாடகைக்கமர்த்தல்<br>**ஒப்பந்த இல: RSC-C/GROUND WATER/SER/DROUGHT/2017/35** | 2,000/- + பெ.சே. வரி | ரூபா. 7,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (மத்தி) கெட்டம்பே, பேராதனை தொ.பேசி: 0812386068, தொ.நகல்: 0812388027 | 22/02/2017 14.00 மணி |
| கேகாலை பிரதி பொது முகாமையாளர் அலுவலகத்துக்கு வான் ஒன்றை வாடகைக்கமர்த்தல்<br>**ஒப்பந்த இல: RSC(SAB)/AGM(KEG)/O&M/KEGALLE/SER/2016/125** | 2,000/- + பெ.சே. வரி | ரூபா. 17,625/- | ஆவணத்தின் பிரகாரம் | | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தே.நீ.வ.வ.ச., காலி வீதி, இரத்மலானை தொ.பேசி/ தொ.நகல்: 0112635885 | 28/02/2017 10.00 மணி |
| **சேவை கேள்விகள்** | | | | | | |
| அலவத்துக்கொட அக்குறணை நீர் வழங்கல் திட்டத்தில் பராமரிப்பு வேலைகள்<br>**ஒப்பந்த இல: RSC-C/KN/SER/O&M/ALA,AKU/2017/26** | 2,000/- + பெ.சே. வரி | ரூபா. 10,970/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (மத்தி) கெட்டம்பே, பேராதனை தொ.பேசி: 0812386068, தொ.நகல்: 0812388027 | 22/02/2017 14.00 மணி |
| கலகெதர நீர் வழங்கல் திட்டம் மற்றும் பம்பி இல்லத்தில் பராமரிப்பு வேலைகள்<br>**ஒப்பந்த இல: RSC - C/KN/SER/GALAGEDARA/17/27** | 4,000/- + பெ.சே. வரி | ரூபா. 33,310/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (மத்தி) கெட்டம்பே, பேராதனை தொ.பேசி: 0812386068, தொ.நகல்: 0812388027 | 22/02/2017 14.00 மணி |
| **பயிற்றப்படாத பணியாளர் சேவை** | | | | | | |
| சிலாபம் நீர் வழங்கல் திட்டத்தில் பயிற்றப்படாத பணியாளர் சேவையை வழங்குதல்<br>**ஒப்பந்த இல: O&M(NW)/SER/O&M/CHILAW/ 2017/6R** | 4,000/- + பெ.சே. வரி | ரூபா. 22,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (வட மேற்கு) தே.நீ.வ.வ.ச. தம்புள்ளை வீதி, குருணாகல் தொ.பேசி: 0372221161, தொ.நகல்: 0372230086 **கேள்விக்கு முன்னரான கூட்டம் 28.02.2017** | 08/03/2017 14.00 மணி |
| **கட்டிடங்களை வாடகைக்கமர்த்தல்** | | | | | | |
| தென்னம்கும்புர ஹரகம நீர் வழங்கல் திட்டத்தில் அலுவலக பொறுப்பாளர் அலுவலகத்துக்கு வீடு அல்லது கட்டிடத்தை வாடகைக்கமர்த்தல்<br>**ஒப்பந்த இல: RSC-C/O&M/KE/SER/TEN/THENNEKUMBURA-HARAGAMA/2017/37** | 2,000/- + பெ.சே. வரி | - | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (மத்தி) கெட்டம்பே, பேராதனை தொ.பேசி: 0812386068, தொ.நகல்: 0812388027 | 22/02/2017 14.00 மணி |
| **சுத்திகரிப்பு சேவை** | | | | | | |
| மன்னார் நீர் வழங்கல் திட்டத்தில் மாவட்ட பொறியியலாளர் அலுவலகம், அலுகவலக பொறுப்பாளர் அலுவலகம் மற்றும் நீர் வழங்கல் திட்டத்துக்கு சுத்திகரிப்பு சேவையை வழங்குதல்<br>**ஒப்பந்த இல: RSC(N)/DGM/MAN/JANITORIAL/2017/03** | 2,000/- + பெ.சே. வரி | ரூபா. 20,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (வடக்கு) தே.நீ.வ.வ.ச., யாழ்ப்பாண வீதி, வவுனியா தொ.பேசி: 0242225719, தொ.நகல்: 0242225088 | 22/02/2017 14.00 மணி |

தகுதித்தன்மைக்கான சான்றுகளுடன் வியாபாரக் கடிதத் தலைப்பில் ஆவணங்களுக்கான வேண்டுகோள் கடிதமொன்றை சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும். மற்றும் **இறுதித் திகதிக்கு முன்னைய நாள்** வரை சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்கும் இடையில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படும் இடங்களில் கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

கேள்விகள் மூடப்பட்டவுடனேயே சமுகமளித்திருக்கும் கேள்விதாரர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். **தாமதமாக விலைமனு சமர்ப்பிக்கும் விண்ணப்பங்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.**

**தவிசாளர்,**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை**

**நீர் வழங்கல் தொடர்பான அவசர அழைப்புகளுக்காக 1939 எனும் இலவச இலக்கம் 24 மணி நேரமும் உங்களுக்காக செயற்படும்**

# சிரிய சிறையில் 13 ஆயிரம் எதிர்ப்பாளர்களுக்கு தூக்கு

## ஜனாதிபதி அஸாத்தின் அதிரடி

சிரியா சிறையில் கடந்த 2011 முதல் 2015ஆம் ஆண்டு வரை 10 ஆயிரம் முதல் 13 ஆயிரம் எதிர்ப்பாளர்களை அந்நாட்டு ஜனாதிபதி அஸாத் அரசு தூக்கிலிட்டு படுகொலை செய்திருப்பதாக தெரியவந்துள்ளது.



சிரியாவில் கடந்த 6 ஆண்டுகளுக்கும் மேலாக உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. அரசுக்கு எதிராக கிளர்ச்சியாளர்கள் படை அமைத்து போராடி வருகிறார்கள். அவர்களை அடக்கி ஒடுக்கும் நடவடிக்கையில் இராணுவம் ஈடுபட்டுள்ளது. அரசை எதிர்ப்பவர்களை ஜனாதிபதி அஸாத் அரசு கைது செய்து சிறையிலடைக்கிறது.

பின்னர் அவர்கள் தூக்கிலிடப்பட்டு கொல்லப்படுகின்றனர். சாத்னயா என்ற இடத்தில் மத்திய சிறைச்சாலை உள்ளது. இங்கு அடைக்கப்படும் கிளர்ச்சியாளர்கள் மற்றும் பொதுமக்கள் தூக்கிலிட்டு கொல்லப்படுகின்றனர்.

தூக்கிலிடப்படுபவர்களின் உடல்கள் லொறிகளில் ஏற்றப்பட்டு டமாஸ்கஸிலுள்ள டிஷ்ரீன் இராணுவ ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கு மொத்தமாக ஒரே இடத்தில் மண்ணில் போட்டு புதைக்கப்படுவதாக தகவல்கள் கசிந்துள்ளன.

கடந்த 2011 முதல் 2015ஆம் ஆண்டு வரை அதாவது 5 ஆண்டுகளில் 10 ஆயிரம் முதல் 13 ஆயிரம் பேர் தூக்கிலிடப்பட்டுள்ளனர். வாரத்துக்கு 20 முதல் 50 பேர் வரை தூக்கில் ஏற்றப்பட்டுள்ளனர். இத்தகவலை பொதுமன்னிப்பு பெற்று உயிர் பிழைத்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஆட்சியில் 65 ஆண்டுகள்



இங்கிலாந்து ராணியாக முடிசூடி 65 ஆண்டுகள் ஆவதையொட்டி மகாராணி எலிசபெத் நேற்றுமுன்தினம் விழா கொண்டாடினார்.

இங்கிலாந்தின் மன்னர் ஆறாம் ஜோர்ஜ் 1952ஆம் ஆண்டு பெப்ரவரி 6ஆம் திகதி காலமானார். மன்னரின் மறைவுக்கு பின்னர் அவரது மூத்த மகள் இரண்டாம் எலிசபெத் இங்கிலாந்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்.

1953ஆம் ஆண்டு எலிசபெத்துக்கு இங்கிலாந்தின் ராணியாக முடிசூடப்பட்டது. ராணி எலிசபெத் பதவியேற்று தற்போது 65 ஆண்டுகள் ஆகிறது. முன்னதாக ராணி எலிசபெத்தின் முப்பாட்டனாரின் மனைவி விக்டோரியா 1837ஆம் ஆண்டு ஜூன் 20ஆம் திகதி முதல் 1901ஆம் ஆண்டு ஜனவரி 22ஆம் திகதி இங்கிலாந்தின் ஆட்சிப்பீடத்தில் ராணியாக வீற்றிருந்தார். அதாவது சுமார் 63 ஆண்டுகள் ஆட்சி செய்தார். அரியணை ஏறி 65 ஆண்டுகள் ஆவதை ராணி எலிசபெத் நேற்றுமுன்தினம் கொண்டாடினார்.

இதையொட்டி பங்கிங்ஹாம் அரண்மனை அருகே 41 பீரங்கி குண்டுகள் முழங்க அவருக்கு மரியாதை அளிக்கப்பட்டது. தொடர்ந்து லண்டனில் 61 குண்டுகள் முழங்க மரியாதை அளிக்கப்பட்டது. 65 ஆண்டுகள் ஆட்சியை நினைவுகூரும் வகையில், பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட நாணயங்கள் மற்றும் தபால் தலையும் வெளியிடப்படுகிறது. விழாவை முன்னிட்டு 2014ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட ராணி எலிசபெத்தின் புகைப்படத்தை அரச குடும்பத்தினர் மீண்டும் வெளியிட்டு இருந்தனர். இந்த புகைப்படத்தில் ராணி, தனது தந்தை 1947ஆம் ஆண்டு திருமண பரிசாக அளித்த நீலக்கல் நகைகளை அணிந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



### சவூதியில் புதிய மாற்றம்:

# அரச குடும்ப ஏற்பாட்டில் கலை கட்டியது மகளிர் தினம்

சவூதி தலைநகர் ரியாத்தில் முதன் முறையாக மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது

சவூதி அரேபியாவில் பெண்களுக்கு வாகனம் ஓட்டத் தடை, ஓட்டுநர் உரிமம் பெற அனுமதி மறுப்பு போன்ற கடும் கட்டுப்பாடுகள் உள்ளன. சர்வதேச அளவில் பாலின சமத்துவம் அடிப்படையிலான தரவரிசையில் 145 நாடுகளில் சவூதி 134ஆவது இடத்திலுள்ளது.

இந்நிலையில், சவூதி தலைநகரான ரியாத்தில் முதன் முறையாக மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது. அங்குள்ள கிங் பஹத் கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் முதல் 3 நாட்கள் பெண்கள் தினம் கொண்டாட்டம் நடைபெறுகிறது. சவூதி இளவரசி அல் ஜாஹரா பின்ட் அல் சவுத் இதனை நடத்துகிறார்.

இதில் கலந்துகொண்ட பெண்கள் வாகனம் ஓட்டுவதற்கு உரிமை, ஆணாதிக்கத்துக்கு முடிவு உள்ளிட்டவை குறித்து தீவிரவமாக விவாதித்தனர். இந்த நிகழ்ச்சியில் சவூதி அரச குடும்பத்தை சேர்ந்த பெண்களும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.



# ஜப்பானின் கழிவகற்றும் முயற்சி தோல்வி

பூமிக்கு மேல் விண்வெளியிலுள்ள கழிவுகளை அகற்றும் ஜப்பானின் முயற்சி தோல்வியில் முடிவடைந்துள்ளது.

விண்வெளிக்கு அனுப்பப்படும் ரொக்கெட்டுகள், செயற்கை கோள்கள் செயலிழந்த பின் புவிஈர்ப்பு சக்தி இல்லாததால் அங்கேயே தங்கி மிதக்கின்றன. மேலும் அவற்றின் உடைந்த பாகங்களும் கழிவுகளாக மாறி சுற்றித்திரிகின்றன.

அதுபோன்று 10 கோடி கழிவு துண்டுகள் பூமியை சுற்றித்திரிகின்றன. அவை பூமி மீதும் ஆய்வுக்கு அனுப்பப்படும் ரொக்கெட்டுகள் மற்றும் செயற்கை கோள்கள் மீதும் மோதும் அபாயமுள்ளது.

அக்கழிவுகளை அகற்றும் பணியில் ஜப்பான் ஏரோஸ் பேஷ் ஆராய்ச்சி நிறுவன விஞ்ஞானிகள் ஈடுபட்டனர். மீன்பிடி வலை கம்பெனியின் உதவியுடன் எலெக்ட்ரோ டைனமிக் கயிறு தயாரித்து அதன் மூலம் கழிவுகளை பூமிக்கு அருகில் கொண்டு வந்து அவற்றை எடுத்து அழிக்க முயற்சி மேற் கொள்ளப்பட்டது.

ஆனால் ஜப்பானின் இந்த முயற்சி வெற்றிபெறவில்லை. மாறாக தோல்வியில் முடிவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# கேள்விக்குறியானது சசியின் பதவியேற்பு




தமிழக ஆளுநர் மும்பைக்கு சென்றதால் சசிகலா முதலமைச்சராக பதவியேற்பு நிகழ்வு ரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் கூட்டத்தில் சட்டப்பேரவை கட்சித் தலைவராக ஒருமனதாக சசிகலா தேர்வு செய்யப்பட்டார். அதற்கு முன்னதாக, முதல்வர் பதவியை ஓ.பன்னீர்செல்வம் இராஜினாமா செய்தார். இந்த இராஜினாமாவும் ஆளுநரால் ஏற்கப்பட்டது. தற்போது அடுத்த அமைச்சரவை பதவியேற்கும் வரையில், தமிழக முதல்வராக பன்னீர்செல்வமே தொடர்கிறார்.

சட்டப்படி, தமிழக ஆளுநரிடம், சசிகலா தனக்கு எம்.எல்.ஏக்கள் ஆதரவு இருப்பதை நிரூபிக்கும் வகையில், சட்டப்பேரவை கட்சித் தலைவராக தேர்வு செய்யப்பட்டதற்கான கடிதத்தை அளிக்க வேண்டும். தொடர்ந்து, ஆட்சி அமைக்க சசிகலா உரிமை கோர வேண்டும். அதையேற்று, ஆளுநர் பதவியேற்பு திகதியை உறுதி செய்து ஆட்சிப் பொறுப்பேற்க அழைப்பார். தொடர்ந்து, முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைப்பார்.

நேற்றுமுன்தினம் முதலே, தமிழக அமைச்சர்கள், அரசு அதிகாரிகள் சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு விழா அரங்கில், பதவியேற்பு விழாவுக்கான ஏற்பாடுகளை ஆரம்பித்துள்ளனர். இதையடுத்து, விழா ஏற்பாடுகள் முழுவீச்சில் நடந்து வருகின்றன.

அதேபோல், தமிழக அரசின் பொதுத் துறை அதிகாரிகள், ஊழியர்கள் தலைமைச் செயலகத்திலேயே இருக்கும்படி பணிக்கப்பட்டனர். திகதி மற்றும் நேரம் குறிப்பிடப்படாமல் பதவியேற்புக்கான அழைப்பிதழ் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், ஆளுநர் வருகையைத் தொடர்ந்து அடுத்தகட்ட நடவடிக்கை தொடரும் என்றும் தலைமைச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆளுநரின் நிகழ்ச்சிப்படி, அவர் நேற்று 7ஆம் திகதி) கோவை பாரதியார் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் பங்கேற்க வேண்டும். அதற்காக அவர் நேற்றுமுன்தினம் இரவு சென்னை அல்லது கோவைக்கு வரவேண்டும்.

எனவே, சென்னை அல்லது கோவையில் எங்கு வேண்டுமானாலும் ஆளுநரை சந்திக்க சசிகலாவும், மூத்த அமைச்சர்களும் தயாராக இருந்தனர். ஆனால், ஆளுநர் வருகை தொடர்பான எந்த தகவலும் வரவில்லை.

இதற்கிடையில், பாரதியார் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவுக் கான அழைப்பிதழ் நேற்றுமுன்தினம் இரவு வழங்கப்பட்டது. அதில் ஆளுநர் பெயர் இடம்பெறவில்லை. இதனால், ஆளுநர் வித்யாசாகர் ராவ் கோவைக்கு செல்லவில்லை என்பது தெளிவாகிவிட்டது.

இதனிடையே ஆளுநரின் வருகை உறுதிசெய்யப்படாததினால் நேற்று நடைபெறவிருந்ததாக தெரிவிக்கப்பட்ட சசிகலா முதல்வராக பதவியேற்கும் நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் சசிகலா எப்போது முதல்வராக பதவியேற்பார் என்ற கேள்விக்கு விடை தெரியவில்லை.

# டிரம்ப்பின் பயணத்தடையை எதிர்த்து 100 நிறுவனங்கள் கூட்டு வழக்கு



அமெரிக்க வணிகத்தில் ஜனாதிபதி டிரம்பின் பயணத்தடை உத்தரவானது குறிப்பிடத்தக்க பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக கூறி அப்பிள், பேஸ்புக் மற்றும் கூகுள் உட்பட அமெரிக்காவில் பெரிய தொழில் நுட்ப நிறுவனங்கள் கூட்டாக வழக்கொன்றை தொடுத்துள்ளனர்.

சான் பிரான்சிஸ்கோவிலுள்ள மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் குறைந்தது 100 தொழில் நிறுவனங்கள் இந்த மனுவில் கையெழுத்திட்டு தாக்கல் செய்துள்ளனர்.

இம் மனுவில் சில தொழில் நுட்பம் சாராத லெவி ஸ்டரொஸ் போன்ற நிறுவனங்களும் கையெழுத்திட்டுள்ளன.

தற்போது தடையிலுள்ள ஏழு முக்கிய நாடுகளிலிருந்து அமெரிக்காவிற்கு வர விதிக்கப்பட்ட தடை ஆணையால் வெளிநாடுகளில் தங்களுடைய சேவையை விரிவுபடுத்துவதற்கு தேவையான திறமையானவர்களை ஈர்க்க அமெரிக்க நிறுவனங்களுக்கு கடினமாக இருப்பதாக அந்த அறிக்கை கூறுகிறது.

மேலும், அமெரிக்காவிலுள்ள 500 மதிப்புமிக்க நிறுவனங்களில் பாதி நிறுவனங்கள் குடியேறிகள் அல்லது அவர்களுடைய குழந்தைகளால் நிறுவப்பட்டுள்ளதாக அந்த அறிக்கை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

### துருக்கியில் ஒரே நாளில்

# ஐ.எஸ். ஆதரவாளர்கள் 400 பேர் மடக்கிப்பிடிப்பு



துருக்கியில் பொலிஸார் நடத்திய அதிரடி சோதனையில் ஒரே நாளில் 400 ஐ.எஸ். ஆதரவாளர்கள் மடக்கிப்பிடிக்கப்பட்டுள்ளனர்.

சிரியாவை ஒட்டிய துருக்கியிலும் ஐ.எஸ் தீவிரவாத அமைப்பு வலுவாக காலூன்ற ஆரம்பித்துள்ளது. அந்நாட்டில் கடந்தாண்டு பல்வேறு குண்டுவெடிப்பு சம்பவங்கள் நிகழ்ந்தன. இதற்கு ஐ.எஸ். அமைப்பு காரணமாக இருக்கலாம் என குற்றம்சாட்டப்பட்டாலும், அந்த அமைப்பு பொறுப்பேற்கவில்லை. இதற்கிடையே, தலைநகர் இஸ்தான்புல்லில் புத்தாண்டு இரவு, விடுதியொன்றில் கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்த 39 பேரை தீவிரவாதி சுட்டுக் கொன்றான். முதல் முறையாக இதற்கு ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்றது.

இதேபோல, மேலும் பல நாச வேலைகளில் ஈடுபட ஐ.எஸ். அமைப்பு தயாராகி வருவதாக உளவுத்துறைக்கு தகவல்கள் கிடைத்தன. அதன் அடிப்படையில், நேற்றுமுன்தினம் ஒரே நாளில் நாடு முழுவதும் பொலிஸார் அதிரடி வேட்டையில் ஈடுபட்டனர். இதில், 400 ஐ.எஸ். ஆதரவாளர்கள் பிடிபட்டுள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் வெளிநாட்டைச் சேர்ந்தவர்களாவர்.

அதிகபட்சமாக, சிரியா எல்லையை ஒட்டிய சன்லியுர்பா நகரில் 150 பேரும், காஜியன்டேப் நகரில் 47 பேரும் சிக்கினர். தலைநகர் அங்காராவின் 4 மாவட்டங்களில் 60 பேர் பிடிபட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் வெளிநாட்டவர்கள். இதுதவிர, சந்தேகத்திற்கு இடமான 10 குழந்தைகள் உட்பட 14 வெளிநாட்டவர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர். ஒரே நாளில் 400 ஐ.எஸ். ஆதரவாளர்கள் சிக்கியிருப்பது துருக்கியில் பதற்றத்தை அதிகரித்துள்ளது.

## உலகச் செய்திகள்

# நீதிமன்ற தடை உத்தரவு அமெரிக்காவுக்கு ஆபத்து



விசா வழங்கும் விவகாரத்தில் 7 முஸ்லிம் நாடுகளுக்கு தடை விதித்த உத்தரவுக்கு நீதிமன்றம் தடை விதித்தால் எரிச்சலடைந்துள்ள அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப், ''அமெரிக்கர்களுக்கு ஆபத்து'' என்று குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் ஜனவரி 27ஆம் திகதி ஈரான், ஈராக், லிபியா, சோமாலியா, சூடான், சிரியா, யெமன் ஆகிய 7 நாடுகளில் உள்ளவர்களுக்கு விசா வழங்கவும், அகதிகளுக்கு அடைக்கலமளிக்கவும் தடை விதித்தார். இந்த உத்தரவுக்கு அமெரிக்கா மட்டுமல்லாமல் உலகம் முழுவதும் கடும் எதிர்ப்பு கிளம்பியது.

அமெரிக்காவின் முக்கிய நகரங்களில் பேரணி மற்றும் ஆர்ப்பாட்டம் நடைபெற்று வருகின்றன. கடந்த வெள்ளிக்கிழமை சியாட்டில் நகர நீதிபதி ஜேம்ஸ் ரொபர்ட் விசா வழங்கும் விவகாரத்தில் ஜனாதிபதி டிரம்ப் உத்தரவுக்கு தடை விதித்து தீர்ப்பளித்தார். இதனால் கடும் அதிருப்தியடைந்த டிரம்ப் கடந்த சனிக்கிழமை டுவிட்டர் மூலம் நீதித்துறையை கடுமையாக விமர்சனம் செய்தார். அதில்,

''நீதிபதியின் இந்த தீர்ப்பினால், மிக ஆபத்தானவர்கள் நாட்டுக்குள் வர வாய்ப்பு இருக்கிறது. இது மிக மோசமான முடிவு'' என்று விமர்சனம் செய்துள்ளார். மேலும் நீதிபதியின் உத்தரவை எதிர்த்து மேன்முறையீடு செய்ய உத்தரவிட்டார். ஆனால், அதையும் நீதிமன்றம் நிராகரித்துவிட்டது. இதனால் டிரம்ப் கடும் அதிருப்தியடைந்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில்,

''ஒரு நீதிபதி நமது நாட்டை அபாயத்தில் தள்ளுவார் என்பதை என்னால் நம்ப முடியவில்லை. ஏதாவது விபரீதம் நடந்தால், அவரையும் நீதிமன்ற அமைப்பையும்தான் குறை சொல்வார்கள். மக்கள் அமெரிக்காவிற்குள் நிரம்பி வழிகிறார்கள். இது மிகவும் மோசமானது. அமெரிக்காவுக்கு வரும் மக்களை மிகுந்த கவனத்துடன் பரிசோதிக்குமாறு உள்நாட்டு பாதுகாப்பு அதிகாரிகளை அறிவுறுத்தியுள்ளேன். நீதிமன்றங்கள் வேலையை கடினமாக்கியுள்ளன'' என்று தெரிவித்துள்ளார்.

மேலும் ஊடகமொன்றுக்கு அளித்த பேட்டியில், ஒரு நீதிபதி தவறு செய்துவிட்டார். அதை பாஸ்டன் நீதிமன்றம் சரி செய்யும் என்று நம்புகிறோம். நமது நாட்டு மக்களை காப்பாற்ற தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

அமெரிக்கா இதுவரை என்ன செய்தது என்று பார்த்தால் நாமும் அதிக தவறு செய்து இருப்பது தெரிய வரும். ஈராக் போர் தொடக்கத்தில் நான் அதை எதிர்த்தேன். இப்படி ஏராளமான தவறுகள். அதில் ஏராளமான மக்கள் கொல்லப்பட்டார்கள். அதனால் உலகம் முழுவதும் ஏராளமான கொலைகாரர்கள் உருவாகி விட்டனர். என்னை நம்புங்கள்.

அமெரிக்காவிலும் ஏராளமான கொலைகாரர்கள் உள்ளனர். உலக நாடுகளை குறைகூறிவிட்டு அமெரிக்கர்கள் மட்டும் அப்பாவிகள் என்பதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால் ஐ.எஸ் அமைப்புக்கு எதிரான போரில் ரஷ்யாவுடன் இணைந்து செயற்பட விரும்புகிறேன். நான் புதினை மதிக்கிறேன். அவரும் ஒருநாட்டின் தலைவர். ஐ.எஸ். தீவிரவாதத்திற்கு எதிராக அவர் போராடுகிறார். அப்படி பார்த்தால் அவர் அமெரிக்காவிற்கு உதவுகிறார். - இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவுக்கு ஆதரவாக அவர் அளித்த பேட்டி தற்போது பாரிய சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மிரட்டும் சீனா



அமெரிக்க ஜனாதிபதியாக டிரம்ப் பதவியேற்ற பின்னர் சீனா தொடர்ந்தும் தனது இராணுவ பலத்தை அதிகரித்து வருகிறது.

கடந்த வாரம் 10 அணு குண்டுகள் ஏவக்கூடிய ஏவுகணை சோதனையை நடத்தியது. தற்போது மீண்டும் கண்டம்விட்டு கண்டம் பாயக்கூடிய அளவிலான நவீன ஏவுகணையுடன் போர்ப் பயிற்சி நடத்தியுள்ளது. இந்த போர் பயிற்சி வெற்றிகரமாக நடந்து முடிந்துள்ளது. இதுதொடர்பான வீடியோவொன்றை சீனா வெளியிட்டுள்ளது.

பீஜிங்கிலுள்ள நவீன ரொக்கெட் ஏவுதளத்தில் இந்த பயிற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. நடுத்தர அளவில் குறைந்த தூரத்தை தாக்கும் வகையில் தயார் செய்யப்பட்ட டி.எப்-16 என்ற அதிநவீன கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை சீன வீரர்கள் ஏவவிட்டு இலக்கை தாக்க வைத்து போர் பயிற்சி மேற்கொண்டனர்.

இந்த ஏவுகணை 1000 கி.மீ. தூரம் சென்று தாக்கக்கூடியது. இந்தியா, ஜப்பான், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளை மிரட்டும் வகையில் சீனா இந்த சோதனையை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கப்பாவில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மீது எரிவாயுவை ஊற்றிக்கொண்டு, ஒருவர் தற்கொலை செய்ய முயற்சித்தபோது, அருகிலுள்ள ஒருவர் அது குறித்து சத்தம் போட பாதுகாப்பு படையினர் அங்கு வந்து, அவரை கைது செய்துள்ளனர். 40 வயதான இவர், ஒரு மனநோயாளி என பொலிசார் தெரிவித்தனர்.

## குடிவரவு, குடியகல்வு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார். குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டாளர் நிமல் ரனசிங்கவை நேற்று சந்தித்ததைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். உலகின் பல்வேறு நாடுகளும் பயங்கரவாத சூழ்நிலை காரணமாக நாட்டின் குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டங்களை கடினப்படுத்தியுள்ளதாகவும், இலங்கையில் இதுவரை எவ்வித முன்னேற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது, கற்றுலா விசாக்களில் நாட்டினுள் ஊடுருவும் சிலர் பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். கிறிஸ்தவ மற்றும் இஸ்லாம் மத பிரசாரமும் இடம்பெறுகின்றது. தீவிரவாதம் போதிக்கப்படுகின்றது. இலங்கையில் குடிவரவு மற்றும் குடியகல்வு நடவடிக்கையில் இலகுவான சட்டங்கள் இருப்பதே இதற்குக் காரணமாகும். இந்த சட்ட திட்டங்களில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படுவதன் அவசியம் குறித்து திணைக்கள கட்டுப்பாட்டாளரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளோம்.- என்றார்.

## கேப்பாபிலவு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நேற்று முன்தினம்ப் (06.02.2016) மாலை ஜனாதிபதி தலைமையில் பிரதமரின் பங்குபற்றுதலுடன் இடம் பெற்ற அரசாங்க பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

சுதந்திர தினத்தன்று அந்தப் பிரதேசத்துக்கு தான் சென்றபோது கேப்பாபிலவு மக்கள் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்று பாராது கேப்பாபிலவு விமானப் படை முகாமுக்கு முன்னால் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். படையினர் வசமிருக்கும் தமது காணிகளை விடுவித்துத்தறுமாறு கோரியே அவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர். தமக்குரித்தான காணிகளை கையளிப்பதாக படையினர் பல தடவைகள் உறுதிமொழிகள் வழங்கியும் இன்னும் அது நடைபெறவில்லை என அவர்கள் குற்றஞ்சாட்டி வருகின்றனர். பொதுமக்களின் 500 ஏக்கர் காணிகளை படையினர் கையகப்படுத்தியுள்ளதாக அவர்கள் கூறுகின்ற போதும் படையினரும்,அதிகாரிகளும் வேறுவிதமான புள்ளிவிபரங்களை தெரிவிக்கிறைனர். எனவே இந்தப் பிரச்சினைக்கு முடிவு காணும் வகையில் சுதந்திரமான ஆணைக்குழுவொன்றை அமைத்து அதனைத் தீர விசாரித்து நியாயமான தீர்வை மேற்கொள்ள வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். அத்துடன் 2012 ஆம் ஆண்டில் வனபரிபாலன திணைக்களம் வர்த்தமானி அறிவித்தலின் மூலம் மக்களின் காணிகளை சுவீகரித்ததாக இவர்கள் தெரிவிக்கின்றனர். எனவே 2012 ஆம் ஆண்டு வனபரிபாலனத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் தொடர்பிலும் ஒரு நடுநிலையான விசாரணையை நடாத்தி பாதிக்கப்பட்டவர்களக்கு நீதி பெற்றுக் கொடுக்க வேண்டும். இவ்வாறு அமைச்சர் குறிப்பிட்ட போது ஜனாதிபதி இந்த விடயங்களை தனக்கு எழுத்து மூலம் தருமாறும், உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் அங்கு உறுதியளித்தார்.

## மேற்கு கரை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கட்டப்பட்டுள்ள 4000 வீடுகளை முன்திகதியிட்டு சட்டப்பூர்வமாக்கி தாக்கல் செய்யப்பட்ட ஒரு சர்ச்சைக்குரிய சட்டம், இஸ்ரேலிய பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த சட்டத்திற்கு ஆதரவாக 60 வாக்குகளும், எதிராக 52 வாக்குகளும் கிடைத்துள்ளன.

இந்த சட்டத்தின்படி, குறிப்பிட்ட நிலத்தின் உண்மையான உரிமையாளரான பலஸ்தீனருக்கு அவருடைய நிலத்திற்கு பதிலாக பணம் அல்லது வேறு நிலம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுறது.

பரந்தளவில் சர்வதேச ரீதியாக எதிர்ப்பு இருந்தபோதும், முந்திய அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவை விட இஸ்ரேல் குடியேற்றங்கள் தொடர்பாக மென்மையான அணுகுமுறையை புதிய அமெரிக்க ஜனாதிபதியான டொனால்ட் டிரம்ப் கடைபிடிக்கிறார்.

டிரம்ப் தலைமையில் புதிய அமெரிக்க நிர்வாகம் பொறுப்பேற்ற பின்னர் துணிச்சல் பெற்றுள்ள இஸ்ரேல், ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை பகுதியில் ஆயிரக்கணக்கான வீடுகளுக்கு ஒப்புதலளித்தது உட்பட அண்மைய வாரங்களில் குடியேற்றங்களுக்கு ஆதரவான பல நடவடிக்கைகளை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கூட்டாக...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

செயலணியின் தலைவருமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் தன்னைச் சந்தித்த முஸ்லிம் தூதுக் குழு ஒன்றிடம் இதனைத் தெரிவித்தார்.

முஸ்லிம் கவுன்சில் ஒப் ஸ்ரீலங்காவின் ஏற்பாட்டில் முஸ்லிம் இயக்கங்களின் தூதுக்குழு ஒன்று முன்னாள் ஜனாதிபதியைச் சந்தித்து முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து விரிவான அறிக்கை ஒன்றைக் கையளித்தது.

முஸ்லிம்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் வெறுப்புப் பேச்சுக்கள் மற்றும் பள்ளிவாசல்கள் தாக்குதல்கள் தொடர்பாகவும் அது தொடர்பாக சட்டமும் ஒழுங்கும் பேணப்படாது குறித்து தூதுக்குழுவினர் எடுத்து விளக்கினர். 2013 முதல் 2015 வரை முஸ்லிம்களுக்கெதிராக 550 சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இவை தொடர்பாக சட்டமும் நீதியும் நிலைநாட்டப்படாதிருப்பது குறித்து முஸ்லிம் சமூகம் கவலை கொண்டுள்ளது என தூதுக்குழுவினர் சுட்டிக்காட்டினர்.

அண்மைக்காலமாக முஸ்லிம்களுக்குரிய சில வர்த்தக நிலையங்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது குறித்தும் தூதுக்குழுவினர் முன்னாள் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களினால் பயிர் செய்யப்பட்ட காணிகள் புதை பொருளாராய்ச்சி வன ஒதுக்கை, வன ஜீவராசிகள் வலயம், சுற்றுலா அபிவிருத்தி பௌத்த ஆலயங்களுக்குரிய காணிகள், என பலவந்தமாக சுவீகரிக்கப்படுகின்றன. இக் காணிகள் 50 வருடங்களுக்கு மேலாக முஸ்லிம்களால் பயிரிடப்பட்ட மற்றும் அனுமதிப்பத்திரங்கள் உள்ளவையாகும் என்றும் தூதுக்குழுவினர் முன்னாள் ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறினர்.

முஸ்லிம் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை, மௌலவி ஆசிரியர் நியமனம், அரச துறைகளில் முஸ்லிம்களுக்குப் போதிய இடமளிக்கப்படாமை, நிர்வாக சேவையில் சேவை மூப்புள்ளி, முஸ்லிம் உத்தியோகத்தர்களுக்குரிய பதவி உயர்வுகளில் வழங்கப்படாதிருப்பது குறித்தும் தூதுக்குழுவினர் முன்னாள் ஜனாதிபதியின் அவதானத்திற்குக் கொண்டு வந்தனர்.

மாகாண முஸ்லிம்களது மீள் குடியேற்றம் தொடர்பாக அரசு இன்றும் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படாததது குறித்தும் இங்கு தூதுக்குழுவினர் எடுத்துக் கூறினார்.

முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எங்களைப் போன்ற ஒழுங்கமைப்புடன் இயங்கும் சிவில் அமைப்புக்கள் அழுத்தம் கொடுத்து இப்பிரச்சினைகளை அரசின் கவனத்திற்கு கொண்டு வர வேண்டும்.தமிழ்த் தலைவர்கள் போன்று முஸ்லிம் அரசில் தலைவர்களும் செயற்பட அழுத்தம் கொடுங்கள். நானும் என்னால் முடிந்த சகல நடவடிக்கைகளையும் எடுப்பேன். விரைவில் இப்பிரச்சினைகள் தொடர்பான அமைச்சர்களை அழைத்துப் பேசுவேன். கிழக்கு மாகாண காணிப் பிரச்சினை குறித்து அம்பாறை அரச அதிபரை அழைத்துப் பேசுவேன் என்றும் முன்னாள் ஜனாதிபதி தூதுக்குழுவினருக்கு வாக்குறுதியளித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் அஷ்ரபைத் தவிர முஸ்லிம் தலைவர்கள் எவரும், தம் சமூக உரிமைகளுக்காக போராடுவதில்லை என்று தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி, தனது அரசாங்க காலத்தில் அஷ்ரபுக்கும் ஏ.எச்.எம். பௌசிக்கும் முக்கிய அமைச்சுக்கள், பதவிகளை வழங்கினேன். அவற்றின் மூலம் முஸ்லிம்களுக்கு தொழில்வாய்ப்புக்கள் வழங்குவதற்குமே என்றும் தெரிவித்த அவர், அமைச்சர் அஷ்ரப் துறைமுகத்தில் பெருந்தொகையான முஸ்லிம்களுக்கு தொழில் வழங்கினார் என்றும் குறிப்பிட்டார்.

முஸ்லிம் கவுன்சில் ஒப் ஸ்ரீலங்காவின் தலைவர் என். எம். அமீனின் தலைமையில் அதன் உப தலைவர் ஹில்மி அஹமட் , அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் உதவிச் செயலாளர் மௌலவி. எம்.எஸ்.எம். தாஸிம், சோனக இஸ்லாமிய கலசார நிலையத்தின் தலைவர் உமர் காமில், அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனத் தலைவர் பி.எம். பாரூக், பொருளாளர் எம்.என்.எம். நஃபீல், அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவைத் தலைவர் தௌபீக் சுபைர், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் உப தலைவர் எம்.ஏ.எம். நிலாம், கிழக்கு மாகாண காணிச் செயலணியின் உறுப்பினர்களான எம்.ஐ. உதுமாலெப்பை, கே. நிஹால் அஹமட், எஸ்.எல். ரியாஸ், ஆலோசனை மற்றும் நல்லிணக்கப் பேரவையின் தலைவர் அஸ்லம் ஒத்மான் ஆகியோரும் தூதுக்குழுவில் இடம்பெற்றனர்.

முன்னாள் ஜனாதிபதியுடன் செயலணியின் பணிப்பாளர்களான எம்.எஸ். ஜயசிங்க, ஜாவிட் யூசுப், தனேஷ் காசி செட்டி, பிரதிப் பணிப்பாளர் சல்மா யூசுப், ஊடக அதிகாரி ஹிஷாம் மொஹமட் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## உள்ளூராட்சி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நிர்ணய அறிக்கையின் தரம் தொடர்பான கலந்துரையாடலொன்று இடம்பெற இருப்பதாகவும் இன்றையதினம் உள்ளூராட்சிமன்ற தேர்தல் தொடர்பான முக்கிய தீர்மானங்கள் வெளியிடப்படக்கூடிய சாத்தியம் இருப்பதாகவும் உள்ளூராட்சி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

ராஜகிரியில் அமைந்துள்ள தேர்தல் செயலகத்தில் இன்று மதியம் 12மணிக்கு இக்கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

எல்லை நிர்ணய மேன்முறையீட்டு அறிக்கையில் காணப்படும் சிக்கல்களின் காரணமாகவே உள்ளூராட்சி சபைகளுக்கான எல்லை நிர்ணயம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படுவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்திருந்தார். எனினும் இன்று தேர்தல்கள் ஆணையாளருடன் எல்லை நிர்ணய அறிக்கையின் தரம் குறித்து நடைபெறவுள்ள கலந்துரையாடலைத் தொடர்ந்து வர்த்தமானி மற்றும் உள்ளூராட்சிமன்ற தேர்தல் தொடர்பான பல முக்கிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## தகவல் அறியும்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கொண்டுசெல்ல டிரான்ஸ்பெரன்ஸி இன்டநெஷனல் ஸ்ரீ லங்கா மற்றும் சர்வோதய அமைப்பு இணைந்து கொழும்பு, மாத்தறை, திருகோணமலை, அநுராதபுரம், இரத்தினபுரி மற்றும் வவுனியா ஆகிய பிரதேசங்களில் செயற்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரசாங்கத்தில் மக்களின் பங்குபற்றலை உறுதிசெய்ய சுகாதாரம், கற்றாடல், கல்வி, ஊழல், சட்டம் மற்றும் ஒழுங்கு ஆகிய துறைகளில் இந்த சட்டமூலத்தை எவ்வாறு பயன்படுத்தலாம் என்ற வழிகாட்டல் பொதுமக்களுக்கு அவசியமாக இருக்கின்றது. ஜனாதிபதி, பிரதமரின் சொத்து விபரங்கள் குறித்து தகவல் அறியும் சட்டமூலத்தின் கீழ் டிரான்ஸ்பெரன்ஸி இன்டநெஷனல் ஸ்ரீ லங்கா தகவல் கோரியுள்ளது. மக்கள் உரிமை எது என்பதை மக்களுக்கு அறியச்செய்வதே எமது முயற்சியாகும்- என்றார்.

## தமிழ் மொழி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தென்மாகாண சபை ஆசிரியர் நியமனங்களில் தென் மாகாணத்தைச் சேர்ந்த முஸ்லிம் பட்டதாரிகள் புறக்கணிக்கப்படுவது குறித்து நேற்று அவரைசந்தித்து முஸ்லிம் கவுன்சில் தூதுக்குழுவினரை எடுத்துக் கூறிய போது அமைச்சருடன் தொடர்பு கொண்ட முன்னாள் ஜனாதிபதி தென் மாகாணத்தை சேர்ந்த முஸ்லிம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படாமை குறித்து விபரங்களை கேட்டறிந்த பின் இந்த ஆலோசனையை வழங்கினார்.

தமிழ் மொழிப்பாடசாலைகளில் நிறைய ஆசிரியர் பற்றாக்குறையுள்ளது. அதேநேரம் சிங்களப் பாடசாலைகளுக்கும் தமிழ் பாடம் போதிக்க ஆசிரியர்கள் தேவையாக உள்ளனர். எனவே இந்த ஆசிரியர்களை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமபாறு மக்கள் ஜனாதிபதி ஆலோசனையை வழங்கியுள்ளார்.

## சூரிய ஒளி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

சூரிய ஒளி மற்றும் காற்றின் விசை மூலம் மின் உற்பத்தி செய்து இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே சமுத்திர மின் கம்பிக் கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ளதாக மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பிரதியமைச்சரான அஜித் பி. பெரேரா தெரிவித்தார்.

அதேநேரம், இதனை மேற்கொள்வதற்கான உதவிகள் இன்னும் கிடைக்கப்பெறவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றில் நேற்றைய தினம் பேராசிரியர் ஆசு மாரசிங்க எம்.பியால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இக்கருத்தினை முன்வைத்தார்.

இதுதொடர்பில் அவர் தெரிவிக்கையில், சமுத்திர மின் கம்பிக் கருத்திட்டம் தொடர்பில் இலங்கை-இந்தியாவுக்கு இடையில் 2010 ஆம் ஆண்டு ஒப்பந்தங்கள் செய்துக் கொள்ளப்பட்டுள்ளன. சூரிய ஒளி மற்றும் காற்றின் விசை மூலம் முதல் கட்டமாக 500 மெகாவோல்ட் மின் உற்பத்தியும் பின்னர் மேலும் 500 மெகாவோல்ட் மின் உற்பத்தியும் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் இந்தியாவுக்கு மின் தட்டுப்பாடு ஏற்படும் போது இலங்கையிலிருந்தும், இலங்கைக்கு மின் தட்டுப்பாடு ஏற்படும் போது இந்தியாவிலிருந்தும் மின் சக்தி பரிமாற்றம் செய்யப்படும். இதனால் எமக்கு பாரிய இலாபத்தையும் ஈட்ட முடியும்.

இத்திட்டத்தை நிறைவு செய்ய 554 மில்லியன் அமெரிக்க டொலர் தேவை என்று மதீப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதன் முதல் கட்டத்தை 372 மில்லியன் அமெரிக்க டொலர்களில் நிறைவு செய்யவும் முடியும். இதற்காக இரு நாடுகளும் தலா 50 வீத பங்களிப்பை வழங்க வேண்டும்.

எனினும், இலங்கை அரசு இவ்வளவு பெரிய தொகையை அவசரமாக முதலீடு செய்யாது. ஆகையால் இத்திட்டத்தை 2020 இற்குள் நிறைவு செய்ய எம்மால் முடியாதுள்ளது. நாங்கள் இந்த விடயம் குறித்து முதலீட்டாளர்களுடன் கலந்துரையாடி வருகின்றோம் என்றார்.

இதன்போது, ஏற்கனவே 100 மெகாவோல்ட் உற்பத்திக்கான திட்டமொன்று மும்மொழியப்பட்ட போதிலும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்நிலையில் இத்திட்டம் சாத்தியப்படுமா? என ஆசு மாரசிங்க எம்.பி. எழுப்பிய குறுக்குக் கேள்விக்கு பதில் அளித்த பிரிதியமைச்சர் அஜித் பி.பெரேரா, ஆசியா அபிவிருத்தி வங்கியின் உதவி இத்திட்டத்துக்கு கிடைத்துள்ளது. எனவே, இத்திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் என்றார்.

## திவுலப்பிட்டிய...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

திவுலப்பிட்டிய மணல் அகழ்வு விவகாரம் தொடர்பில் நேற்றைய தினம் பாராளுமன்றில் பெரும் சர்ச்சை எழுந்தது. இதுவிவகாரம் தொடர்பில் காணி அமைச்சிடம் ஒருங்கிணைந்த எதிரணி உறுப்பினரான இந்திக்க அநுருத்த ஹேரதினால் எழுப்பப்பட்ட கேள்விக்கு அந்த விடயப்பரப்புக்கு பொறுப்பற்ற சமூக வலுவூட்டல் பிரதியமைச்சரான ரஞ்சன் ராமனாயக்க பதில் அளிக்க முற்பட்டமையாலேயே இந்த சர்ச்சை வெடித்தது.

பாராளுமன்றம் நேற்று முற்பகல் 1 மணிக்கு சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடியது. பொது மனுக்கள் சமர்ப்பிப்பை அடுத்து இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தின்போது, கம்பஹா மாவட்ட ஒருங்கிணைந்த எதிரணியின் பாராளுமன்ற உறுப்பினரான இந்திக்க அநுருத்த ஹேரத்தினால், கடந்த சில நாட்களாக நாட்டில் பரவலாகப் பேசப்படும் திவுலப்பிட்டிய அரச காணி தொடர்பில் காணியமைச்சர் ஜோன் அமரதுங்கவிடம் கேள்விகள் எழுப்பப்பட்டன.

எனினும், குறித்த நேரத்தில் அமைச்சர் சபையில் பிரசன்னமாகியில்லாத காரணத்தினால் பிரதியமைச்சர் ரன்ஞன் ராமநாயக்க இதற்கு பதிலளிக்க முற்பட்டார். திவுலப்பிட்டிய தொகுதியில் மண் கொல்லையில் ஈடுபட்டவர்களே தற்போது அரச காணிகள் குறித்து கேள்வி எழுப்புவது வேடிக்கையாகும். என அவர் பதிலளிக்க ஆரம்பிக்கும்போதே குறுக்கிட்ட எதிர்க்கட்சிப் பிரதமக் கொறடாவான ஜே.வி.பியின் அநுரகுமார திஸாநாயக்க, இந்த விடயப்பரப்புக்கு பொறுப்பான அமைச்சர் இல்லையெனில் அதற்குப் பொறுப்பான பிரதியமைச்சர், பிரதமர், ஆளும் கட்சி பிரதம கொறடா, சபை முதல்வர் ஆகியோரில் ஒருவரே பதில் வழங்க முடியும். மாறாக விடயப்பரப்புக்கு பொறுப்பற்ற ஒருவர் பதில் வழங்குவது பாராளுமன்ற ஒழுக்கக் கோவைக்கே முரணானது என்றார்.

இதன்போது எழுந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நிலையியற்கட்டளை 27 இன் கீழ் பிரதமரான எனக்கு பதிலளிக்க முடியும். எனது இந்த வாய்ப்பினைத் தான் நான் பிரதியமைச்சர் ரன்ஞன் ராமநாயக்கவுக்கு நான் வழங்கியுள்ளேன் என்று குறிப்பிட்ட, இதற்கு சபை முதல்வரும் ஆதரவுத் தெரிவித்தார்;.

எனினும், இவ்வாறான யோசனையொன்று பாராளுமன்ற ஒழுக்கக் கோவையில் இல்லை என சுட்டிக்காட்டிய சபாநாயகர் கரு ஜயசூரிய, ஆளும் தரப்பிலிருந்து வேறு ஒருவர் இக்கேள்விக்கு பதில் வழங்குமாறு கேட்டுக்கொண்டார். அதற்கமைய ஆளும் கட்சி பிரதம கொறடாவான அமைச்சர் கயந்த கருணாதிலக பதில் வழங்கினார்.

அமைச்சர் பதில் வழங்கியபின்னர் குறுக்கிட்ட இந்திக்க எம்.பி, போர்ட் சிட்டிக்காக (துறைமுக நகரத்திட்டம்) திவுலப்பிட்டிய பிரதேசத்திலிருந்து மண் மற்றும் கருங்கல் அகழ்வதற்கான திட்டத்தை தனது ஆதரவாளருக்கு வழங்குமாறு ரன்ஞன் ராமனாயக்க கடிதமொன்றை அனுப்பியுள்ளதாக கூறினார்.

மேற்படிக் கருத்தினை முற்றாக நிராகரித்த பிரதியமைச்சர் ரன்ஞன், குறித்த கடிதம் பொய் என்றும் இந்தக் கருத்தானது தனது பெயருக்கு கலங்கம் ஏற்படுத்தும் வகையில் இருக்கின்றது என்றும் சுட்டிக் காட்டினார். மேலும், அந்தக் கடிதம் யாரால் யாருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்பதை ஆராய அரச இராசாயண பகுப்பாய்வுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். ஏனெனில் குறித்த கடிதத்தை ரஞ்சன் அனுப்பவில்லை. அவரது கையொப்பமும் அதில் இல்லை என்று பிரிதியமைச்சர் அஜித் பீ.பெரேரா குறிப்பிட்டார்.

ஆனால், நான் சபையில் சமர்ப்பித்துள்ள கடிதம் உண்மையானது. அது பொய்யானது என நிரூபிக்கப்படுமாயின் நான் எனது எம்.பி. பதவியையே இராஜினாமா செய்துக்கொள்வேன் என இந்திக்க அநுருத்த எம்.பி. குறிப்பிட்டார்.

இவ்வாறு இருதரப்புக்குமிடையிலான வாய்த்தரக்கமானது 30 நிமிடங்களைக் கடந்தும் நீடித்தது. இவ்விவகாரத்துக்கு பிரதியமைச்சர் ரன்ஞன் தொடர்ச்சியாக பதிலளிக்க முற்பட்டமையால் எதிரணியினரும் உட்காருங்கள்.உட்காருங்கள்.. இதற்கு பதிலளிக்க உங்களுக்கு அதிகாரம் கிடையாது. என மிகவும் சத்தமாக கருத்துக்களை வெளியிட்டனர்.

## அமைச்சர் நீங்கிய...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நேற்று (07) இந்த நியமனத்தை வழங்கியுள்ளார். மைத்திரி குணரத்ன, மின்சக்தி எரிபொருள் அமைச்சின் கீழ் இயங்கிய நிலக்கரி கூட்டுத்தாபனத்தின் தவிசாளராக பணிபுரிந்தபோது, அமைச்சர் ரஞ்சித் சியம்பாலாபிடியவினால் கடந்த வாரம் பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## சைடம் கல்வி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அந்நிறுவனத்தின் ஸ்தாபகத் தலைவர் டாக்டர் நெவில் பெர்னான்டோ தெரிவித்தார்.

நாட்டில் பேசுபொருளாக மாறியுள்ள சைடம் மருத்துவ நிறுவனம் மற்றும் சைடமின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் டாக்டர் சமீர சேனாரத்ன மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூடு தொடர்பாக நேற்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீடீரென சைடமை எதிர்ப்பதன் மூலம் அரசியல் இலாபம் தேட முற்படுவதாகவும், மக்கள் விடுதலை முன்னணியினர் 1983ஆம் ஆண்டைப் போன்று மாணவர்களை திசை திருப்ப முயற்சிப்பதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

சைடம் மாணவர்களின் உயர்தர பரீட்சை பெறுபேறுகள் தொடர்பாக குறைகூறுபவர்கள் பெறுபேறுகளை பரிசீலனை செய்து பார்க்கவேண்டும். தரம் குறைந்ததாக குற்றஞ்சாட்டுபவர்கள் எம்மோடு விவாதத்துக்கு வரவேண்டும். கல்வித் தரம் குறித்து சந்தேகம் தெரிவிக்கு அரச மருத்துவர்களின் சங்கத்தினரிடம் நாம் பல முறையும் எமது மாணவர்களுக்கான பொதுப் பரீட்சையொன்றை நடத்துபடி கேட்டிருந்தோம். அதற்கவர்கள் எந்த பதிலையும் தரவில்லை. இவ்விடயத்தில் பலரும் அரசியல் இலாபம் தேடமுற்படுகின்றனர்.

சைடமின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் டாக்டர் சமீர சேனாரத்ன மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூடு தொடர்பாக கேட்டபோது,

கடந்த 31ஆம் திகதி நீதிமன்ற தீர்ப்பின் பின்னர் பல தொலைபேசி மிரட்டல்கள் மற்றும் மிரட்டல் கடிதங்கள் கிடைத்தன. இம்மாதம் 3ஆம் திகதி முல்லேரியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றையும் மேற்கொண்டிருந்தேன். அவ்வாறிருக்கையிலேயே இத்துப்பாக்கி சூடு சம்பவம் இடம்பெற்றது. பொலிஸார் பிரத்தியேக பாதுகாப்பு ஏற்பாடுகளையும் செய்துள்ளனர்- என்றார்.

## சைடம்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மாலம்பே சைடம் தனியார் மருத்துவ கல்லூரியின் சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரியான வைத்தியர் சமீர சேனராத்ன மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி சூடு தொடர்பில் இரண்டு பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

பணி முடிந்து வீடு செல்லும் வழியில் சைடம் நிறுவன பிரதான கட்டடத்திலிருந்து சுமார் 700 மீற்றருக்கு அப்பால் உள்ள சந்திரிகா குமாரதுங்க மாவத்தைக்கு அண்மையில் வைத்தே நேற்றுமுன்தினம் இரவு 8.15 மணியளவில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

முகத்தை முழுமையாக மறைக்கும் தலைக்கவசம் அணிந்த மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே குறித்த துப்பாக்கிப்பிரயோகத்தினை மேற்கொண்டனர் என்றும், குறித்த அதிகாரி அதிஷ்டவசமாக உயிர்த்தப்பியுள்ளதாகவும், அவருக்கு எவ்வித பாதிப்பு ஏற்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தில் அவருடைய காரின், முன்பக்கத்தையும் பின்பக்கத்தில் வலதுபக்கத்தில் உள்ள கதவையும் துப்பாக்கி தோட்டாக்கள் துளைத்துச் சென்றுள்ளன. காரின் மீது துப்பாக்கிப் பிரயோகங்கள் நான்கு முறை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் நெவில் பெர்னான்டோ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு, இந்த துப்பாக்கி சூட்டினால் சமீர சேனாரத்ன அதிர்ச்சிக்கு உள்ளாகியுள்ளார். மேலும், சம்பவ இடத்தில் இருந்து இரண்டு வெற்றித் தோட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

## சந்திரிகாவிடம்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

டுபாய் வங்கி கணக்கில் நாமல் ராஜபக்ஷவின் பெயரில் ஒரு பில்லியன் டொலர் பணம் உள்ளதாகவும், முடியும் என்றால் தனக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யுமாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த ஞாயிறன்று அத்தனகல்லயில் இடம்பெற்ற கூட்டத்தில் சவால் விடுத்திருந்தார்.

இந்த கருத்தினால் தான் அவமதிக்கப்பட்டுள்ளதாகவும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு எதிராக அவமதிப்பு வழக்கொன்றை தாக்கல் செய்வதற்கு பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இந்த குற்றச்சாட்டிற்கு நீதிமன்றத்திற்கு முன்னால் சாட்சி வழங்குமாறும், அவ்வாறு இல்லை என்றால் தான் கோரும் ஒரு பில்லியன் ரூபா நஷ்டஈட்டினை வழங்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நவமணி
www.facebook.com/NavamaniOfficial

# Sports
## விளையாட்டுச் செய்திகள்




## இம்ருல் கெய்ஸ் நீக்கம்

இந்தியாவிற்கு எதிராக ஹைதராபாத்தில் எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ள ஒரே யொரு போட்டியைக் கொண்ட டெஸ்ட் தொடரிலிருந்து பங்களாதேஷ் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் இம்ருல் கெய்ஸ் நீக்கப்பட்டுள்ளார். அதன்படி அவருக்கு பதிலாக மொசாடிக் ஹொசைன் அணியில் இணைத்துக் கொள்ளப்படுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது. மும்பை ஜிம்கானா மைதானத்தில் இந்திய ஏ அணியுடனான முன்னோடிப் பயிற்சி போட்டியில் ஈடுபட்டு வந்தபோது, அவரது இடது தொடையில் ஏற்பட்ட உபாதை காரணமாகவே இவர் போட்டியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். இதேபோன்று கடந்த மாதம் கிறைஸ்ட்சேர்ச்சில் நடைபெற்ற நியூஸிலாந்திற்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் போதும் இம்ருல் கெய்ஸ் உபாதைக்கு உள்ளான நிலையில், அவருக்கு பதிலாக சவுமியா சர்கார் இணைத்துக் கொள்ளப்பட்டார். அதன்படி கெய்ஸிற்கு பதிலாக முதன்முறையாக ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய சவுமியா சர்கார், முதல் இன்னிங்சில் 86 ஓட்டங்களும், 2ஆவது இன்னிங்சில் 36 ஓட்டங்களையும் பெற்று அணிக்கு பலம் சேர்த்திருந்தார். இந்நிலையில், இந்தியாவிற்கு எதிரான போட்டியிலும் சவுமியா சர்கார் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறங்கவுள்ளார்.

### ஐ.பி.எல் ஏலம்:
## அஞ்சலோ மெத்யூஸின் நிர்ணய விலை 2 கோடி!




ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிக்கான வீரர்கள் ஏலத்தில் இலங்கை அணியின் தலைவர் அஞ்சலோ மெத்தியூஸ் உட்பட 7 வீரர்களின் அடிப்படை விலை 2 இலட்சத்து 98 ஆயிரம் அமெரிக்க டொலராக, அதாவது இந்திய ரூபாவில் 2 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (இலங்கை பெறுமதி நாலரை கோடி) நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 10ஆவது ஐ.பி.எல். டி20 கிரிக்கெட் போட்டி இந்தியாவில் ஏப்ரல் 6ஆம் திகதி தொடங்குகிறது. இந்த போட்டிக்கான வீரர்கள் ஏலம் பெங்களூருவில் எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இம்முறை ஐ.பி.எல். போட்டிக்கான ஏலத்தில் பங்கேற்க மொத்தம் 799 வீரர்கள் தங்கள் பெயர்களை பதிவு செய்து இருந்தனர். 8 அணிகளும் தங்களுக்கு விருப்பமான வீரர்களின் பெயர் பட்டியலை தாக்கல் செய்துள்ளனர். இதில் எந்த அணிகளும் விரும்பி கேட்கப்படாத 8 நாடுகளைச் சேர்ந்த 160 வீரர்களின் பெயர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளது. தற்போது 639 வீரர்கள் பட்டியலில் உள்ளனர். இந்திய வீரர்களில் வேகப்பந்து வீச்சாளர் இஷாந்த் ஷர்மாவின் அடிப்படை விலை ரூ. 2 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இது தான் போட்டி தொடருக்கான வீரர்களின் அதிகபட்ச அடிப்படை விலையாகும். இதேபோல் இங்கிலாந்து வீரர்கள் பென் ஸ்டோக்ஸ், கிறிஸ் வோக்ஸ், இயென் மோர்கன், இலங்கை அணியின் தலைவர் அஞ்சலோ மெத்யூஸ், அவுஸ்திரேலிய வேகப்பந்துவீச்சாளர்கள் மிட்செல் ஜொன்சன், மற்றும் பெட் கம்மின்ஸ் ஆகியோருக்கும் அடிப்படை விலையாக ரூ. 2 கோடி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இதற்கு அடுத்தபடியாக இங்கிலாந்து வீரர் பேர்ஸ்டோ, நியூசிலாந்து வீரர் டிரென்ட் போல்ட், அவுஸ்திரேலிய வீரர்கள் பிராட் ஹெடின், நெதன் லயன், தென்னாபிரிக்க வீரர் கைல் அப்போட், மேகிந்திய வீரர் ஜேசன் ஹோல்டர் ஆகியோரின் அடிப்படை விலை ரூ.1 கோடியாக நிர்ணயம் செய்யப்பட்டு இருக்கிறது. சர்வதேச போட்டியில் விளையாடிய 24 இந்திய வீரர்களின் அடிப்படை விலையாக ரூ.30 இலட்சம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஐ.பி.எல். அணிகள் வீரர்களை தேர்வு செய்ய மொத்தம் ரூ.143.33 கோடியை செலவிட முடியும். ஒவ்வொரு அணியிலும் அதிகபட்சமாக 9 வெளிநாட்டு வீரர்கள் உட்பட 27 பேர் இடம் பெறலாம். இந்த சீசனில் மொத்தம் 28 வெளிநாட்டுக்காரர்கள் உட்பட 76 வீரர்கள் ஏலத்தில் எடுக்கப்படுகிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மகளிர் உலகக்கிண்ண தகுதிகாண் போட்டிகள்:
## இலங்கை அணியை வீழ்த்தி இந்தியாவுக்கு முதல் வெற்றி




பீ.எப்.எம் நிஷாட்

மகளிர் உலகக்கிண்ண போட்டிகளின் தகுதிகான் போட்டிகள் நேற்று கொழும்பில் ஆரம்பமாகின. இதன்படி ஏ பிரிவுக்கான முதலாவது போட்டி கொழும்பு பி. சரவணமுத்து மைதானத்தில் இடம்பெற்றதுடன், இலங்கை மற்றும் இந்திய மகளிர் அணிகள் மோதின.

போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய மகளிர் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதற்கமைய நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 259 ஓட்டங்களை இந்திய மகளிர் அணி பெற்றுக் கொண்டது. இந்திய அணி சார்பாக தீப்தி ஷர்மா 54 ஓட்டங்களையும், 19 வயதான தேவிகா வைத்யா 89 ஓட்டங்களையும், அணியின் தலைவி மிதாலி ராஜ் 70 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக்கொண்டனர். பந்துவீச்சில் இலங்கை சார்பாக, உதேஷிகா ப்ரபோதினி 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இந்நிலையில் 260 என்ற ஓட்ட இலக்கை நோக்கி களமிறங்கிய இலங்கை மகளிர் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 145 ஓட்டங்களைப் பெற்று 114 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. பந்துவீச்சில் எக்தா பிஸ்த் மற்றும் ராஜேஸ்வரி தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இதேவேளை, பி பிரிவில் தென்னாபிரிக்க மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான போட்டி கொழும்பு என்.சி.சி மைதானத்தில் நடைபெற்றது. போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க மகளிர் அணி முதலில் துடுப்பெடுத்தாடி, 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து258 ஓட்டங்களை தென்னாபிரிக்க மகளிர் அணி பெற்றுக்கொண்டது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் மகளிர் அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 195 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது.

இதனிடையே, ஏ பிரிவின் இரண்டாவது போட்டி அயர்லாந்து மற்றும் சிம்பாப்வே மகளிர் அணிகளுக்கிடையே கொழும்பு எம். ஸி. ஏ மைதானத்தில் இடம்பெற்றது. போட்டியில் முதலில் துடுப்பாடிய அயர்லாந்து அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 237 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே மகளிர் அணி 38 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 118 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. இதேவேளை, பிரிவு பி இல் பங்களாதேஷ் மற்றும் பப்புவா நியூ கினியா மகளிர் அணிகளுக்கு இடையிலான போட்டி கொழும்பு சி.சி.சி மைதானத்தில் இடம்பெறுகின்றது. போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் மகளிர் அணி முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 215 ஓட்டங்களை பங்களாதேஷ் மகளிர் அணி பெற்றுக்கொண்டது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பப்புவா அணி 32 ஓவர்களில் 97 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியைத் தழுவியது.




விளையாட்டு மற்றும் உடல் ஆரோக்கிய விருத்தி தேசிய வாரத்தை முன்னிட்டு சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் சைக்கிள் ஓட்டப்போட்டி நேற்றுமுன்தினம் (06) காலை இடம்பெற்றது. சாய்ந்தமருது பிரதேச செயலாளர் ஐ.எம்.ஹனீபா போட்டியினை ஆரம்பித்து வைப்பதனையும், போட்டியில் முதலாம், 2ஆம், 3ஆம், இடங்களைப் இடம்பெற்ற உத்தியோகத்தர்களாக முறையே திறன்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.இஸ்ஸதீன், முகாமைத்துவ உதவியாளர் எம்.ஏ.எம்.ஜிப்ரி, சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.சாஜித் ஆகியோருக்கு பிரதேச செயலக கணக்காளர் ஏ.எல்.எம்.நஜிமுதீன் வாழ்த்து தெரிவிப்பதையும் காணலாம். (றியாத் ஏ மஜீத்)





மருதானை ஸாஹிராக் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி கடந்த வாரம் பாடசாலை மைதானத்தில் காடசாலையின் அதிபர் றிஸ்வி மரைக்கார் தலைமையில் இடம் பெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக முன்னாள் மாணவத் தலைவர் ஆனந்த பரணகேயும் கௌரவ விருந்தினராக பழைய மாணவர் ஸஹீர் மர்சூக், சங்கத்தின் தலைவர் பௌசுல் ஹமீட், செயலாளர் றிஷ்வி நியாஸ், பிரதி அதிபர் ஆனந்த பொன்னப்பெரும, விளையாட்டுக் குழுவின் தலைவர் அலவி முக்தார் உள்ளிட்ட பலர் கலந்து சிறப்பித்தனர். இதன்போது கோர்டோவா இல்லம் 178 புள்ளிகளைப் பெற்று சம்பியன் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. (ஏ.எஸ்.எம்.ஜாவித்)

## சம்பத்தின் சாதனை சதம்: இலங்கை அபாரம்

இந்தியாவில் இடம்பெற்று வரும் இருபதுக்கு 20 ஓவர் பார்வையற்றோருக்கான உலக கிண்ண போட்டியில் அதிகளவு சதங்களைப் பெற்று இலங்கை வீரர் சுரங்க சம்பத் புதிய சாதனை படைத்தார். இப்போட்டித் தொடரில் 7 போட்டிகளில் பங்குபற்றிய சுரங்க சம்பத், 5 சதங்களைக் குவித்து புதிய உலக சாதனையை நிகழ்த்தினார். அவுஸ்திரேலிய அணிக்கெதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற இப்போட்டியில் இலங்கை அணி 8 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. போட்டியில்



முதலில் துடுப்பாடிய அவுஸ்திரேலிய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கட்டுக்களை மாத்திரம் இழந்து 174 ஓட்டங்களை பெற்றது. 175 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பாடிய இலங்கை அணி 20 ஓவர்கள் நிறைவில் 2 விக்கட்டுக்களை இழந்து வெற்றி இலங்கை அடைந்தது. இலங்கை பார்வையற்றோர் அணி இது வரை 7 போட்டிகளில் கலந்து கொண்டு அதில் 5 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளது. இதன்படி இலங்கை அணி 15 புள்ளிகளை பெற்று புள்ளி பட்டியலில் 3ஆம் இடத்தில் உள்ளது. இதேவேளை இலங்கை மற்றம் வங்கதேச அணிகளுக்கிடையிலான போட்டி இன்று நடைபெறவுள்ளது.

## தம்புள்ளை கிரிக்கெட் மைதான பணியாளர்கள் போராட்டம்





பீ.எப்.எம் நிஷாட்

தம்புள்ளை சர்வதேச கிரிக்கெட் மைதானப் பணியாளர்கள் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். மைதானத்தின் பார்வையாளர்கள் அரங்கின் கூரையின் மீதேறி இந்த உணவு தவிர்ப்பு போராட்டத்தில் அவர்கள் நேற்று முற்பகல் முதல் ஈடுபட்டு வருகின்றனர். ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் 11 பணியாளர்களால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 10 வருடங்களாக தாம் பணியாற்றுகின்றபோதும், தமது சேவையை நிரந்தரமானதாக்க இலங்கை கிரிக்கெட் நிறுவனம் முன்வரவில்லை என அவர்கள் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில், தமது பணியை நிரந்தரமாக்கும் வரை உணவு தவிர்ப்பு போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை என தம்புள்ளை விளையாட்டு மைதான பணியாளர்கள் தெரிவித்துள்ளனர். எனினும், குறித்த விடயம் தொடர்பில் விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகரவிடம் வினவியபோது, குறித்த பணியாளர்களை நிரந்தரமாக்குவதற்கான ஆலோசனைகளை இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துக்கு தாம் வழங்கியுள்ளதாக அமைச்சர் கூறினார்.

## உலக தடகளத்தில் ரஷ்யாவுக்கு தடை



உலக தடகள சம்பியன்ஷிப் தொடரில் ரஷ்ய நட்சத்திரங்கள் பங்கேற்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ரஷ்ய விளையாட்டு நட்சத்திரங்கள் ஊக்கமருந்து பயன்படுத்த, அந்நாட்டு அரசே ஆதரவாக இருப்பது அம்பலமானது. இதனையடுத்து, ரஷ்யாவுக்கு போட்டிகளில் பங்கேற்க கடந்த 2015 நவம்பரில் 15 மாத தடை விதிக்கப்பட்டது. இதனால் ரியோ ஒலிம்பிக்கில் ரஷ்ய தடகள வீரர்கள் பங்கேற்க முடியாமல் போனது. மற்ற வீரர், வீராங்கனைகள் ஊக்கமருந்து சோதனைக்குப்பின் அனுமதிக்கப்பட்டனர். இந்நிலையில், மொனாகோவில் நடைபெற்ற சர்வதேச தடகள கூட்டமைப்பின் கூட்டத்தில் ரஷ்யாவின் தடையை எதிர்வரும் நவம்பர் வரை நீடிக்க முடிவு செய்யப்பட்டது. இதனால், லண்டனில் (ஆகஸ்ட் 4-13 ) நடைபெறவுள்ள உலக தடகள சம்பியன்ஷிப்பில் ரஷ்ய வீரர்கள் பங்கேற்க முடியாது.





இலங்கையின் 69ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு அட்டாளைச்சேனை ஹீரோஸ் விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்த மரதன் ஓட்டப்போட்டி கடந்த சனிக்கிழமை அட்டாளைச்சேனை மருதையடி பிரதான வீதியில் நடைபெற்றது. ஹீரோஸ் விளையாட்டுக் கழகத்தின் தலைவரும், சிரேஷ்ட விளையாட்டு வீரருமான ஏ.எச்.ஹம்சா சனூஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.எல்.அப்துல் றசீட் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன், கௌரவ அதிதிகளாக அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் ஐ.எம்.ஹனீபா, அட்டாளைச்சேனை வைத்தியசாலையின் வைத்தியப் பொறுப்பதிகாரி டாக்டர் யு.எல்.எம்.வபா, அட்டாளைச்சேனை ஆயுர்வேத தள வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் கே.எல்.நக்பர், விளையாட்டு உத்தியோகத்தர் ஏ.எம்.எம்.றஸீன் ஆகியோரும் கலந்து கொண்டனர். இப்போட்டியில் முதலாமிடத்தை எம்.எல்.எம்.சஜீனாஸ் ( சுப்பர் சொனிக் விளையாட்டுக் கழகம்), இரண்டாமிடம் எம்.சரோத் (இலவன் ஸ்டார் விளையாட்டுக் கழகம்), மூன்றாமிடம் எம்.ஐ.எம்.அக்ரம், (சுப்பர் சொனிக் விளையாட்டுக் கழகம்) ஆகியோர் பெற்றுக்கொண்டனர். இதில் முதல் 6 இடங்களைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு கிண்ணங்களும் ஏனைய 7 இடங்களைப் பெற்றவர்களுக்கு ஆறுதல் பரிசும் வழங்கி வைக்கப்பட்டது. (எஸ்.எம்.அறூஸ்)

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 08TH FEBRUARY 2017